

# சக்தி

## மாத வெளியீடு

*

பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| புதிய போராட்டம் | தலையங்கம் | 1 |
| காலச் சூழல் | குறிப்புகள் | 4 |
| வெற்றி முடிவு | தி. ஜ. ர. | 6 |
| ரேடார்-ஒரு மாயக்கருவி | அங்கப்பன் | 9 |
| புத்தகம் உருவாகும் கதை | அன்வின் | 14 |
| பாரதியார் பிறந்த காலம் | வ. ரா. | 21 |
| காந்தி பிறந்தான் | சுரபி | 25 |
| உப்பு | மு. அருணாசலம் | 26 |
| செய்வதெப்படி? | மகாத்மா காந்தி | 29 |
| நீதிபதி தீர்ப்பு | உத்திரன் | 32 |
| படங்கள் | | 37 - 44 |
| ஓர் அரிய பாடசாலை | சுப. நாராயணன் | 45 |
| சுகுணி | காளிதாஸ் மேகானி | 50 |
| அன்னி பெஸண்ட் | கோவை அய்யாமுத்து | 61 |
| கிழவி மனம் | ரஜனி | 71 |
| புத்தக உலகம் | மதிப்புரை | 78 |


*

அணா 8


பார்த்திப௵ புரட்டாசி௴
மலர்: 12 இதழ்: 6


18 NOV 1946

88853



REGD. No 1506
ASOKA
அசோகா
சுகந்த பாக்குத்தூள்
எம். கே. கிருஷ்ண செட்டி அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்


நாகரீகமுள்ள
ஆடைகளுக்கு
16 NOV 1945
S.R.B. குப்புசாமி அய்யர் & ஸன்
FORMERLY
S.R. பாலுசாமி அய்யர்
& ஸன்ஸ்
83, நைனியப்பநாயக்கன் தெரு
(போன் 3506) P.T. மதறஸ்,
230, கீழமாரெட் வீதி,
(போன் 36) மதுரை.

# பாப்பா

மாதப் பத்திரிகை

# தீபாவளி

## மலர்

# 1945

குழந்தைகள் மனம் களிக்கச் செய்யும்

- அருமையான கதைகள்
- அழகான சித்திரங்கள்
- மதுரமான பாடல்கள்
- வேடிக்கை, விநோதங்கள்
- கண் குளிரும் வர்ணப் படங்கள்
- அறிவு விளக்கக் கட்டுரைகள்

200 பக்கங்கள் விலை 1-8-0

## பாப்பா பத்திரிகாலயம்

ராயவரம் : : புதுக்கோட்டை ஸ்டேட்

முன்னதாகப் பணம் அனுப்பி உங்கள்
பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

காந்தி ஜயந்தி வெளியீடு

# ... என் சரிதம் ...

— சுருக்கம் —

மகாத்மா காந்தி

✲

காந்தியடிகளின் தூய வாழ்க்கை, அவருடைய கபடமற்ற எளிமை, அளவற்ற அன்பு இவை ஆத்ம சரித்திரத்தில் மிளிர்கின்றன. மகாதேவ தேசாய் இந்த நீண்ட சரித்திரத்தைச் சுருக்கித் தக்கபடி பதிப்பித்திருக்கிறார். ஒவ்வொருவரும் படித்து மகிழ வேண்டிய அரிய தத்துவங்கள் அடங்கிய அழகிய நூல். ஸஸ்தா ஸாஹித்ய மண்டலத்தாரின் அநுமதிபெற்று வெளிவருகிறது. கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்த்தது.

[அக்டோபர் 31-ஆம் தேதிக்குள் ஆர்டர் செய்பவர்களுக்குத் தபாற் செலவு இனாம்.]

**அல்லயன்ஸ் கம்பெனி**

மயிலாப்பூர் :: சென்னை




நைஜாம் சமஸ்தானம், ஆந்திர தேசம் தமிழ் நாடுகளுக்கு ஏஜண்டுகள்:

ஸீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ்

செகண்ட்ராபாத் — பெஜவாடா — மதுரை

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி
## லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

| | | |
|---|---|---|
| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல் | நம்பர் 80 வரை நூல்கள் |

●

நாங்கள் சப்ளே செய்வது:

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறுர்கள்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்

பார்த்திப
மலர் 12

# சக்தி

புரட்டாசி
இதழ் 6

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

## புதிய போராட்டம்

மறுபடியும் புதிய போராட்டத்துக்கு முஸ்தீப்பு-இதுதான் இன்றைய இந்திய அரசியல் நிலைமை. பிரிட்டனில் அமைந்த புதிய தொழிற்கட்சி மந்திரிசபை, இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்க்க என்ன திட்டத்தைக் கைக்கொள்ளப் போகிறது என்பதை வைசிராய் வேவலும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஆட்லியும் அறிவித்து விட்டார்கள். அதன் பின்பு, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடிச் சில முடிவுகள் செய்துள்ளது.

புதிய பிரிட்டிஷ் சர்க்காரின் திட்டம் என்ன? சுருக்கமாய்ச் சொன்னால், அது இது தான்:

(1) 1946-ஆம் வருஷ மார்ச்சு ஏப்பிரல் மாதவாக்கில், இந்தியா வெங்கும் மாகாணச் சட்ட சபைகளுக்குப் பொதுத் தேர்தல்கள் நடக்கும்.

(2) மாகாணச் சட்ட சபைகளுக்குப் பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்ததும், முக்கிய இந்திய அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்ற வைசிராய் நிர்வாக சபை ஒன்று அமைக்க, வைசிராய் முன்வருவார்.

(3) மாகாணச் சட்ட சபைகளின் பிரதிநிதிகள், சுதேச சமஸ்தானப் பிரதிநிதிகள் ஆகியவர்களை அழைத்து, இந்திய வைசிராய் இந்திய அரசியல் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்துவார். இந்திய அரசியல் நிர்ணய சபை அமைப்பதற்கு, கிரிப்ஸ் திட்டம் சரியா அல்லது வேறு மாற்றுத் திட்டம் ஏதாவது வேண்டுமா என்பதை, அந்தப் பிரதிநிதிகளிடம் ஆலோசித்து, வைசிராய் தெரிந்து கொள்வார். இந்தப் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாய் முடிந்தால், அரசியல் நிர்ணய சபை அமைக்க ஏற்பாடுகள் நடக்கும்.

(4) இந்தியா சுய ஆட்சி பெறுவதானால், பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் ஓர் உடன்படிக்கை வேண்டும் அல்லவா? அந்த உடன்படிக்கையின் ஷரத்துகளை, பிரிட்டிஷ் சர்க்கார் இப்போதே தயாரித்து வருகிறார்கள். இந்த உடன்படிக்கை, அரசியல் நிர்ணய சபையினருடன் பேரம் செய்யப்படும். இந்த உடன்படிக்கையின் ஷரத்து எதுவும் இந்திய நலன்களுக்கு முரண்பாடாயிருக்காது என்று ஆட்லி உறுதி கூறுகிறார்.

இந்தத் திட்டத்தின் மீது, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி தனது தீர்ப்பைக் கூறிவிட்டது. இது "தெளிவற்றது; போதுமானதல்ல; அதிருப்திகரமானது" என்பது தான் காரியக் கமிட்டியின் தீர்ப்பு. "பூரண சுதந்தரத்துக்குக் குறைந்த எது

வும் இந்தியாவுக்குத் திருப்தி தராது'' என்று காங்கிரஸ் கமிட்டி பிரகடனம் செய்கிறது. என்றாலும், வரும் தேர்தல்களில் போட்டி யிடுவ தென்றே, அது தீர்மானம் செய்திருக்கிறது. இந்தத் தீர்மானம் கமிட்டியில் விவாதிக்கப் படும்போது, கம்யூனிஸ்ட் தோழர்களின் சார்பாக டாக்டர் அஷ்ராப் ஒரு திருத்தம் பிரேரித்தார். முஸ்லீம் லீக்கோடு சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் திருத்தம். "இனிமேல் லீக்குக்கு ஒரு மைல் அருகே கூடப்போகமாட்டோம். முஸ்லீம் மகா ஜனங்களின் ஆதரவைத்தான் பெற முயற்சிப்போம். அவர்களின் ஆதரவு நமக்கு ஏராளமாய்க் கிடைத்தும் வருகிறது'' என்பதாக, பண்டித ஜவஹர் பதிலளித்தார். கமிட்டியார், ஒரே முகமாக, அஷ்ராப் திருத்தத்தை நிராகரித்து விட்டார்கள்.

இனி நாம் இந்த நிகழ்ச்சிகளைப் பரிசீலனை செய்து பார்ப்போம். முதலாவதாக, பிரிட்டிஷ் சர்க்காரின் திட்டம், இந்தியப் பிரச்னைக்கு உடனடியான பரிகாரம் காண்பதல்ல. தேர்தலுக்குப் பின்பு, ஜனப் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படும். ஆனால், அந்தப் பேச்சு வார்த்தைகள் எந்த முறையில் நடக்கும் என்பதும், லின்லித்கோ நாடகம், கிரிப்ஸ் நாடகம், சிம்லா நாடகங்களைப்போல் இந்தப் பேச்சு வார்த்தைகளும் முறிவடையாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்பதும் தெளிவாக்கப்பட வில்லை. ஆகவே, இந்த ஏற்பாடும் காலங்கடத்தும் ஒரு தந்திரமாகவே முடியுமானால், நாம் ஆச்சரியப்படுவதற் கில்லை. இப்படியே காலங் கடத்திக்கொண் டிருந்தால், பிற்போக்காளரும் வகுப்புவாதிகளும் மேலும் மேலும் வலுப் பெற்று, பிரிட்டனுக்குப் பின்பலமாய் நின்று, என்றென்றும் இந்தியாவை அடிமைத்தனத்தில் இருத்திவைக்க உதவுவார்கள் என்றுதான், புதிய பிரிட்டிஷ் சர்க்காரும் நினைக்கிறதோ என்று நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் பிரதிநிதிகளுடன் நடத்தும் பேச்சிலே, பெரும்பான்மையோர் முடிவுக்குக் கட்டுப்பட்டு அதன்படிதான் கண்டிப்பாய்க் காரியம் செய்வோம் என்றோ, அல்லது அதுபோன்ற வேறு ஏதாவதோ ஓர் உறுதி மொழியை, பிரிட்டிஷ் சர்க்கார் ஏன் அளிக்கக் கூடாது?

இந்த உறுதி மொழி கிடைக்காவிட்டாலும், தேர்தல்களில் போட்டியிடக் காங்கிரஸ் முடிவு செய்திருப்பது, மீண்டும் போராடுவதற்காகத் தான். போராட்டத்தை, ஒரு பக்கம் பிரிட்டிஷ் சர்க்காருடனும், மறுபக்கம், முஸ்லீம் லீக் உள்பட சகல வகுப்புவாதிகள், பிற்போக்காளர்களுடனுமே நடத்தியாக வேண்டும். முஸ்லீம் லீக்குடன் காங்கிரஸ் சமரசம் செய்துகொள்ள வேண்டு மென்பது இனி அர்த்தமற்ற பேச்சாகும். ஒரு முறை யல்ல, பல முறை ஜின்னா லீக்குடன் காங்கிரஸ் தலைவர்கள் சமரசம் பேசிப் பார்த்தாயிற்று. ஒவ்வொரு தடவையும் அவர் வீண் பிடிவாதமே காட்டி வந்திருக்கிறார். காங்கிரஸிலிருந்து விலகி, அதையே எதிர்த்து, மிகப் பெரும்பாலான காங்கிரஸ் வாதிகளின் அதிருப்தியையும் சம்பாதித்துக்கொண்டு, காந்திஜியையும் இணக்கி, ஜின்னாவுடன் அவரைப்

பாக்கிஸ்தான் சமரசம் பேசச் செய்த ராஜாஜியே புளிப்பு விட்டவராய், இன்று, "பாகிஸ்தானை நிராகரிப்பவர் ஜின்னாவே. எந்த விதச் சமரசத்துக்கும் தயாரா யில்லாதவர் அவர்தான்" என்று சொல்லும்போது, மற்றவர் காங்கிரசைப் பழி கூறுவது அநியாய அபாண்டமாகும். தெரிந்தோ தெரியாமலோ, ஜின்னாவின் லீக் பிரிட்டனின் கையாளாக நடந்து கொள்ளும்போது, அதனோடு சமரசம் பேசச் செல்வதே தேசத்துக்குக் கேடாகும். ஆகையால்தான், இனி லீக்குடன் பேரம் பேசுவதில்லை, முஸ்லீம் மகா ஜனங்களின் ஆதரவையே நாடுவதென்று காங்கிரஸ் தலைவர்கள் உறுதி கொண்டு விட்டார்கள்.

காங்கிரஸ் இந்த நிலைமையிலே தேர்தலில் இறங்குகிறது. தேர்தலில் அது அமோகமான வெற்றி பெறவேண்டும், பிற்போக்காளரெல்லாம், வகுப்புவாதிகளெல்லாம், முறியடிக்கப் படவேண்டும். அப்போதுதான், பிரிட்டிஷ் சர்க்கார் மீண்டும் மழுப்பல் நாடகத்தை நடத்த முடியாத நிலைமை ஏற்படும். அந்த நிலைமையை உண்டாக்கும் வகையில், காங்கிரஸ் இணையற்ற வெற்றி பெறச் செய்ய, தேசீய வாதிகள் அனைவரும் இன்று முதலே முழு முயற்சியும் எடுத்துக் கொள்வது அவசிய மாகும்.

*

## சிறுமியின் கேள்வி

சாந்தா ராமராவ் என்பவள் அமெரிக்காவில் வசிக்கிறாள். சிறு வயது முதலே பிரிட்டனில் படித்து, பி. ஏ., பட்டம் பெற்றவள். இந்தியாவைப்பற்றி அவள் இப்போது ஒரு புத்தகம் எழுதியிருக்கிறாள். 'பி. எம்.' என்ற அமெரிக்கப் பத்திரிகையின் பிரதிநிதி அவளைப் பேட்டி கண்டு இந்தியாவைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டார். அவள் சொன்ன ஒரு பதில் இது :

"ஒரு நாள் மாமரோனெக் என்னும் இடத்தில் உள்ள பள்ளிக்கூடத்தைப் பார்க்கப் போனேன். ஒரு சிறுமி எழுந்தாள். 'இந்தியாவை யார் ஆளுகிறார்கள்?' என்று என்னைக் கேட்டாள். 'பிரிட்டிஷ்காரர்கள்' என்றேன். 'ஏன்?' என்று கேட்டாள் சிறுமி. நான் பதில் சொல்ல முடியாமல் விழித்தேன்."

## ஆட்சேபம் இல்லை

காலம் மாறி வருகிறது. கல்கத்தாவில் வசிக்கும் ஒரு ஜமீன்தாரின் இரண்டு மருமகன்கள் கம்யூனிஸ்டுகளாய் மாறி விட்டார்கள்.

அவர்களில் ஒருவரை, "நீங்கள் இப்படித் தீவிர சமதர்மிகளாய்த் திரும்பிவிட்டதை, உங்கள் மாமன் ஆட்சேபிக்க வில்லையா?" என்று நான் கேட்டேன்.

"ஓ! அவர் ஆட்சேபிக்க வில்லை, அவருடைய சொத்தில் எங்களுக்கு உரிய பங்கை நாங்கள் வேண்டாமென்று அடியோடு விட்டுக் கொடுத்து விட்டோம். கிழவனார் இப்போது தம் சொத்துக்குச் சர்வாதிகாரியாகிவிட்டார்" என்று அவர் பதில் அளித்தார்.

—பம்பாய்க் கிரானிகள் நிருபர்.

# காலச்சுழல்

**ராஜாஜி தலைமை:** ஒருநாள் காங்கிரஸினின்றும் மாறுபட்டு ராஜாஜி விலகிக் கொண்டார். பாகிஸ்தான் பிரசாரம் செய்தார். ஜின்னாவுடன் சமரசம் வேண்டுமென்றார். ராஜாஜியின் அபிப்பிராயம் நமக்கு உடன்பாடில்லை. பெரும்பாலோரைப் போலவே, நாமும் அதைக் கண்டித்தோம். ஆனால், ராஜாஜியின் அந்தரங்க சுத்தியையோ, தேசபக்தியையோ, அபரிமிதமான திறமையையோ நாம் என்றும் சந்தேகித்ததில்லை. ராஜாஜியின் நிலைமை இன்று அடியோடு மாறியுள்ளது. அவருக்கும் காங்கிரஸுக்கும் வேற்றுமைக்கு ஆதாரமாயிருந்த விஷயம் இன்று தேய்ந்தொழிந்து விட்டது. ராஜாஜி திரும்பவும் காங்கிரஸில் சேர விரும்புவதாய், ராஷ்டிரபதி ஆஜாதுக்கு எழுதிக் கொண்டார். ஆஜாது பெருந்தன்மையோடு அவரை அங்கீகரித்து வரவேற்றார். ஆனால், திருச்செங்கோடு காங்கிரஸ் கமிட்டியார், ராஜாஜியைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பழைய ஸ்தானத்துக்குத் தேர்ந்தெடுத்தார்கள். இது விதிகளின்படி செல்லாது என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரும் நிர்வாகக் கமிட்டியாரும் முடிவு கூறிவிட்டார்கள். விதிகளின்படி, முடிவு சரியாயிருக்கலாம். ஆனால், ராஜாஜி போன்ற பெருந்தலைவரின் தலைமை இன்று தமிழ்நாட்டுக்கு மிகமிகத் தேவையாகும். அவர் விஷயத்தில் இம்மாதிரி ஒரு சச்சரவைக் கிளப்புவது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் அரசியலுக்கே சீரழிவாய் முடியும். ராஜாஜி பக்தர்களும் சரி, எதிர்ப்பாளர்களும் சரி, பெருந்தன்மையோடும் சமரசத்துடனும் நடந்துகொண்டு, மீண்டும் தென்னிந்தியாவுக்கு ராஜாஜியின் திறமையான தலைமை கிடைக்கும்படிச் செய்வார்கள் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

**காங்கிரஸும் கம்யூனிஸ்டுகளும்:** கம்யூனிஸ்டுகள் மீது மூன்று புகார்கள்: (1) கம்யூனிஸ்டுகள் புலால் உண்ண வற்புறுத்தப்படுகிறார்கள்; (2) ஆண் பெண் ஒழுக்கத்தில் வரை முறையற்ற முறை கேட்டை அவர்கள் உபதேசித்தார்கள்; (3) சத்தியம், அஹிம்சை, காங்கிரஸ் இந்த மூன்றுக்கும் அவர்கள் விரோதமாயிருக்கிறார்கள். இவைதான் அந்தப் புகார்கள். இது சம்பந்தமாய் ஜோஷிக்கு மகாத்மாஜி எழுதினார். புகார்கள் சம்பந்தமான கடிதங்களை ஆராய்ந்து, புலாபாய் தீர்ப்புச் சொல்லட்டும் என்று ஒப்புக்கொண்டார் ஜோஷி. புலாபாயும் தீர்ப்புக் கூறியிருக்கிறார். முதல் இரண்டு புகார்களுக்கும் ஆதாரமேயில்லையென்று தேசாய் முடிவு சொல்லி விட்டார். மூன்றாவது புகார் சம்பந்தப்பட்ட மட்டில், 'சத்தியம் அஹிம்சை இரண்டிலும் காங்கிரஸ்காரரிலேயே எத்தனை பேருக்குப் பூரண நம்பிக்கை இருக்குமோ; நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஆனால், 1942 ஆகஸ்டு 9-ந் தேதிக்குப் பிறகு, காங்கிரஸின் அபிப்பிராயங்களுக்கும் கொள்கைகளுக்கும் விரோதமாய், கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தார்கள்' என்பது தேசாயின் முடிவு.


ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி
யாரோ! இவர்
யாரோ—பைரவி
N. 18270
எல்லா "எச். எம். வி"
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்
HIS MASTERS VOICE
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"
தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்,
டம்டம் - பம்பாய் - மதராஸ்
டில்லி - லாகூர்

# புதிய புத்தகம்

•

தமிழ் விருந்து : 2 0
ரா. பி. சேதுப்பிள்ளை

நாக கன்னிகை : 2 8
மாட்கோல்கர் எழுதிய நாவல், கா. ஸ்ரீ. ஸ்ரீ மொழிபெயர்ப்பு

கோதைத் தீவு : 2 0
வ. ரா. எழுதியது

புனர்ஜன்மம் : 3 0
'தமிலன்' எழுதிய நாவல்

ஒரே உலகம் : 5 0
வெண்டல் வில்கி எழுதியது தி. ஜ. ர. மொழிபெயர்ப்பு

தபால் செலவு தனி

## புத்தக நிலையம்
தெப்பக்குளம் : : திருச்சி

# சக்தி • வெளியீடுகள்

சக்தி காரியாலயத்திலிருந்து
வெளிவரும் நூல்களுக்கு
ஒவ்வொரு ஊரிலும் டெபாசிட்
கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

## சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : : சென்னை

இன்றும், கம்யூனிஸ்டுகளின் எழுத்தும் பேச்சும் காங்கிரஸைத் தாக்குபவையாய்த்தான் இருக்கின்றன. ஆகையால், அவர்கள் காங்கிரஸில் சேராதிருப்பதே நியாயம். சேர்வது தங்களுக்கும் காங்கிரஸுக்கும் தேசத்துக்குமே துரோகமாகும். அவர்களை விலக்குவதா வேண்டாமா என்ற பிரச்னையே யில்லை. அவர்களே விலகியிருப்பதுதான் நியாயமாகும்.

**மூவர் சதுரங்கம்:** லண்டனில் நடக்கும் ஐந்து அயல் நாட்டு மந்திரிகள் மகாநாடு முடியும் கட்டத்தில், வந்த செய்திகள் அவ்வளவு ரசமாயில்லை. ஹிட்லர் யுத்தத்தில் களப்பலியாய் விழுந்த பிரான்ஸ் சுதந்திரமடைந்து இந்த மகாநாட்டில் ஒரு வல்லரசாய்க் கலந்து கொண்டிருப்பது, உலக அற்புதங்களில் ஒன்று. அதுவும் சீனவும் மகாநாட்டில் வலுவாய்ப் பேச முடியாது. மற்ற நாடுகளான ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா இந்த மூன்றும் தான் சதுரங்கமாடிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்குள்ளே ஒற்றுமைகளைவிட வேற்றுமைகள் அதிகமாகி வருவதாகச் சொல்லப்படுகிறது. எது பற்றி வேற்றுமைகள்? அவை என்ன காரியத்தில் முனைந்திருக்கின்றன? ஐரோப்பாவிலும், பஸிபிக்கிலும் யாரார் ராணுவ கேந்திர ஸ்தானங்களை ஆக்கிரமித்துக் கொள்வது என்பது பற்றிய ராஜதந்திரப் போராட்டம் மேற்கண்ட மூன்று நாடுகளுக்குள்ளும் இப்போது நடக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது, அடுத்த யுத்தத்துக்கு இப்போதே முஸ்தீப்பு நடப்பது போல்தான் இருக்கிறது இந்தத் தகராறுகள். இப்படிச் சந்தேகத்தை வேராகக் கொண்ட சமாதான விருட்சம் எங்கேயாவது உருக்கொண்டு வளருமா, வளர்ந்தாலும் என்ன ரூபம் எடுக்கும் என்று யார் சொல்ல முடியும்?

**விடுதலையடைந்த சரத் பாபு:** சுபாஷ் பாபுவின் சகோதரர் சரத் சந்திர போஸ் விடுதலையடைந்தது தேச மெங்கும் சந்தோஷமளித்துள்ளது. சரத் பாபு வெளி வந்தது தொடங்கி, இந்திய அரசியல் பற்றிய சில விஷயங்களில் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இணையற்ற தியாகியான அவருடைய அபிப்பிராயங்களை, எவரும் மதித்துத்தான் ஆக வேண்டும். நடத்த யுத்தம் ஜனங்களின் யுத்தம் என்று கம்யூனிஸ்ட் தோழர்கள் சொல்வதை அவர் கண்டிக்கிறார். காந்திஜி அந்த யுத்தத்தில் நடுநிலைமை வகித்துக் காட்டிய வழியே சரியானது என்கிறார். பாகிஸ்தான் பிரிவினை இந்திய சுதந்தரத்துக்குக் கேடாகும் என்று கூறுகிறார். மகாத்மாஜியின் தலைமையையே எல்லாரும் பின்பற்ற வேண்டுமென்று உபதேசிக்கிறார். அஹிம்சா தர்மத்தில் மூர்க்கமான நம்பிக்கை தமக் கில்லையாயினும், அஹிம்சா தர்மப் போரின் மூலமே இந்தியர் சுயராஜ்யம் அடைய முடியும் என்று அவர் நம்புகிறார். சரத் பாபுவின் அபிப்பிராயங்கள், காங்கிரஸுக்குச் சிறந்த ஆதரவு தருகின்றன. வீணே வெவ்வேறு நோக்கங்களால் காங்கிரஸையும், காங்கிரஸ் தலைவர்களையும் பழிகூறிக் கொண்டிருப்போருக்கு, சரத் பாபு வார்த்தைகளைக் கவனிக்கும்படி சிபார்சு செய்கிறோம்.

# வெற்றி முடிவு

**தி. ஜ. ர.**

மங்களகரமான இந்த விஷயத்தைப் பற்றி எழுத ஆரம்பிக்கிறேன்; சனியன்! பக்கத்திலே ஒரு குழந்தை 'அசுக்கு' என்று தும்முகிறது. என்ன அநியாயம் இது! தற்காப்புச் சட்ட விதிகளின்படி, இந்தக் குழந்தையை உடனே சிறையில் போட்டால் என்ன என்று தோன்றுகிறது. யுத்தம் முடிந்தாலும், நல்லவேளையாக, நமது காருண்ய சர்க்கார் தற்காப்புச் சட்டங்களை யெல்லாம் ரத்து செய்யாதது, இந்த மாதிரிக் காரியங்களுக்காவது பயன் படலாம் அல்லவா? அது போகட்டும். நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், கொஞ்ச காலத்துக்கு முன், சென்னையில், ஒரு வெற்றி விழா நடந்ததே, அதைப்பற்றித்தான்.

என் சம்பந்தப்பட்ட மட்டில் எனக்கு ஒன்றும் வெற்றியும் தெரியவில்லை; தோல்வியும் தெரியவில்லை. ஆனாலும், என் குழந்தைகள் இரண்டும் என்னைப் படாப்பாடு படுத்தி, வெற்றி விழாவைப் பார்க்க அழைத்தன. என் ஒன்றுவிட்ட தம்பி, என்னென்னவோ சமாதானம் சொல்லிப் பார்த்தான். சிறுமி கேட்கிற வழியாயில்லை.

உலக யுத்தம் முடிந்துவிட்டது. 'அப்பாடா!' என்று ஒரு நாள் பெருமூச்சு விட்டோம். ஆனால், அடுத்த நிமிஷம் யோசித்துப் பார்க்கையில், என்ன தெரிகிறது? யுத்தம் வந்தது; யாரோ சில அரக்கர்களின் அக்கிரமம் தாங்காமல் வந்தது என்று எண்ணினோம். போயிற்று; போன பலன் என்ன? ஏதாவது தெரிகிறதா?

தம்பி சொன்னான்: "நீ சமர்த்தல்லவா? இந்தத் தடவை வேண்டாம். அடுத்த தடவை வெற்றி விழாவின்போது, நாம் கட்டாயம் போய்ப் பார்க்கலாம்."

"ஊஹூம். அடுத்த தடவை நம்மவனுக்குத்தான் வெற்றி கிடைக்குமென்று என்ன நிச்சயம்? இந்தத் தடவையே போய்ப் பார்த்தாக வேண்டும்" என்று சிறுமி பிடிவாதம் செய்தாள்.

என்னைத் தூக்கி வாரிப் போட்டது. முந்திய யுத்தம் 1919-ஆம் ௵ முடிவடைந்தபோது, இருபதே வருஷத்தில், நம் தலைமுறையிலேயே, 1939-ஆம் ௵ இன்னொரு யுத்தம் வரப்போகிறதென்று நான் நினைக்கவேயில்லை. என் சிறுமியோ அடுத்த யுத்தத்தின் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கூடச் சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விட்டாள். அசடு! அசடு!

அடுத்த யுத்தம் வரலாம்; வரத்தான் போகிறது என்றுகூட நான் ஒப்புக்கொள்ளத் தயார். ஆனாலும், வெற்றி மட்டில், ஊழிகாலம் வரையில் பிரிட்டிஷ்காரனுக்கே கிடைத்துக் கொண்டிருக்குமென்றுதான் நான் சொல்லுகிறேன். சொல்லுகிறேன், ஆனால் நினைக்கிறேனா என்று நீங்கள் கேட்கலாம். அது வேறு விஷயம். ஒவ்வொருவரும் என்னென்னவோதான் நினைக்கிறோம்; நினைத்தோம். அதைப் பற்றியெல்லாம் பிறர் கேட்டு முடியுமா? சொல்லுவதையும்

செய்வதையும் பற்றித்தான் பிறர் கேட்கலாம். அந்த இரண்டையும் நாம் திருந்தச் செய்வோம்; அதாவது, அகப்பட்டுக் கொள்ளாமல் என்று அர்த்தம்.

குழந்தைகளின் தொல்லை பொறுக்காமல், அவைகளை அழைத்துக் கொண்டு மவுண்ட் ரோட்டுக்குப் போனேம். கவர்னர் உருவத்தில், வெற்றி விழா ஊர்கோலம் போயிற்று. திரும்பி வந்தோம். "என் அப்பா, இவ்வளவுதானு?" என்று கேட்டது குழந்தை. "இவ்வளவுதான். வெற்றி, பிரசங்கப் பந்தலுக்குப் போய் விட்டது" என்று சொல்லிவிட்டு, குழந்தைகளைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, பத்திரமாய் வீடு திரும்பினேன்.

அதன்பின்பு, இந்த வெற்றியைப் பற்றி நானுந்தான் யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். எனக்கு இதன் அர்த்தம் புரியவேயில்லை. இந்த வெற்றி யார் வெற்றி? இதனல் ஏற்பட்ட - ஏற்படப்போகிற - பலன்கள் என்ன? ஆற அமரச் சிந்தித்துப் பார்த்தால், இந்த வெற்றி, டாங்கிகளின் வெற்றி; ஏரோப்பிளேன்களின் வெற்றி; சப்மரின்களின் வெற்றி; கடைசியாக, அணுக்குண்டின் வெற்றி - அவ்வளவுதானே! இல்லையா? இது ஏதோ ஜனநாயகத்தின் வெற்றி என்கிருர்கள். யார் ஜனநாயகத்தின் வெற்றி? பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் வெற்றி; அமெரிக்க ஜனநாயகத்தின் வெற்றி; ருஷ்ய ஜனநாயகத்தின் வெற்றி. பாக்கி நாடுகளின் சம்பந்தப்பட்டமட்டில், ஜனநாயக வால்களின் வெற்றி என்று வேண்டுமானல், சொல்லலாம்.

சில தினங்களுக்குமுன், இந்திய சர்க்காரின் பிரசார இலாக்காதார் வெளியிட்டுள்ள செய்தி சினிமா ஒன்றைப் பார்த்தேன். இந்திய மாதாவை ஒரு ஜப்பானியன் வந்து தாக்கி அலங்கோலம் செய்கிருன். இந்திய மாதாவின் பல புதல்வர்கள் உடனே யுத்தப் பயிற்சி பெற்று வீரர்களாகி, ஜப்பானியப் படையைப் பாய்ந்தடிக்கிருர்கள். ஜப்பானியக் கொடி பறந்த கழியிலேயிருந்து, அந்தக் கொடியைக் கீழே இறக்கித் தள்ளுகிருர்கள். 'ஜம்' என்று பிரிட்டிஷ் கொடியொன்றை, நம்முடைய உத்தம சகோதரர்கள், ஆகாயத்திலே ஏற்றிப் பறக்க விடுகிருர்கள். ஆஹா! என்ன அற்புதமான காட்சி! என்ன அற்புதமான தியாகம், வீரம், போங்கள்!

யுத்தம் முடிந்துவிட்டது; சமாதானம் வந்துவிட்டது. ஆனல், அதனல் கிடைத்த பலன் என்ன? ஸ்பென்ஸர் என்ற பழமையான ஆங்கிலக் கவிஞர் 'ப்ளென்ஹீம்' என்ற ஒரு சண்டையைப் பற்றிப் பாடியிருக்கிருர். அதில் ஒருவன் கேட்கிருன்: "ஆமாம்; அந்தச் சண்டையிலே வெற்றி கிடைத்ததாய்ச் சொல்கிருயே. அதனல் விளைந்த பலன் என்ன?" மற்றவன் இதற்குப் பதில் அளிக்கிருன்: "அது எனக்குச் சொல்லத் தெரியாது. ஆனல், அது மகா கீர்த்திகரமான ஒரு வெற்றி."

ஆம்; இந்த இரண்டாவது மகா யுத்தத்தில், ஐக்கிய நாடுகளின் தலைகள், கீர்த்திகரமான ஒரு வெற்றியைச் சம்பாதித்து விட்டன. ஆனல், ரூஸோ சொன்னதைப்போல, "மனிதன் சுதந்தரனய்ப் பிறக்கிருன்; ஆனல், எங்குமே கைவிலங்கோடு காணப்படுகிருன்." அந்தக் கை

விலங்கு எப்போது தறிபடும்? எதனால்? அணுக்குண்டினலா? ஆகாய விமானத்தினலா? மனித உள்ளம் அல்லவா பண்படவேண்டும்? அதற்கான முயற்சி எங்கேயாவது துளி நடக்கிறதா? இதைச் சொல்லுகிறவர்களை உலகம் பித்தர் என்றும், மூடர் என்றும், வழக்கறியாத வெகுளிகள் என்றும், செயலுக்கு மிரளும் கோழைகள் என்றும் சொல்லுகிறது.

ஊரைக் கழுதைப்புரளி பண்ணுவது ஜனநாயகம்; வெறுங் குண்டுக்கு முன்னே அணுக்குண்டை நீட்டுவது வீரம்; செப்படுவித்தை செய்து கொள்ளையடிப்பது வியாபாரம்; ஆபாச உணர்ச்சிகளை யெல்லாம் கிளறி விட்டுக் காசு பறிப்பது கலை- இதெல்லாம் எப்படியோ அப்படியேதான், தேசத்தைத் தேசம் அடிமைப் படுத்திப் பூட்டிய விலங்கை நன்ருய் இறுக்குவதும் சகோதரத் துவமாய் விளங்குகிறது. வெற்றியின் முடிவு என்ன? சிவபெருமான் கைலாயத்திலும், திருமால் பரமபதத்திலும் தான் இருக்கிருர்கள். உலகம் பழைய படியேதான் உருண்டுகொண்டிருக்கிறது. ஒரு மாறுதலையும் காணும்.

✱

### அதிகாரி பெருமை

ஓர் அதிகாரி ஒரு மிராசுதாரின் பண்ணைக்குள், யாரையும் கேட்காமல் விடுவிடு என்று நுழைந்தார்.

இவர் யாரென்றறியாத மிராசுதார், "தாங்கள் யார், ஐயா?" என்று கேட்டார்.

அதிகாரி "நான் யாரென்று இதிலே பாரும்" என்று சொல்லி, தம்முடைய பெயரும் உத்தியோகமும் அச்சிட்ட விஸிட்டிங் கார்டை நீட்டி, "என் இஷ்டப்பட்டபோது உம்முடைய பண்ணையைப் பார்வையிட எனக்கு அதிகாரம் உண்டு" என்று அகம்பாவமாய்ச் சொன்னர்.

"சரி, பாருங்கள்" என்ருர் மிராசுதார்.

அதிகாரி கம்பீரமாக, பண்ணைக்குள் நடமாடினர்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம், "ஐயா, ஐயோ! மிராசுதார் ஐயா! இப்படிக் கொஞ்சம் வாருங்களேன்" என்று அதிகாரி கத்துகிற சத்தம் கேட்டது.

மிராசுதார் போய்ப் பார்க்கையில், அதிகாரி தலைவிரி கோலமாய் ஓடுகிருர்; பண்ணையின் ஒரு மாடு அவரைத் துரத்திக்கொண்டிருக்கிறது.

"மாட்டை நிறுத்தமாட்டீர்களா?" என்று கெஞ்சினர் அதிகாரி.

"நான் எதற்கு? உங்கள் விஸிட்டிங் கார்டை அதனிடம் காட்டுங்கள், எஜமான்" என்ருர் மிராசுதார்.

### ஆணும் பெண்ணும்

பிரான்ஸில் புதிதாய் அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் ஆலோசனைச் சபையில் சமீபத்தில் ஒரு விவாதம் எழுந்தது. "பெண்களுக்கு நீதிபதி உத்தியோகம் வகிக்கும் உரிமை வேண்டும். பார்க்கப்போனல், வாழ்க்கையிலே ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் மிக்க அற்பமாகும்" என்று வாதித்தார் பிரஞ்சு எதிர்ப்பியக்கத் தலைவரான ராபெர்ட் பிமாண்ட்.

உடனே, ஆணும் பெண்ணுமான பல குரல்கள் "அந்த வித்தியாசத்துக்கு ஜே! (ஹுர்ரா)" என்று கோஷித்தன.

# ரேடார் - ஒரு மாயக்கருவி

வி. சு. அங்கப்பன்

இன்றிரவு நல்ல இருட்டு. அதோடு அடர்ந்த மூடுபனி. பிரெஞ்சுக் கரையிலிருந்து கிளம்பிய விமானங்கள் லண்டனை நோக்கிப் பாய்ந்து வருகின்றன. மொத்தம் நாற்பத்தெட்டு விமானங்கள். ஒவ்வொன்றிலும் சுமக்க முடியாத வெடிகுண்டுகள். அந்த விமானப் படைக்குத் தலைவன், பேப்பன் என்னும் ஒரு ஜெர்மானிய யுவன். அன்று அவனுக்கு அளவற்ற நம்பிக்கை. தன்வரவை எதிரி எப்படி அறிய முடியும்? அறிந்தாலும் எப்படித் தடுக்க முடியும்? அந்த மூடுபனியைத் தொளைப்பதற்கு எதிரியிடம் விளக்கேது?

தனக்கு வரவிருக்கும் படுநாசத்தை அறியாததுபோல், லண்டன் நகரம் தூங்கிக்கொண்டிருக்கிறது. அதை நினைக்கும் போது பேப்பனுக்கு 'ஐயோ பாவம்' என்றிருந்தது. அந்த நகருக்கு அழிவுதான் எவ்வளவு நிச்சயம், எவ்வளவு சமீபம்!

எந்த இருட்டிலும், எந்த மூடுபனியிலும் லண்டன் நகரை அறிந்து கொள்வதில் பேப்பனுக்குக் கஷ்டமில்லை. பறக்க வேண்டிய தூரத்தையும் திசையையும் கணக்கிட்டு, குறிதவறாமல் தன் இலக்கு மீது குண்டுகளை எறிய முடியும். பேப்பனின் நெஞ்சு படபட என்று அடித்துக் கொண்டது. இன்னும் சில விநாடிகளில் அவனுடைய வேலை முடிந்துவிடும். ஹிட்லர் தன்னைப் பாராட்டும் காட்சி அவன் கண்முன் வந்து வந்து மறைகிறது. ஆனால், இது என்ன சத்தம்? விமான எதிர்ப்பு வெடிகள் அல்லவா! ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு... விண்மீன் அறுந்து விழுவது போல் எரிந்து சுற்றிச் சுற்றிக் கீழே பாய்ந்தது பேப்பனின் விமானம்.

'ஐந்து, ஆறு, ஏழு, ...' என்று தொடர்ந்து எண்ணிக் கொண்டே போகிறாள் ஓர் ஆங்கில யுவதி. ஓர் அறையில் அவள் ஏதோ யந்திரத்தின் முன் உட்கார்ந்திருக்கிறாள். வட்டமான கண்ணாடி ஒன்று. அதில் ஒரு பச்சைக்கோடு கடியார முள் போல் சுற்றி வருகிறது. சில இடங்களில் அது 'பளிச்' 'பளீச்' என்று மின்னுகிறது. அதைப் பார்த்துக்கொண்டுதான் அவள் அம்மாதிரி எண்ணினாள்.

கடைசியாக, "ஐந்து விமானங்கள் தப்பித்துக்கொண்டுவிட்டன. நாற்பத்தெட்டு விமானங்களில் நாற்பத்துமூன்று பலி,- வாழ்க ஹிட்லர்!" என்று சொல்லிச் சிரிக்கிறாள் யுவதி.

1940-ஆம் வருஷம் பிரிட்டனிடம் அதிக விமானங்கள் இருக்கவில்லை. ஜெர்மனியிடம் அவை பன்மடங்கு அதிகமாய் இருந்தன. ஆனால், பிரிட்டனைத் தாக்கிய விமானங்கள் எல்லாம்

பூர்வகாலத்து முனீசுவரர்களுக்கு ஞான திருஷ்டி உண்டென்று சொல்வார்கள். ஆனால், அது கதை. இப்போது, இந்த யுத்தத்திலே ஐக்கிய நாட்டினர் உபயோகித்த ஒரு மாயக்கருவி, உண்மையிலே ஞான திருஷ்டியாகவே யிருக்கிறது. இந்த அபூர்வக் கருவியின் விவரங்களை இந்தக் கட்டுரையிலும், இது சம்பந்தமான படங்களை நடுப் பக்கங்களிலும் காணலாம்.

நாசமடைந்தன. இருட்டில் ஒளிந்து வந்தாலும், மேகத்தில் மறைந்து வந்தாலும், பிரிட்டிஷ் பீரங்கிகள் குறிதவருமல் சுட்டன. ஜெர்மன் விமானங்கள் எங்கே சென்ருலும், ஆங்கில விமானிகள் சொல்லிவைத்தாற் போல் எதிர்ப்பட்டார்கள். பிரிட்டன் மீது ஹிட்லர் தொடுத்த விமான யுத்தம் படுதோல்வியில் முடிந்தது.

பிரிட்டனைக் காப்பாற்றிய அந்த மாயக் கருவியைப் பற்றிய செய்தி, பரம ரகஸ்யமாக வைக்கப்பட்டு வந்தது. பொதுப்படையாக ஏதோ சில விவரங்களை நாம் அறிவோம். அதன் முழு வர்ணனையும் இன்னும் வெளிவரவில்லை. ஆனல், அதன் நுட்பத்தை மட்டில் நாம் அறிந்து கொள்வது சுலபம்.

ரேடார் உபயோகத்துக்கு வருவதற்குமுன், எதிரி விமானத்தை அறிவதற்குச் சோதனை விளக்குகளை உபயோகித்தார்கள். அதிகப் பிரகாசமான சோதனை விளக்குகளின் கிரணங்களை வானத்தில் செலுத்தி, அந்த வெளிச்சத்தில் தட்டுப்படும் விமானங்களை நோக்கி,பீரங்கியால்சுடுவார்கள். இதில் உள்ள சிரமம் வெளிப்படையாகும். எதிரி விமானிகள் வந்திருப்பதை யறிந்தால், ஆகாயம் முழுவதையும், ஒளிக்கிரணங்களைக்கொண்டு தேடி, பீரங்கிக் குண்டுகளால் நிரப்பவேண்டும். மூடுபனியோ, மேகங்களோ மறைக்கும்போது, இதுவும் சாத்தியமில்லை. ஆனல், இந்த ஒளிக் கிரணங்கள் செய்யும் வேலையை நாம் அறிந்து கொண்டால், ரேடாரின் ரகஸ்யத்தையும் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு விளக்கை ஏற்றுவதும், அதன் வெளிச்சம் பரவுவதும், ஒரே சமயத்தில் நடப்பதாக நாம் கருதுகிறோம். உண்மை அப்படியில்லை. சூரிய வெளிச்சம் பூமிக்கு வந்து சேர எட்டு நிமிஷங்கள் பிடிக்கிறது. ஒளிக் கிரணங்கள் விநாடிக்கு நூறுலட்சத்து எண்பத்தாருயிரம் மைல் பாய்கின்றன. சில நட்சத்திரங்களின் வெளிச்சம் பூமிக்கு வந்து சேர ஆயிரக் கணக்கான வருஷங்கள் கூட ஆகும். ஆகவே, ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலையில்தான் அந்த நட்சத்திரங்களை இன்று நாம் காண்கிறோம்! ஒளியானது அலை ரூபத்தில் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

எத்தனையோ விதமான அலைகளை நாம் பார்க்கிறோம். ஒரு கயிற்றை நிலத்தில் எறிந்துவிட்டு, அதன் ஒரு நுனியைக் கையில் பிடித்து இப்படியும் அப்படியுமாக ஆட்டினல், கயிறு பாம்பு போல் நெளிகிறதல்லவா? அலைகள் உண்டாகும் விதம் இதுதான். நிலத்தைச் சங்கிலி கொண்டு அளப்பதைப் பார்த்திருப்பீர்கள். சங்கிலி நிலத்தின் ஓரத்தில் நீளமாய்க் கிடக்கும். அதன் இரண்டு நுனியையும் இறுகக் கெட்டியாய்ப் பிடித்து இழுப்பார்கள். சங்கிலி விறைப்பாய் இருக்கும்போது, ஒருவர் தாம் பிடித்திருக்கும் நுனியை வெடுக் கென்று ஒருமுறை மேலும் கீழுமாக அசைப்பார். மாட்டின் திமில்போல ஒரு வளைவு சங்கிலியில் உண்டாகும். அந்த வளைவு அவர் பிடித்த நுனியிலிருந்து மறு நுனிக்கு வெகு அவசரமாகப் பிரயாணம் செய்யும். தொடர்ந்து அவர் நுனியை மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டேயிருந்தால், அலைமேல் அலையாக வளைவுகள் மறு நுனிக்

குச் சென்றுகொண்டே யிருக்கும். ஒரு திமிலும் அதை அடுத்துள்ள பள்ளமும் சேர்ந்தது ஓர் அலை. இதன் நீளத்தை அலை நீளம் என்பார்கள்.

ஒளியலைகள் ஏற்படுவதும் இப்படித்தான். ஆனல், இந்த அலைகள் ஏதாவது பதார்த்தத்தில் நிகழ்வதல்ல. காந்த மின்சார சக்திகள், குறைந்தும் வளர்ந்தும் மாறி மாறித் தோன்றி மறையும் போது, எல்லாத் திசைகளிலும் சக்தி அலைகள் பரவுகின்றன. இவற்றைக் காந்த மின்சார அலைகள் என்று கூறலாம். வெப்பம், ஒளி, ரேடியோ யாவும் இந்த மாதிரி காந்தமின்சார அலைகளே. இவை யெல்லாம் ஒரே வேகத்தில் பாய்கின்றன. ஆனல், இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அலை நீளம் வெவ்வேருகும். ரேடியோ அலைகள் சில அங்குல நீளத்திலும் உண்டு; பல நூற்றுக் கணக்கான அடி நீளத்திலும் உண்டு. ஆனல், ஒளி அலைகளோ ஓர் அங்குல நீளத்தில் ஒரு கோடி அடங்கும்.

வெவ்வேறு நீளமுள்ள அலைகளை உண்டாக்கும் விதமும், உணரும் விதமும் வெவ்வேருகும். விளக்கு முதலியவை, ஒளியலைகளை உண்டாக்குகின்றன. கண் அந்த அலைகளை உணர்கிறது. ரேடியோ அலை பரப்பியை விளக்குக்கும், ரேடியோ செட் என்று வழங்கும் அலைப்பொறியைக் கண்ணுக்கும் ஒப்பிடலாம்.

சூரிய வெளிச்சம் நேராக நுழையாத இடங்களிலும், வஸ்துக்களை நாம் எப்படிக் காணமுடிகிறது? ஒளி அலைகள் தரை சுவர் முதலியவை மீது பட்டுச் சிதறுகின்றன. இப்படிச் சிறிய அலைகள் எல்லாத் திசைகளிலும் பரவுவதால், மூலை முடுக்குகளிலும் வெளிச்ச முண்டாகிறது. ஒரு பொருளின் மேல்படும் ஒளி அலைகள் சிதறிவந்து நம் கண்ணில் படும்போது, அந்தப் பொருள் இருப்பதை உணர்கிருேம்.

இப்போது எதிரி விமானத்தை அறியும் வழி என்ன என்று பார்ப்போம். ஒளிக்கிரணங்களை ஆகாயத்தில் செலுத்துவதாக வைத்துக் கொள்ளுங்கள். வழியில் ஒரு வஸ்துவும் தட்டுப்படாவிட்டால், அந்தக் கிரணங்கள் திரும்பி வருவதில்லை. கண்ணாடி போன்ற பொருள்களிருந்தாலும் அவற்றை ஊடுருவிச் சென்று விடுகிறது. ஆனல், ஆகாயவிமானம் அந்தக் கிரணங்களின் பாதையில் வந்தால், ஒளி அலைகள் சிதறுகின்றன. சில அலைகள் வந்த வழியே திரும்புகின்றன. இப்படித் திரும்பும் அலைகள் நம் கண்ணில் படும்போது, அந்த விமானத்தைக் கண்டு உணர்கிருேம். ஆனல், இந்த ஒளி அலைகள் மூடுபனியை ஊடுருவிச் செல்வதில்லை. மேகத்தில் பட்டாலும் சிதறி விடுகின்றன. ஆகவே, விமானம் மேகத்துக்கும் மேலாக இருந்தால், விளக்குகளைக் கொண்டு மேகத்தைத் தான் பார்க்க முடிகிறது; விமானம் மேகத்துக்குப் பின்னல் மறைந்திருந்து விடுகிறது.

இந்த விஷயத்தில் ரேடியோ அலைகள் சாமர்த்தியசாலிகள். இரண்டு மூன்று அடி நீளமுள்ள ரேடியோ அலைகளைப் பரப்பினல், அவை மூடுபனி, மேகம் எல்லாவற்றையும் தாண்டிச் சென்று விடுகின்றன. அது போலவே, விமானம் போன்ற வஸ்துக்களையும் அந்த அலைகள் தாண்டிச் சென்று விடுவதா யிருந்தால், அவற்ருல் நமக்குப் பல னில்லை.

நல்ல வேளையாக, அவை அப்படிச் செய்வதில்லை. விமானம் போன்ற திடப்பொருள்கள் மீது பட்டால், இந்த ரேடியோ அலைகள் சிதறுகின்றன. இந்த அலைகள் ஜலத்தில் பட்டாலும் சிதறி விடுகின்றன. ரேடியோ அலைபரப்பி ஒன்றைக் கொண்டு அலைகளால் ஆகாயத்தை நிரப்புகிறார்கள். இந்த அலைகளை உணர்வதற்கு அலைப்பொறி ஒன்றும் வைத்திருக்கிறார்கள். வானம் சுத்தமாயிருக்கும் வரை, அலைப்பொறி தூங்குகிறது. விமானம் ஒன்று தோன்றியவுடன், அதன் மீது பட்டுச் சிதறிய அலைகள் திரும்பி வந்து அலைப்பொறியை இயக்குகின்றன. ஆகவே, அலைப்பொறி இயங்கும் போதெல்லாம், விமானம் ஒன்று வானில் தோன்றிவிட்டது என்று உணர்ந்து கொள்ளலாம்.

விமானம் ஒன்று வருகிறது என்று தெரிந்தால் மட்டும் போதாது. அது எந்தத் திக்கிலிருந்து வருகிறது, எவ்வளவு உயரத்தில் வருகிறது என்பதெல்லாம் தெரியவேண்டும். இதுவும் சாத்தியமே.

அலைப்பொறிக்கு வரும் அலைகள் எந்தத் திசையிலிருந்து வருகின்றன என்று அறிவது சுலபம். வீடுகளில் வைத்திருக்கும் ரேடியோ செட்டுகளுக்கு, எரியல் என்ற ஒரு கம்பியை வீட்டின் மீது உயரக் கட்டி, அதை ரிசீவருடன் இணைப்பதை அறிவீர்கள். துணி காயவைக்கும் கொடிபோல அந்தக் கம்பியைக் கட்டாமல், சதுரமாக வளைத்து, அலைப்பொறியுடன் இணைத்தால், அதைக் கொண்டு, அலைபரப்பி இருக்கும் திக்கை அறிந்து கொள்ளலாம். அந்தச் சதுரத்தை ஒரு புறமாகச் சுற்றினால், ஒரு நிலையில் அலைப்பொறி பலமாகவும், ஒரு நிலையில் இயக்கமே இல்லாமலும், மற்ற நிலைகளில் இயக்கம் குறைவாகவும் இருக்கும். அலை வரும் திக்கைச் சதுரத்தின் தளம் நோக்கும்போது தான், அலைப்பொறி பலமாக இயங்குகிறது. ஆகவே, ஒரு முறை இந்தச் சதுரத்தைச் சுற்றுவதால் அலை வரும் திக்கை அறிந்து கொள்ளலாம்.

இப்போது விமானம் இருக்கும் தூரத்தை அறியும் வழி என்னவென்று பார்ப்போம். ஒரு மலைக்குச் சற்று தூரத்தில் நின்று துப்பாக்கியை வெடித்தால், ஒலியலைகள் மலைப்பக்கம் சென்று, மோதி, பிறகு திரும்பி நம் காதுக்கு வருகின்றன. ஆதலால், துப்பாக்கி வெடிக்கும் சத்தமும் அதன் எதிரொலியும் அடுத்தடுத்து நிகழ்கின்றன. இந்த இரண்டு சத்தங்களுக்கும் இடையில் நிகழும் நேரத்தையும், ஒலியின் வேகத்தையும் வைத்துக் கொண்டு, நமக்கும், மலைக்குமுள்ள தூரத்தைக் கணக்கிடலாம். ஒலி ஒரு விநாடிக்கு ஆயிரத்து நூறு அடிவீதம் செல்கிறது என்று அறிவோம். துப்பாக்கியின் சத்தத்துக்கும், அதன் எதிரொலிக்குமிடையே நான்கு விநாடி கழிந்ததானால், நமக்கும் மலைக்குமிடையிலுள்ள தூரம் இரண்டாயிரத்து இருநூறடி என்று சொல்லிவிடலாம். இந்தத் தூரத்தை இரண்டு முறை (போக வர) ஒலி தாண்டுவதால், நான்கு விநாடி ஆகிறது.

இதே வழியை, விமானத்தில் பட்டு வரும் ரேடியோ அலைகள் விஷயத்திலும் கையாளலாம். ஆனால், இந்த அலைகள் விநாடிக்கு லட்சத்து எண்பதினாயிரம் மைல் தூரம் செல்கின்றன என்று

முன்பு சொன்னேம். இதனுல், ரேடியோ அலைகளை அனுப்புவதற்கும் அவை திரும்பி வருவதற்கும் இடையிலுள்ள நேரம், ஒரு விநாடியில், லட்சத்தில் ஒரு பங்குபோல இருக்கும். இதைக் கொண்டு விமானத்தின் தூரத்தைக் கணக்கிட முடிகிறது.

எதிரி விமானம் நூறு மைலுக் கப்பால் இருக்கும்போதே, அது வரும் திசை, வேகம், தூரம் எல்லாவற்றையும் ரேடார் அறிவித்து விடுகிறது. ருடால்ப் ஹெஸ், கடலைத் தாண்டி, ஸ்காத்லந்தில் இறங்கும் வரை, அவர் விமானத்தை, பிரிட்டிஷ் ரேடார் கவனித்துக் கொண்டேயிருந்தது.

நெடுந் தூரத்தில் நீர் மூழ்கிகள் இருந்த போதிலும், அவை ரேடாரின் பார்வையிலிருந்து தப்புவதில்லை. ஒரு சிறு மிதப்பு, கடலில் இருந்தாலும், ரேடார் அதைப்பற்றிக் கோள் சொல்லி விடுகிறது.

இவற்றேடு ரேடாரின் வேலை முடிந்து விடுவதில்லை. இந்தக் கருவியைக் கொண்டே, நம் விமானங்களைக் குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்ப முடிகிறது. எதிரியின் வரவையறிவதும், அவனைத் தாக்குவதற்கு ஆள் அனுப்புவதும் ரேடார். இதனுல், ஜெர்மன் விமானப்படையின் பலம் ஒடுங்கியது; ஜெர்மன் நீர் மூழ்கிகள் பயனற்றவை ஆயின; பிரிட்டன் மீது படையெடுக்கும் எண்ணத்தையே ஹிட்லர் கைவிட வேண்டியதாயிற்று.

விமானப் போரிலும், கடல் போரிலும் புரட்சியை உண்டாக்கின ரேடார், வருங்காலத்தில் பல துறைகளில் உபயோகிக்கப் படும். இதன் பார்வை சந்திர மண்டலம் வரை எட்டி விடும் என்று சொல்கிருர்கள். மக்களின் சௌகரியங்களை அதிகப்படுத்திக் கொள்வதில், ரேடார் இனி எந்தெந்த வகையில் உபயோகப்படும் என்று பார்க்க வேண்டும். இந்த ஆச்சரியமான கருவியின் முழு வர்ணனையும் வெளியாவது, இந்தத் துறையில் வேலை செய்பவர்களுக்கு உதவியாயிருக்கும்.

*

## குண்டூசி வியாபாரம்

ஒருவன் ஊசி வியாபாரம் பண்ணினுன். பக்கத்துக் கடையிலே ஒருவன் வாழைக்காய் வியாபாரம். அவனைப் பார்த்துக் குண்டூசி வியாபாரியும் பகல் வெயில் நேரத்தில் அரைத் தூக்கமாய்க் கண்ணை மூடிக் கொண்டே சாமான் எடுத்துக் கொடுக்கும் வழக்கத்தைக் கற்றுக்கொண்டான்.

ஒரு நாள் பகல் வெயிலில், குண்டூசிக்காரன் அரைக் கண்ணைத் திறந்து கொண்டு, முக்கால் குறட்டையாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அப்போது லேசான கனவு காணலானுன்.

கையிலே வாய் திறந்த குண்டூசி டப்பி யொன்று இருந்தது. இவனுடைய கனவிலே ஒரு பெண் வந்தாள். அவள் வந்து தன் புருவத்திலும் கண்ணிமையிலும் ஜவ்வாது தடவுவதாக, இவன் கனக் கண்டான். கையிலிருந்த குண்டூசி டப்பியைக் கண்ணிலே கவிழ்த்துக் கொண்டு, மிகவும் வருத்தப்பட்டான். குண்டூசி வியாபாரம் பண்ணுகிறவன் பட்டப் பகலில் நடுக்கடையில் உட்கார்ந்து தூங்கக்கூடாது.

—பாரதியார்

# புத்தகம் உருவாகும் கதை

ஸ்டான்லி அன்வின்

உங்களில் யாராவது ஒருவர் ஒரு புத்தகம் எழுதி, பிரசுரக் கம்பெனி ஒன்றுக்கு அனுப்புவதாக வைத்துக் கொள்வோம். அதை நீங்கள் யாருமறியாமல் கள்ளனைப் போல் கம்பெனி கௌண்டரில் கொண்டுபோய் வைத்தாலும் சரி, தபால் மூலம் அனுப்பினாலும் சரியே; வருஷ முழுவதும் நாள்தோறும் கம்பெனியாருக்கு வந்து கொண்டேயிருக்கும் டைப் பிரதி வெள்ளத்தில் ஒரு பகுதியாகவே உங்கள் பிரதியுமிருக்கும். ஆனால், இதற்காக அது கூட்டத்தோடு கூட்டமாகக் கிடந்து விடுவதில்லை. ஒவ்வொரு கையெழுத்துப் பிரதியுமே, அதற்குப் பிரத்யேகமான சொந்த வாழ்வை வாழ்கிறது. முதலில் அதை ஜாக்கிரதையாக ரெஜிஸ்டரில் பதிந்து கொண்டு, வந்து சேர்ந்ததற்குப் பதிலும் எழுதுகிறார்கள். பிறகு கம்பெனித் தலைவர்களில் ஒருவர் அதை ஒரு கண்ணோட்டம் விடுகிறார். முக்கியமாய் அதை எந்த நிபுணரின் பார்வைக்கு அனுப்புவது என்று தீர்மானிப்பதற்காகவே, இந்தக் கண்ணோட்டம். சில கம்பெனிகள் தங்கள் நிபுணர்களைத் தங்கள் காரியாலயத்திலேயே அமர்த்திக் கொண்டிருக்கின்றன. சில கம்பெனிகள் கிராமத்திலுள்ள நிபுணர்களுக்கு ஏட்டுப் பிரதிகளை அனுப்புகின்றன. பூதத்துவ சாஸ்திரம் சம்பந்தமான ஏட்டுப் பிரதி, பூதத்துவ நிபுணரிடம் போகிறது. இப்படியேதான் மற்றவையும். ஒவ்வொரு ஏட்டுப் பிரதி பற்றியும், எழுத்து மூலமாய் அறிக்கை செய்யும்படி, நிபுணர் கேட்டுக் கொள்ளப் படுவார்.

வரும் ஏட்டுப் பிரதிகளில் மிகவும் கொஞ்சம்தான் பிரசுரிக்கத் தகுதி வாய்ந்தவையாயிருக்கின்றன. ரொம்ப தாராளமாய் மதிப்பிட்டால் கூட முப்பதில் ஒன்றுதான் அப்படிப் பிரசுரிக்கத் தகுந்ததாயிருக்கிறது. ஓர் ஏட்டுப் பிரதி தேவலை என்று தோன்றினால், ஒரு நிபுணரின் அபிப்பிராயத்தோடு நில்லாமல் இன்னும் சிலரின் அபிப்பிராயமும் கேட்கப் படுகிறது. சில சமயம் சாதகபாதகமான அபிப்பிராயங்கள் இரண்டும் சமமாயிருந்தால், பிரசுர கர்த்தரின் ஓட்டே முடிவானதாயிருக்கும். பிரசுர கர்த்தர்களுக்காக ஏட்டுப் பிரதிகளை வாசித்துப் பார்க்கும் நிபுணர்களுக்கு, பல நூலாசிரியர்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால், அது வெளிக்குத் தெரிவதேயில்லை. அந்த நிபுணர்கள் சொல்லும் ஆலோசனையின் மேல் சில ஏட்டுப் பிரதிகள் அடி

உலகப் பிரசித்திபெற்ற பிரசுரகர்த்தர்கள் ஆலன் அண்டு அன்வின் என்ற கம்பெனியார். கம்பெனியின் தலைவர்களில் ஒருவர் ஸ்டான்லி அன்வின். தலைசிறந்த ஆசிரியர்களின் புத்தகங்களை வெளியிட்ட அனுபவம் அவருக்கு உண்டு. பிரசுரத் தொழிலில் அவருக்கு உள்ள திறமையைப் பாராட்டி, பிரிட்டனின் புராதன சர்வகலாசாலைகளில் ஒன்றான அபெர்டீன் யுனிவர்ஸிட்டியார் சமீபத்தில் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியிருக்கிறார்கள். யுனிவர்ஸிட்டி சம்பந்தமேயில்லாத ஒருவருக்கு இம்மாதிரி பட்டம் கிடைத்தது, பிரிட்டனில் இதுதான் முதல் தடவையாகும்.

யோடு உருமாற்றம் அடைகின்றன. ஆனால், இதற்காக, பரம உதவாக்கரை எட்டுப் பிரதிகளையெல்லாம் இலக்கிய அற்புதங்களாக அந்த நிபுணர்கள் மாற்றிவிடுவதாகச் சிலர் நினைப்பது தவறாகும். நூலாசிரியர்கள் ஆக விரும்பும் ஏராளமான பலர், எழுத்துத் தொழிலில் தங்களுக்குப் பிரசுரகர்த்தர்கள் இலவசப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறார்கள். இதுதான் வேடிக்கையா யிருக்கிறது.

அது போகட்டும். நீங்கள் அனுப்பிய நூல் நல்ல நூல் என்றும், அதை அங்கீகரித்து விட்டார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அடுத்தபடியாக, வார்த்தைகளைக் கணக்கிட்டு, மதிப்பிடும் வேலை நடைபெறும். அதாவது, எட்டுப் பிரதியில் மொத்தம் எத்தனை வார்த்தைகள் இருக்கின்றன என்று திட்டமாய் எண்ணி, இது இன்னமாதிரி அச்செழுத்தில் இத்தனை பக்கங்கள் வரும் என்று கணக்கிடுவார்கள். இது சுலபமான வேலையாய்ப் பிறருக்குத் தோன்றும். ஆனால், தொழிலில் நல்ல திறமை உள்ளவர்களால் தான் இதைச் செய்யமுடியும். ஒரு சிற்பி கட்டிடம் கட்டத் தொடங்கு முன், நில அளவு செய்யும் சர்வேயரைக்கொண்டு எப்படிப் 'பிளான்' தயாரிக்கிறானே, அதுபோலவே தான் ஒரு பிரசுர கர்த்தனும் ஒரு புஸ்தகத்தை அச்சுக்குக் கொடுக்கு முன் அதை இன்ன மாதிரி தயாரிப்பது என்று ஒரு திட்டம் தயாரித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. புத்தகத்தை இன்ன மாதிரி தயாரிப்பது என்ற விஷயத்தில், முப்பது நாற்பது வருஷங்களுக்குமுன்பை விட இன்று மிக அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. இதனால், முன்காலப் புத்தகத்துக்கும் தற்காலப் புத்தகத்துக்கும் ஆச்சரியமான வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, அச்செழுத்து உருவங்களில் பிரமாதமான அபிவிருத்தி உண்டாகி யிருக்கிறது. ஒரு புத்தகத்தை உதவாக்கரை அச்செழுத்தில் அச்சிடுவதை விட அதிகமான செலவு, அதை நல்ல அச்செழுத்தில் அச்சிடுவதால் ஏற்பட்டு விடுவதில்லை. ஆகையால், நல்ல அச்சு உபயோகிக்காததற்கு இக்காலத்தில் எவ்விதச் சாக்குப் போக்கும் சொல்ல முடியாது. காகிதத்தில் அச்சுப் பக்கத்தை அமைக்கும் விதமும் மிக முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாகும். நாலு பக்கமும் ஒரே அளவாக 'மார்ஜின்' விட்ட ஒரு பக்கத்தையும் பாருங்கள்; சரியான அளவுப்படி 'மார்ஜின்' விட்ட ஒரு பக்கத்தையும் பாருங்கள். இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். தலைப்பிலே உள்ளதைப் போல் இரண்டு மடங்கு அடியிலும், உட்புறம் உள்ளதைப் போல் இரண்டு மடங்கு வெளிப்புறமும் 'மார்ஜின்' விடுவது தான் சரியான முறை. ஒரு புத்தகத்தை, அடிப்புறத்திலோ, பக்கத்திலோ தான் பிடித்துக்கொள்கிறோம்; தலைப்பிலே பிடித்துக் கொள்ள மாட்டோம். உபயோகிக்கச் சௌகரியமானது, கண்ணுக்கும் அழகாய்த்தான் இருக்கும் என்பதற்கு, இதுவும் ஒரு சான்றாகும்.

பக்கங்களை 'இம்போஸ்' செய்யும் விஷயத்தை, இனி விளக்குகிறேன். அச்சுக்கோத்த பின்புதான், இந்தப் பிரச்னை வருகிறது. புத்தகங்கள் பல 'பாரங்களாக' அச்சிடப் படுகின்றன. ஒரு

'பாரம்' பெரும்பாலும் 32 பக்கங்கள் இருக்கும். சில சமயம் 16 அல்லது 64 பக்கங்களும் இருக்கும். காகிதத்தை மடித்து வெட்டுகிற போது பக்கங்கள் வரிசை கெடாமல் தொடர்ச்சியாய் இருக்கவேண்டும் அல்லவா? இதற்கு, பக்கங்களை எப்படி வைத்து, பாரத்தைத் தயாரிப்பது என்ற விஷயம் எவ்வளவு சிக்கலானது என்பது உங்களுக்குத் தெரியுமா? பக்கங்களை எப்படி வைப்பது என்று திட்டம் செய்து கொள்ள, காகிதத்தை எப்படி மடிக்கப் போகிறோம் என்பதை முன்னதாகவே அறிந்துகொள்வது அவசியமாகும். கைமடிப்புக்கும், மெஷின் மடிப்புக்கும் வித்தியாசம் உண்டு. மிகப் பெரிய காகிதங்களாயிருந்தால், பக்கங்களைப் பாரம் போடும் வேலை அத்தனைக் கத்தனை அதிகச் சிக்கலாயிருக்கும். நீங்கள் ஒரு துண்டுக் காகிதத்தைக் கையில் எடுங்கள். நாலாய் மடியுங்கள். அப்படியே அதன் பக்கங்களுக்கு இலக்கமிடுங்கள். பிறகு, பிரித்துப் பாருங்கள். இந்த விஷயத்தை நீங்களே சுலபமாய்ப் புரிந்துகொள்ளலாம்.

நாம் பிரசுரிக்கப் போகும் புத்தகத்தை இன்ன விதமாய் அமைக்கப் போகிறோம் என்று பிரசுரகர்த்தர் ஒருவாறு மனதுக்குள்ளே திட்டம் செய்து கொண்டபின்பு, தாம் விரும்பும் மாதிரி அச்செழுத்தில் மாதிரிக்காக ஒரு பக்கத்தை அச்சுக் கோத்துக் காட்டும்படி, அச்சுக் கூடத்தாரைக் கேட்டுக்கொள்வார். முப்பத்திரண்டு பக்க பாரங்களாகப் புத்தகத்தை அச்சிடப்போவதாயிருந்தால், புத்தகத்தின் மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை முப்பத்திரண்டால் வகுத்தால் மிச்சம் வராததாயிருக்கவேண்டும். மாதிரிப் பக்கத்தை, பெரும்பாலும் பிரசுரகர்த்தர் ஆசிரியரின் பார்வைக்கு அனுப்புவது வழக்கம். அதோடு, அவர் ஆசிரியருக்குச் சில கேள்விகளையும் எழுதியனுப்புவார். இந்தக் கேள்விகள் எதற்காக என்றால், ஆசிரியர் அஜாக்கிரதையாயிருந்தால் அவர் விழக்கூடிய படுகுழிகளிலிருந்து அவரைக் காப்பாற்றவும், 'ஆசிரியர் திருத்தங்கள்' என்ற சிம்ம கிலியிலிருந்து தாங்கள் முடிந்தமட்டில் தப்பித்துக் கொள்வதற் காகவும்தான். சில வார்த்தைகளின் உச்சரிப்பில் 'இஸட்' 'எஸ்' என்ற இரண்டில் எந்த எழுத்தும் இருக்கலாம். சம்பந்தப்பட்ட பிரசுரகர்த்தர் அவைகளில் 'எஸ்' தான் உபயோகிப்பது வழக்கம். ஆனால், ஆசிரியரோ அவைகளில் 'இஸட்' உபயோகிக்காவிட்டால் தமது ஜீவியமே பாழாகி விட்டது போல் நினைப்பவர் என்றால், புத்தகம் அச்சாகி முடியும் வரையில் ஆசிரியரின் இந்த அபிப்பிராயத்தைப் பிரசுரகர்த்தர் அறியாதிருந்து விடுவது பெரிய சங்கடத்தில் முடியும். மாதிரிப் பக்கத்துடன்கூட, அச்சுக்கூடத்தாரின் அச்சுக்கூலி மதிப்பையும் பிரசுரகர்த்தர் பெற்றுக் கொள்கிறார். அதிலிருந்து, புத்தகத்தின் மொத்தச் செலவு என்ன ஆகும் என்பதைக் கணித்துக்கொண்டு, புத்தகத்துக்கு என்ன விலை வைப்பது என்பதையும் பிரசுரகர்த்தர் நிர்ணயித்துக் கொள்கிறார். புத்தகத்தைத் தயாரிக்கும் செலவு என்னவோ அதைப்போல் மூன்றரை மடங்கு (அமெரிக்காவில் குறைந்த பட்சம் ஐந்துமடங்கு) தொகைதான் விலை விகிதமாக நிர்ணயிக்கப் படுகிறது. புத்தகத்தைத் தயாரித்து விளம்பரம்

செய்து விற்பனை செய்ய ஆகும் மொத்தச் செலவை, புத்தக விற்பனையால் கிடைக்கும் பணத்திலிருந்து கழித்தால் என்ன மிச்சம் வருமோ அதிலிருந்துதான் ஆசிரியரின் 'சம்மானத்தொகை' (ராயல்டி), பிரசுரகர்த்தருக்கு ஏதாவது லாபம் கிடைக்குமானால் அந்தத் தொகை, இரண்டையும் எடுக்க வேண்டும். ஒரு பதிப்பில் எத்தனை பிரதிகள் அச்சிடப்படுகின்றனவோ அந்த எண்ணிக்கையைப் பொறுத்துத்தான், ஒரு பிரதியைத் தயாரிக்கும் செலவு ஏற்படுகிறது என்ற விஷயம் அநேகருக்குத் தெரிவதில்லை. ஏனென்றால், ஒரு புத்தகத்துக்கு எழுத்துக் கோப்பது, படங்களுக்கு பிளாக்குகள் செய்வது ஆகிய செலவுகள், 100 பிரதியோ, 1,000 பிரதியோ, 10,000 பிரதியோ எத்தனை அடித்தாலும் எல்லாவற்றுக்கும் ஒன்றேதான்.

செலவு மதிப்பைக் கணக்கிட்ட பிறகு, பிரசுரகர்த்தர் ஆசிரியருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார். ஐம்பது வருஷங்களுக்கு முன் என்றால், இந்த ஒப்பந்த ஷரத்து மிகவும் சுலபமானதாயிருந்தது. மொத்தமாக ஒரு தொகையை விலையாகக் குறிப்பிட்டு, அதற்குப் பதிலாகச் சகல உரிமைகளையும் பிரசுரகர்த்தர் பெற்றுக்கொள்வது பழைய வழக்கம். ஆனால், ஆசிரியருக்கு இதனால் லாபமில்லை. இன்றோ, ஆசிரியரின் நலன்கள் பூரணமாய்ப் பாதுகாக்கப் பெறுகின்றன. ஆசிரியருக்கும் சரி, பிரசுர கர்த்தருக்கும் சரி, அவரவருக்குள்ள அநேகவித உரிமைகளையும் நலன்களையு மெல்லாம் விவரமாய்க் கூறும் விரிவான ஓர் ஒப்பந்தம் தயாரிக்கப் படுகிறது.

ஆசிரியர்களும் பிரசுரகர்த்தர்களும் செய்துகொள்ளும் ஒப்பந்தங்கள் நாலு விதமானவை:

(1) சகல உரிமைகளையும் விற்பது. இது ஆசிரியருக்குச் சிறிதும் லாபமில்லை. பிரசுரகர்த்தருக்கு அநேகமாய் நன்மைதான். ஆனால், இந்தக் காலத்தில் இந்த மாதிரி ஒப்பந்தம் ரொம்பவும் அபூர்வம்.

(2) 'ராயல்டி' ஏற்பாடு. புத்தகத்துக்கு வைக்கும் விலையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை, விற்ற பிரதிகள் எவ்வளவோ அவ்வளவுக்கும் கணக்கிட்டு, ஆசிரியருக்கு அந்தத் தொகையைக் கொடுப்பது. இதுதான் மிக்க நியாயமும் சகஜமுமாயிருந்துவரும் ஏற்பாடு.

(3) லாபத்தைப் பங்கு பிரித்துக்கொள்ளும் ஏற்பாடு. காகிதம், அச்சு, பைண்டு முதலியவைகளுக்கு ஆகும் செலவுகளையெல்லாம், விற்பனை வருமானத்திலிருந்து முதன் முதலில் பிரசுரகர்த்தர் எடுத்துக்கொண்டு விடுவார். அந்தச் செலவுகள் பூராவும் அடைபட்டு விட்டபின், விற்கும் புத்தகங்களின் விலைத் தொகையை, ஆசிரியரும் பிரசுரகர்த்தரும் பங்கு பிரித்துக்கொள்வார்கள். இந்த ஏற்பாடு மிக்க அபூர்வமாகத்தான் இந்தக்காலத்தில் நடைபெறுகிறது. ஆனால், நீண்ட காலம் விற்கக்கூடிய சில புத்தகங்களைப் பிரசுரிப்பதில் இந்த ஏற்பாட்டைக் கைக்கொண்டால் நன்மை உண்டு.

(4) ஆசிரியரின் செலவில் புத்தகத்தைப் பிரசுரம் செய்வது. இதைக் 'கமிஷன் பிரசுரம்' என்று சொல்லுவார்கள். ஏனென்றால், தமது சேவைக்காக, விற்பனையிலிருந்து ஒரு விகிதத்தைப் பிரசுரகர்த்தர் 'கமிஷன்' பெறுகிறார். இந்த ஏற்பாட்டின்படி, கையிருப்பிலுள்ள புத்தகப் பிரதிகள், புத்தகத்தின்

உரிமைகள் ஆகிய அனைத்தும் ஆசிரியரின் சொத்தா யிருக்கின்றன.

ஒப்பந்தம் கையெழுத்தானதும், வேலையைச் செய்துகொண்டு போகும்படி பிரசுரகர்த்தர் அச்சுக் கூடத்தாரைக் கேட்டுக் கொள்ளும் நிலையி லிருப்பார். அன்றியும் சுற்றுப்பிரயாணம் செய்துகொண் டிருக்கும் தம்முடைய பிரதிநிதிகளுக்கெல்லாம் இந்தப் புதிய புத்தகத்தைப் பற்றி வர்ணித்த சிறு விளம்பரம் ஒன்றையும் பிரசுரகர்த்தர் அனுப்புவார். இதற்கிடையிலே, டைப் ஏடுகள் அச்சுக்கூடத்தாரிடம் போய்ச் சேர்கின்றன. என் சிறு வயதில், கையாலேயே அச்சுக் கோக்கப்பட்டது. இப்போதோ அநேகமாய் 'மானொ-டைப்' மெஷினில்தான் அச்சுக் கோக்கப் படுகிறது. அந்த மெஷின் இரண்டு பகுதிகள் கொண்டது. முதல் பகுதி, ஒரு பெரிய டைப்ரைட்டர் போன்றது. நீண்டதொரு காகிதச் சுருளில், அது வரிசையாய்த் துவாரங்கள் போடும். இவ்விதம் துவாரமிட்ட காகிதச் சுருளை இரண்டாவது மெஷினில் கொடுப்பார்கள். அந்தச் சுருள் பிரிந்துகொண்டே வரும்போது, அந்தத் துவாரங்களை யனுசரித்து, ஒவ்வோர் அச்செழுத்தும், இடை வெளி 'லெட்'டும் வார்ப்படமாகி, வரிக்குவரி சரியான கணக்குப்படி இடைவிட்டு அற்புதமான வரிகளாக அமைந்துவிடும். இந்த நிலைமையில் நீளமான 'காலி'களாக முதல் புரூப்கள் சிலசமயம் எடுக்கப்படுகின்றன. பின்பு, காலிகளை உடைத்துப்பக்கங்களாக அமைக்கிறார்கள். அதற்குப் பிறகு, இரும்புச் சட்டங்களில் பாரங்களாக 'இம்போஸ்' செய்து, அச்சடிக்கிறார்கள்.

புத்தகத்தின் முன் பக்கங்களுக்கு 'ப்ரிலிம்ஸ்' (பூர்வாங்கம்) என்று சொல்வார்கள். இந்தப் பூர்வாங்கப் பக்கங்களைச் சரியான அச்செழுத்துக்களில் அமைப்பது, மிக முக்கியமான அம்சமாகும். புத்தகத்தின் இந்தப் பக்கங்களின் (அதிலும், முக்கியமாக 'டைட்டில்' பக்கத்தின்) 'லே-அவுட்' என்ற அமைப்புச் சரிவர அமைய வேண்டுமானால், ஏற்ற அச்செழுத்துக்களைப் பொறுக்குவதில் பெருந்திறமை வேண்டும். ஒரு புத்தகத்தின் இந்தப் 'பூர்வாங்க'ப் பக்கங்களை ஒரு கண்ணோட்டம் விட்டால் போதும்; புத்தகம் ஒரு நிபுணனின் கையால் தயாரிக்கப்பட்டதா இல்லையா என்பது தட்சணமே தெரிந்துவிடும்.

அச்சடித்த பாரங்களில் எத்தனை பக்கங்கள் இருந்தாலும் சரிதான்; பதினாறு பதினாறு பக்கங்களுள்ள செக்ஷன்களாகத் தான் பெரும்பாலும் அவற்றைவெட்டி, மடித்துக் கொள்கிறார்கள். ஒரு புத்தகத்தின் வளைந்த முதுகுப் பக்கத்தின் உச்சியிலோ அடியிலோ பார்த்தால், நீங்களே இதைக் கண்டு கொள்ளலாம். இப்போது நாம் இந்தச் செக்ஷன்களை யெல்லாம் 'கொல்லேட்' செய்யவேண்டும்; அதாவது ஒன்று சேர்க்க வேண்டும். அதன் பிறகுதான் தைக்க வேண்டும். செக்ஷன்களை ஒன்று சேர்க்க வசதியா யிருப்பதற்காக ஓர் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஒவ்வொருசெக்ஷனின் முதல் பக்கத்திலேயும் 'ஏ' 'பி' 'ஸி' என்ற எழுத்துக்களையோ வேறு விசேஷக் குறிகளையோ தொடர்ச்சியாகப் போடுகிறார்கள். உதாரணமாக, ஏதாவது ஒரு புத்தகத்தின் 33, 49, 65 பக்கங்

களின் அடியில் பாருங்கள்; தனியான ஓர் எழுத்தையோ, குறியையோ காண்பீர்கள். இந்த எழுத்துக்களை கொண்டு செக்ஷன்களை ஒன்று சேர்க்கும் போது, சில சமயம் தவறுதலாக ஒரே செக்ஷனில் இரண்டு பிரதிகள் சேர்வதும் ஒரு செக்ஷன் விட்டுப்போவதும் சகஜம். அப்போது, ஒரு புத்தகம் குறையுள்ளதாய் அமைந்து விடும். ஒரு புத்தகத்தை ஏராளமான பிரதிகள் தயாரிக்கும் போது, அபூர்வமாக ஒன்றிரண்டு பிரதிகளில் குறை நேர்வதைத் தவிர்க்க முடியாது. நீங்கள் வாங்கிய பிரதியில் குறையிருந்தால், அதற்காகக் கவலைப்படாதீர்கள். குறையுள்ள பிரதியை மாறு பேசாமல் திருப்பி வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக நல்ல பிரதி தரவும், இதற்கான தபால் கட்டணத்தை ஏற்றுக் கொள்ளவும், எந்தப் பிரசுரகர்த்தரும் தயாராயிருக்கிறார்.

ஒரு புத்தகத்தின் புரூப்கள், ஆசிரியரின் திருத்தங்களுக்காக மட்டுமல்ல; வேறு பல காரியங்களுக்காகவும் தேவையாயிருக்கின்றன. பிரசுர கர்த்தரின் பிரதிநிதிகள் உலகெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்குப் புரூப்களை அவசர அவசரமாக அனுப்பவேண்டியிருக்கிறது. அமெரிக்கா, அந்நிய நாடுகள் ஆகியவற்றில் உள்ள பிரசுரகர்த்தர்கள், பிரஸ்தாபப் புத்தகத்தைத் தங்கள் நாட்டில் பதிப்பிப்பது, மொழிபெயர்ப்பது முதலிய உரிமைகளை வாங்க விரும்பலாம்; அவர்களுக்குக் காட்ட, புரூப்கள் தேவைப்படலாம். புத்தகத்தின் 'ஜாக்கட்' அட்டைக்குச் சித்திரம் எழுதும் சித்திரக்காரருக்குத் தர, புரூப்கள் தேவைப்படலாம். கடைசியாக, பிரசுரகர்த்தரே படிக்கவும், ஒரு வக்கீலிடம் காட்டி அவதூறு வழக்குக்கு இடமில்லையா என்று சோதிக்கவும் புரூப்கள் தேவைப்படலாம்.

நேரே மெஷினில் ஏற்றி அச்சிடும் வேலையைப்பற்றி இங்கே நான் விஸ்தரிக்கப்போவதில்லை. பைண்டிங் விஷயத்தையும் விளக்கிக்கொண்டிருக்கப் போவதில்லை. ஆனல், ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். காகித அட்டைக்கும் துணி அட்டைக்கும் உள்ள செலவு வித்தியாசத்தைச் சிலர் பிரமாதப் படுத்துகிருர்கள். அது பெரும்பாலும் மிகைப்படுத்திய கூற்ருகும். ஏராளமாய் அச்சிடுவது, மடிப்பது, பாரங்களைச் சேர்ப்பது, தைப்பது ஆகிய வேலைகள், காகித அட்டை போடும் புத்தகமோ, துணி அட்டை போடும் புத்தகமோ, இரண்டுக்கும் ஒரே மாதிரிதான். துணி அட்டையைத் தயாரிப்பது தான் விசேஷ வேலை. இந்த வேலையை, அட்டை தயாரிக்கும் ஒரு மெஷின், நாம் நம்ப முடியாத அவ்வளவு அதிவேகமாய்ச் செய்கிறது. கிரௌன் எட்டுப் பக்கம் அளவுள்ள பெரும்பாலான புத்தகங்களுக்குத் துணி அட்டை தயாரிக்க ஆகும் அதிகப்படிச் செலவு நாலு பென்னிதான் வரும். இதற்காகப் புத்தகத்தின் விலையை ஒரு ஷில்லிங்கோ அல்லது அதற்கும் சிறிது குறைவாகவோதான் ஏற்றவேண்டியிருக்கும். இந்த விஷயத்தில் பரிட்சை செய்து பார்த்ததில், ஒரு புத்தகம் ஒரு ஷில்லிங்கோ அல்லது அதற்கும் குறைவாகவோ விலை வைக்கப்பட்

டிருந்தா வல்லாமல், அந்தப் புத்தகத்தைத் துணி அட்டையோடு பெறுவதற்காக இரண்டு ஷில்லிங்கு வரையில்கூட அதிக விலை கொடுக்க, பொது ஜனங்கள் தயாரா யிருக்கிறார்கள் என்று தெரிந்து போயிற்று.

இந்தக் காலத்தில், துணி அட்டை பைண்டு செய்த ஒவ்வொரு புத்தகத்துக்கும், 'ஜாக்கட்' அல்லது 'அழுக்குப்படா திருக்கும் உறை' போட்டுவிடுகிறார்கள். அந்த 'ஜாக்கட்'டில் பிரத்யேகமாய் அச்சும் அடிக்கிறார்கள். ஐம்பது வருஷங்களுக்கு முன்போ, வெற்றுக் காகிதம், வீணாய்ப்போன அச்சுக்காகிதம், கண்ணாடிபோன்ற காகிதம் ஆகியவைகளைத்தான், 'அழுக்கு உறை' யாகப் போட்டு வந்தார்கள். சௌகரியத்தை உத்தேசித்து, அந்த 'அழுக்கு உறை' யின் முதுகிலோ முன் பக்கத்திலோ அல்லது இரண்டிலுமோ புத்தகத்தின் பெயரை அச்சிட்டார்கள். அதற்குப்பின் கொஞ்ச காலத்தில், புத்தகத்தைப் பற்றிய சிறிது வர்ணனையையும், அதன் பிறகு சித்திரங்களையும் சேர்த்து விட்டார்கள். இப்படியாக, கேவலம் அழுக்குப்படாமல் தடுக்கும் பாதுகாப்பாக ஆரம்பித்த உறை, புத்தகத்தின் கவர்ச்சிகரமான ஒரு முக்கிய அம்சமாகவே இப்போது வளர்ந்து விட்டது.

பிரசுரப் படுத்துவதுதான் பிரசுரகர்த்தரின் வேலை. புத்தகம் தயாரித்துக் கொண்டிருக்கும் போதே, பிரசுரகர்த்தரின் இந்தப் 'பிரசுரப்படுத்தும்' வேலை உண்மையிலே ஆரம்பமாகி விடுகிறது. அநேகமாய்ச் சகல பிரசுரகர்த்தர்களுமே சுற்றுப் பிரயாணப் பிரதிநிதிகளை நியமித்துக் கொண் டிருக்கிறார்கள். பிரபல சமாசாரப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்தப் புத்தகத்தின் பிரசுர தினத்திலேயே இதைப் பற்றி மதிப்புரை செய்ய வசதியாக, முன் கூட்டியே இதன் பிரதிகளை அவைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். ஆனால், விளம்பரம் செய்யும் வழக்கம் மட்டில் கம்பெனிக்குக் கம்பெனி பெரிதும் மாறுபடுகிறது. சில பிரசுரகர்த்தர்கள் இரண்டே இரண்டு ஞாயிற்றுக் கிழமைப் பத்திரிகைகளில் மட்டும் விளம்பரம் செய்வதுபோதும் என்று நினைக்கிறார்கள். மற்றும் சிலர், 'டைம்ஸ்' (தினசரி, வாரம் இரண்டு பதிப்புகளுமே), 'டைம்ஸ் லிட்டரரி ஸப்ளிமெண்ட்', அரசியல் வாரப்பத்திரிகைகள், சில பிரபல ஜில்லாப் பத்திரிகைகள் ஆகியவற்றில் விளம்பரம் செய்வதும் அவசியமே என்று எண்ணுகிறார்கள். சில பிரசுரக் கம்பெனியார், சுற்றறிக்கைகள் அனுப்புவதை முக்கிய வேலையாகக் கைக்கொண் டிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, பிரசுரமாகும் புத்தகத்தைப்பற்றி எங்கும் ஜனங்கள் பேசும்படிச் செய்வதுதான் முக்கியம். வழி எதுவாயிருந்தாலும் சரி, இப்படி அவர்கள் பேசும்படி செய்யக்கூடியதே சிறந்ததாகும்.

இப்படியாக, கடைசியிலே உங்கள் புத்தகம், புத்தகக் கடைக்கு வந்துவிட்டது. உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டாவதாக!

✲

**தெய்வ அருள் :** காற்றடிக்கும்போது, விசிறியை எறிந்து விடலாம். அது போலவே, தெய்வ அருள் கிட்டும்போது, ஜபதபங்களை உதறி விடலாம்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

வருகிறது!

U.R. ஜீவரத்னம் நடிக்கும்

# என் மகன்



டைரக்ஷன்:
R.S. மணி
வசனம்:
..சாமி...
பாட்டு:
பாபநாசம் சிவன்.
C.A. லெக்ஷ்மணதாஸ்
ஸ்டுடியோ:
செண்டிரல்
ஸ்டுடியோஸ்
...கோவை...

ஜூபிடர்
ரிலீஸ்

ஜூபிடர் பிக்சர்ஸ் சர்க்யூட்... மதராஸ்

P.S.M.Co

W. Amenon

எதிர்பாராத தீவிபத்துகளினால்

எத்தனையோ நஷ்டங்கள்!

அவற்றிற்கெல்லாம்

ஈடு கொடுப்பதே

எங்கள் அரிய சேவை!

விவரங்களுக்கு எழுதுங்கள் :-

**பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹாரன்பி ரோடு
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட் எட்வர்ட்ஸ் ரோடு

**தீவிபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்**

**மொத்த ஆஸ்திகள் ரூ. 42,00,000-க்கு மேல்**

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட், மதுரை etc.

**கோடை காலத்திற்குத் தகுந்த குளிர்ந்த பானங்கள்**

கும்பகோணம்

# டி.எஸ்.ஆர்.

கம்பெனியின்

குங்குமப்பூ

நன்னாரி, ரோஸ், ஆரஞ்சு

முதலிய சர்பத்துகள்

சென்னை ஏஜண்டுகள் :

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**

திருவல்லிக்கேணி

கோவை ஸ்டாக்கிஸ்ட் :

**B. பால பட்டாபி**

வைசியர் தெரு :: கோவை

# பாரதியார் பிறந்த காலம்

வ. ரா.

பாரதியார் பிறந்த காலம், தமிழ் நாடு சம்பந்தப்பட்ட வரையில், வெகு வினோதமான காலம். நகர நெருக்கடி தோன்றாத காலம்; கிராமம் பாழாகாத காலம். பஞ்சமும் பருவ மழையும் ஆண்டவனின் லீலைச் சோதனைகள் என்று, ஆலோசனை செய்யாமல் மக்கள் அலறிக்கொண்டிருந்த காலம். காப்பி என்பதே தெரியாத காலம். காலணா நாணயத்தைக் கையில் வைத்துச் சுண்டிச்சுண்டி அழகுபார்த்த காலம். தானியங்களின் அகவிலை ஏறாத காலம். தேரும் திருவிழாவும் தெருக் கூத்துக்களும் ஜனங்களுக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்த காலம். ஜோஸியம் சொல்லும் வள்ளுவர்களால், உயர்ந்த படிப்பாளிகளுக்குக் கூடத் தாசில் உத்தியோகத்துக்கு மேலே சொல்லத் தெரியாத காலம். 'ஐகோர்ட்டு பாரிஸ்டர்' என்று வெகு மரியாதையுடன், தேவலோகப் பிறவியைப்பற்றிப் பேசுவதைப்போல, காதோடு காது வைத்து ரொம்ப ரகசியமாகச் சொல்லும் காலம். வைரங்கள், கைகளையும் காதுகளையும் மார்புகளையும் அலங்காரம் செய்யாத காலம். பருத்திப் புடவையைத் தவிர, பட்டுப் புடவையை அதிகமாக அறியாத காலம்.

சக்தி காரியாலயப் பிரசுரமான 'மகாகவி பாரதியார்' என்ற நூல், இப்போது செப்பனிட்டுத் திருத்தமான இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. அதில் ஆசிரியர் வ. ரா. சில புது விஷயமும் சேர்த்திருக்கிறார். அதில் ஒரு பகுதி இந்தக் கட்டுரை.

கதாகாலக்ஷேபங்களின் மூலமாகக் 'கல்வியைக் கேட்ட' காலம். பரத நாட்டியத்தைப் பரத்தையர் மட்டும் ஆவலுடன் ஆதரித்துப் போற்றிவந்த காலம். 'போன உயிரைத் திருப்பிக் கொண்டு வரும் வித்தையைத் தவிர, வேறு எல்லா வித்தைகளிலும் கைதேர்ந்த வெள்ளைக்காரன்' என்று இங்கிலீஷ்காரனை வாயாரப் புகழ்ந்த காலம். 'விக்டோரியா மகாராணி காலத்தில் விபரீதம் எதுவாவது தோன்ற முடியுமா' என்று ராஜபக்தி ஓங்கி நின்ற காலம். கிராமத்தில், சேர்ந்தாற்போல ஆயிரம் ரூபாயைப் பார்க்கமுடியாத காலம். நோட்டுகள் மலியாத காலம். வயிற்றுப் பிழைப்புக்கு வேறு என்ன வழி என்று வயிற்றுப் பிழைப்பைப் பெரிய பிரச்னையாகப் பேசிவந்த காலம். 'கோச்சு வண்டி, இரட்டைக் குதிரைச் சாரட்டு' பேர்வழிகளைச் சிறு குபேரர்களாக மதித்து மயங்கிய காலம்.

இந்தக் காலத்திலே தமிழர்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? தாயுமானவர், 'யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும், உறங்குவதுமாக முடியும்' என்று பாடியிருக்கிறாரே, அவ்வாறே தமிழர்களின் வாழ்க்கை நடைபெற்றது. கலையைப்பற்றித் தமிழர்களுக்குக் கவலையா? கல்வியைப்பற்றிக் கவலையா? பொன்னைப் பற்றிக் கவலையா? அரசியலைப்பற்றிக் கவலையா? கவிதையைப் பற்றி அவர்கள் யோசித்ததுண்டா? தமிழ் மொழி, தோல்

சுருக்கம் காணுவதைப்போல, சுருக்கம் கண்டு வந்ததைப்பற்றி அவர்கள் சிந்தனை செய்தார்களா? கைத் தொழில்களைப்பற்றி அவர்கள் கவலைப் பட்டார்களா? 'ஆண்டவனுடைய பிரதிநிதியாக, ஆங்கிலேயன் இந்தநாட்டின் அரசியல் பொறுப்பை ஏற்று, நீதித் தராசைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் வரையில், நமக்கென்ன கவலை?' என்று அவர்கள் பிதற்றிக் கொண் டிருந்தார்கள்.

கையில் நீதித் தராசைப் பிடித்துக்கொண்டிருக்கும் இங்கிலீஷ்காரன், தன் பையில் பணம் நிரம்புகிறதா என்பதைத்தான் தனது லட்சியமாகக் கொண்டிருந்தான் என்று அப்பொழுது யாரேனும் தமிழர்களிடம் சொல்லி, தண்டப் பிரயோகம் பெறுமல் தப்பித்துக் கொள்ள முடியுமா? 'நம்முடைய மதத்தில் அவர்கள் தலையிடுகிருர்களா? நம்முடைய பெண்களை அவர்கள் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிருர்களா? நம்முடைய ஆசாரங்களை அவர்கள் கெடுக்கிருர்களா? ஏதோ கொஞ்சம் பணம் எடுத்துக்கொள்ளுகிருர்கள். அதனுலென்ன? தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் இருப்பானு?' என்று இங்கிலீஷ்காரர்களுக்குப் பரிந்துபேசும் கூட்டந்தான் இந்த நாட்டில் பெரும்பான்மையாய் இருந்தது. வெள்ளைக்காரர்களைப் போல இருக்கவேண்டும் என்று பொதுவாக எல்லாரும் ஆசைப்பட்டார்கள். அதற்கு ஆரம்ப அஸ்திவாரமாக, இங்கிலீஷ் படிப்பதில் அளவற்ற மோகங் கொண்டார்கள்.

நாட்டிலோ தரித்திரம் தாண்டவமாடுகிறது. இந்தச் சமயத்தில், சீமையிலிருந்து சுகபோக வாழ்வுக்கு ஏற்ற சாமான்களை, இங்கிலீஷ்காரர்கள், இந்த நாட்டில் கொண்டுவந்து ஏற்றினுர்கள். இவைகளை அனுபவிக்கும் ஆசை, தமிழர்களின் உள்ளத்தில் உதிப்பது இயற்கைதானே? ஆனுல், 'சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்' என்பதை மட்டும் அவர்கள் மறந்துவிட்டார்கள். சாமான்களை வாங்குவதற்கு, செல்வ நிலை சரியாக இருக்க வேண்டாமா? ஆனுல், இதைப்பற்றி அவர்கள் கவலைப்பட வில்லை. ஆண்டவன் படைத்த இந்த மண்ணுலகில், மனுஷன் கவலைப்பட்டுச்செய்கிற காரியம் எதுவுமே இல்லை என்று சமாதானம் சொல்லிக் கொண்டு, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள்.

இதன் பயன் என்ன? பொறுப்பு உணர்ச்சியும், யோசனைத் திறனும் தமிழர்களை விட்டுப் போய் விட்டன. எந்த வகையிலும், எதற்காகவும் பொறுப்பை ஏற்க மனம் இல்லாத நிலைக்குத் தமிழர்கள் வந்து விட்டார்கள். 'முள்ளைத்தைத்துக்கொண்டேன்' என்று சொல்லுவதுதான் முறையும் உண்மையுமாகும். ஆனுல், பொறுப்பை ஏற்க மனமில்லாத தமிழன், 'முள் தைத்துவிட்டது' என்று முள்ளின்பேரில் பழியைப் போட்டு, அந்த விஷயத்தில் தனக்குச் சிறிதளவு கூடப் பொறுப்பு இல்லாதது போலப் பேசும் ஆச்சரியத்தைப் பாருங்கள்.

பொறுப்பற்ற, சுதந்தர மில்லாத வாழ்வுக்கு, சோம்பலே ஆட்சி புரியும் வாழ்வுக்கு, சுக வாழ்வு என்று பெயர் கொடுத்து அழைத்து, தமிழன் அகமகிழ்ந்தான். சோம்ப லுள்ளவன் செயல் செய்வானு? கைச் சுண்டு விரலைக்கூட அவன் அசைக்க மாட்டான். உழைப்பின் மூலமாக

எதையும் பெறமுடியும் என்பதில் அவனுக்கு நம்பிக்கை இருந்தால் தானே? ஆனல், அவன் உழைப்புக்கு ஒரு மாற்றுக் கண்டு பிடித்து, அகமகிழ்ந்தான். அதன் பெயர்தான் அதிருஷ்டம்.

இந்த அதிருஷ்டம் என்ற பொய்க்கு வேறு பெயர்களும் உண்டு. 'காலம்' என்று ஒரு பெயர். 'திருவருள்' என்று இன்ஞெரு பெயர். 'லக்ஷ்மி கடாக்ஷம்' என்று மற்ருெரு பெயர். 'ஈசன் கருணை' என்று பிறிதொரு நாம தேயம். இவ்வாறு, அசடு என்ற படுகுழியில் அவன் வீழ்ந்தான். பிறனுடைய செயலால்தான், தான் நன்மை அடைந்து, முன்னேறிச் சுகவாழ்வு வாழமுடியும் என்று திடமாக நம்பின தமிழனை, விதிப் பிசாசு வேறு கெட்டியாகப் பிடித்துக்கொண்டது. இப்பேர்ப்பட்ட நிலைமையில் இருந்த தமிழர்களை யாரும் அடக்கி ஆளவேண்டிய அவசியமே இல்லை. அடக்குவதற்கு, என்ன எதிர்ப்பு இருக்கிறது? யார் உருட்டினலும் பந்து உருண்டுகொண்டே போகும். இதைப் போலவே, தமிழர்களின் வாழ்வும். கண்ட அன்னியர்கள் எல்லாம் தமிழர்களின் வாழ்வைப் பந்தாடிவிட்டார்கள்.

'தங்களுடையது என்று உள்ளப் பூரிப்போடும் கர்வத்தோடும் தமிழர்கள் சொல்லிக்கொள்ளும் படியாக, எதுவும் அவர்களுக்குக் கிடையாது' என்று தமிழ் நாட்டில் செய்யப்பட்ட பொய்யான பிரசாரத்துக்குத் தமிழர்கள் பலியானர்கள். இந்தப் பிரசாரம் கூட, இங்கிலீஷிலும் பிறமொழிகளின் மூலமாயுந்தான் செய்யப்பட்டது. தமிழ் பாஷையைத் தமிழர்களே அலட்சியம் செய்தார்கள். 'தமிழ் கற்றல், அது வயிற்றுக்குச் சோறு போடுமா? இடுப்புக்குக் கட்டத் துணி கொடுக்குமா?' என்று அசடு வழியும் ஆபாசக் குப்பைகளைக் கிளப்பினர்கள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதை அடியோடு மறந்துபோனர்கள். முக்திக்குப் பதிலாக, சர்க்கார் உத்தியோகமே மோட்சம் என்று வாதாடத் துணிந்தார்கள்.

தன்னம்பிக்கையும் சுதந்தர தாகமும் சுயமரியாதையும் தமிழர்களின் இதயக்கண் முன்னே, காட்சி அளிக்க மறுத்துவிட்டன. பராதீனம் என்பது பழுத்த கனியாகிவிட்டது. கைவிரிப்பும் பெருமூச்சுந்தான் கண்ட பலன்கள்.

பாலைவனத்தில் காணும் நீர்ச் சுனைகளைப்போல, ஒரு சிலரின் உள்ளத்தில், தமிழன் என்ற பெருமை உணர்ச்சி, ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது என்பது உண்மைதான். ஆனல், அவர்கள் செயலற்ற சாதுக்களாக வாழ்ந்தார்கள்.

கடவுளை, விவேகானந்தர் தமது இளம் பிராயத்தில் நம்பவில்லை. இந்த மனப்பான்மையோடு, அவர் ராமகிருஷ்ண பரமஹம்ஸரை நாடினர். கடவுள் இருக்கிருரா என்று பரமஹம்ஸரைக் கேட்டார். இருக்கிருர் என்ருர் அவர். "தங்களால், எனக்குக் கடவுளைக் காண்பிக்க முடியுமா?" என்றுகேட்டார் விவேகானந்தர். "ஆனந்தமாய்க் காண்பிப்பேன்" என்று பரமஹம்ஸர் சொன்னதைக் கேட்டு, விவேகானந்தரின் பார்வை அடியோடு மாறிவிட்டது. பரமஹம்ஸர் வெறும் சன்னியாசிச் சாதுவாக இருந்திருந்தால், அவர் சுவாமி விவேகானந்தரின் மனதைச் சிறிதளவுகூட மாற்றியிருக்கமுடியாது.

தமிழன் என்று பெருமைப் பட்டுக்கொண் டிருந்த சிலர், வெறும் சாதுக்களாக வாழ்ந்த தால், அவர்களால் தமிழர்களின் இதயத்தைத் தொட்டு, பெரு வாழ்வு என்ற இன்ப விளக்கை ஏற்றிவைக்க முடியவில்லை. 'ஏதோ, பொழுது போகவில்லை போலிருக்கு. தமிழனது பெருமை யைப்பற்றிக் கதை கதைக்கிறார் கள்' என்று ஏளனக் குரலில், அந்தச் சாதுக்களைக் கேலி செய் தார்கள் மற்றவர்கள்.

தமிழர்களின் இத்தகைய பரி தாபகரமான மனநிலைமையை மாற்ற வெறும் சாதுக்களால் முடியுமா? முப்பாழும் பாழாகி, அதற்கப்பால் படர்ந்து ஒளி திக ழும் பரமனின் பாதமே கதி என்று சொல்லும் வேதாந்தியும், உலகமே நிலையில்லாத தென்று சொல்லித் தனக்கு மட்டும் அறு சுவை உண்டி வேண்டும் ஆண் டிப் பண்டாரமும், தமிழர்களைத் தட்டி எழுப்பமுடியாது. தமி ழனைத் தட்டி எழுப்பி, அவனை முன்னேறச் செய்பவர் திடசங் கற்பமுள்ளவராக இருக்கவேண் டும்; தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும். இந்த உலகத்திலேயே நித்தியானந்தத்தை நாடு என்று சொல்லி, அதற்கு வழிகாட்டி யாக இருக்கவேண்டும். கண் ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்காத கலைஞனாக இருக்க வேண்டும். அவர், கவிதை வெள் ளத்தில் மிதந்து விளையாடவேண் டும். குழந்தைக்குத் தோழனாக வும், பெண்மைக்குப் பக்தனாகவும், அரக்கனுக்கு அழுக்குப்பேயாக வும், சுதந்தரத்துக்கு ஊற்றுக் கண்ணாகவும், 'சுற்றி நில்லாதே போ, பகையே' என்னும் அமுத வாய் படைத்த ஆண்மகனாகவும், கவிதைக்குத் தங்குமிடமாகவும், உள்ளத்தில் கனலும் கருணையும் ஒருங்கே எழப்பெற்றவனாகவும் எவன் ஒருவன் இருக்கிறானோ, அவன்தான் தூங்கும் தமிழ் நாட் டைத் தட்டி எழுப்பி, தலை நிமிர்ந்து நடக்கச் செய்யும் வல் லமை படைத்தவன்.

இப்பேர்ப்பட்ட மூர்த்திகரம் வாய்ந்த பாரதியார், தமிழ் நாட் டில் தோன்றியிரா விட்டால் என்ன ஆகியிருக்கும் என்று சிந் தனை செய்வதே சிரமமான வேலை யாகும். அழுகிப்போன வாழைச் சிங்கம் வளர்வதை நீங்கள் பார்த் திருக்கிறீர்களா? 'அழுகின சிங் கமா இவ்வளவு வாளிப்போடு வளர்ந்திருக்கிறது!' என்று வியப் படையும்படியாக அது வளர்ந் திருக்கும். அந்த இயற்கை எழில் காட்சியைப்போல, பாரதியார் தமிழ் நாட்டில் தோன்றினார். தமி ழர்களின் வாழ்க்கை அழுகிப் போனது, அது அடியோடு மறை வதற்காக அல்ல வென்பதையும், அது மறுமலர்ச்சியின் ஆணித்தர மான விதையின் வீர்யம் என் பதையும், நாம் பாரதியாரின் தோற்றத்திலிருந்து கண்டு கொண்டோம்.

பொழுது புலர்ந்தது
யாம் செய்த தவத்தால்
புன்மை இருள் கணம்
போயின யாவும்

என்ற இன்னிசைக் கானத்தைக் கேட்டுத் தமிழ்நாடு விழித்துக் கொண்டது.

*

**அன்னையின் சொரூபம்:** என் திவ்யமாதா ஒன்றாய்ப் பலவாய், அவற்றுக்கப்பாலாய் இருக்கிறாள்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# சக்தி

உயர்தர
மாத வெளியீடு

கலை, கவிதை, கட்டுரை, வரலாறு, சரித்திரம், சயன்ஸ், மருத்துவம், பிரயாணம் இன்னும் மற்ற விஷயங்களும் படங்களுடன் வெளி வருகிறது.

**சந்தா விபரம்** (தபால் செலவுடன்)

ஆறு மாதம் : 3-8-0 ஒரு வருஷம் : 6-0-0

இரண்டு வருஷம் : 11-0-0

புக் போஸ்ட் தபாலில் அனுப்பும் பத்திரிகைகள் கிடைக்கவில்லையென அடிக்கடி புகார் கடிதங்கள் கிடைக்கிறது. நடுவில் தவறுவதற்கு எந்த விதத்திலும் உதவி செய்யக்கூடவில்லை. தவறாது கிடைக்க வேண்டுமென்பவர்களுக்கு கீழே கண்ட படி தொகை யனுப்பினால் ரெஜிஸ்தர் தபாலில் அனுப்ப முடியும்.

**சந்தா விபரம்** (ரெஜிஸ்தர் தபாலில்)

ஆறு மாதம் : 4-10-0 ஒரு வருஷம் : 8-4-0

இரண்டு வருஷம் : 15-8-0

மானேஜர் :

'சக்தி' மாத வெளியீடு

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை : சென்னை

● சக்தி பத்திரிகை காயிதக் கட்டுப்பாடு காரணமாக தேவையளவு தான் அச்சிடுகிறோம். ஆதலால் ஏஜண்டுகளுக்கு குறைவான பிரதிகளே யனுப்பி வருகிறோம். 'சக்தி'யின் வாசக நண்பர்கள் பிரதிகள் கிடைக்கவில்லையென வருந்திக் கடிதம் எழுதுகிறார்கள்.

● ● சக்தி தவறாது கிடைப்பதற்கு இரண்டு வழிகள் : முதல் வழி: அந்த ஊர் 'சக்தி' விற்பனையாளரிடம் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்வது. இரண்டாவது வழி: ஆறு மாதத்திற்கோ, ஒரு வருஷந்திற்கோ, இரண்டு வருஷங்களுக்கோ உள்ள சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்பித் தங்களை சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்வது. 'சக்தி' விற்பனையாளர் இல்லாத ஊரிலிருப்பவர்களுக்கும் இந்த இரண்டாவது வழி தான் நல்லது.

● ● ● இரண்டாவது வழிப்படி செய்ய விரும்புபவர்கள் கீழே உள்ள கார்டில் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டுகிறோம். (சந்தா விபரம் பின் பக்கம் பார்க்க.)

தேதி..........................

ஐயா,

'சக்தி' மாத வெளியீட்டிற்கு 194..........௵

..........................மாதத்திலிருந்து..................வருடத்திற்கு சந்தாதாரராகப் என் பெயரைப் பதிவுசெய்து கொண்டு பத்திரிகையை அனுப்ப வேண்டுகிறேன். அதற்குரிய சந்தாத் தொகை ரூ........................ மணியார்டர் / போஸ்டல் ஆடர் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

தங்கள்,

பெயர்

விலாசம்

ஊர்

# காந்தி பிறந்தான்

சுரபி

காந்தி பிறந்தான் — எங்கள்
காந்தி பிறந்தான் — எங்குங்
காந்தி பிறந்தது காரிருள் தேய்ந்தது
காந்தி பிறந்தான் — மோகன்
காந்தி பிறந்தான் — எங்கும்
சாந்தி பிறந்தது செத்தது சாகஸம் (காந்தி)

தேவன் பிறந்தான் — தேவ
தேவன் பிறந்தான் — இனித்
தேங்கிடும் இன்பமெத் திக்கிலும் பாய்ந்தெனத்
தேவர் மகிழ்ந்தார் — அந்த
மூவர் மகிழ்ந்தார் — அன்னை
தேவி பராசக்தி ஆவி குளிர்ந்தனள் (காந்தி)

ஏழைகள் வாழ — மனக்
கோழைகள் தாழ — மக்கள்
என்பிலெலாம் தெய்வ அன்பு சுரந்திட
ஊழியம் செய்தே — மனப்
பிழை யறுத்தே — இந்த
உலக மனைத்தையும் ஓர் குடியாக்கிட (காந்தி)

புத்தனின் போதம் — யேசு
கர்த்தனின் வேதம் — யாவும்
பூமியில் எங்கணும் பூரண மாயிட
சத்தியம் வெல்ல — அது
நித்தியம் ஆள — நிறை
சாந்த சொரூபனெங் காந்தி பிறந்தனன் (காந்தி)

ஆவி சிலிர்க்க — உள்ம்
தாவிக் குதிக்க — இந்த
அண்டமெலாம் ஓமகுண்டம் வளர்த்துவம்
பூவினைக் கொய்வோம் — அவன்
சேவடி பெய்வோம் — எதிர்
பூரணகும்ப மெடுத்து வணங்குவம் (காந்தி)

✲

# உப்பு

மு. அருணசலம்

நான் காசிக்கு வந்தவுடனே புதிதாய்த் தெரிந்துகொண்ட பல வஸ்துக்களில், உப்பும் ஒன்று.

இதைக் கேட்ட வுடனே பலருக்குச் சிரிக்கத் தோன்றலாம். "இதற்கு முன்னே நீ உப்பே பார்த்ததில்லையா? இது வரையில் உப்பில்லாமலா சாப்பிட்டு வந்தாய்?'' என்று கேட்கவுந் தோன்றலாம்.

இது வரையில் நான் பார்த்திருந்ததெல்லாம் கடலுப்பு; படிகம்போல அளவில் சிறியதாய்க் கூர்மையான ஓரங்களுடையதாய் இருக்கும். இதை அதிகம் வர்ணிக்கத் தேவை யில்லை. காகிதப் பெட்டிகளில் அடைத்து, மேலே நாட்டுக் கம்பெனிகளிலிருந்து கப்பலில் வந்திறங்குகிற சர்க்கரை யொத்த நுட்பமான டேபிள்-ஸால்ட் அல்லது ஸ்டாண்டர்ட் ஸால்ட் என்ற உப்பையும் பார்த்திருக்கிறேன். ஏகதேசம், கல்லுப்பு, மண்ணுப்பு என்பவற்றையும் பார்த்திருக்கிறேன். ஆனல், காசியில் நான் கண்ட உப்பு முற்றும் வேறு மாதிரியாயிருந்தது.

திருப்பதி முதலான இடங்களிலும் பட்டணத்துக்கு வரும் வழியில் பல இடங்களிலும் பார்த்தால், சாலையில் பழுது பார்ப்பதற்காக வண்டி வண்டியாகக் கல் கொண்டுவந்து கொட்டியிருப்பார்கள். இது ஒருவகையான சிவப்பு நிறக்கல். சல்லி போலத் துளாகவும் பெரிய கட்டியாகவும் இக்கல் கிடக்கும். நான் மேலே சொன்ன உப்புக்கும் இந்தக் கல்லுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. உப்புக்கட்டி இன்னும் பெரியதா யிருந்தது. இந்தக்கட்டியையும் இதன் செந்நிறத்தையும் கண்டபோது இதை உப்பென்றே நம்பத் தோன்றவில்லை. ஆனல், இதனுடைய உப்பு எனற சுவையானது, சாதாரண உப்பினும் அதிகமாகவே யிருந்தது! எனவே, இங்கே தான் உப்பை நான் புதிதாகத் தெரிந்து கொண்டேன் என்றல் மிகையல்ல.

'உப்போடு கூடிய முப்பத்திரண்டும்' என்பது பழமொழி. உணவுப் பொருள்களைக் குறிப்பிடும்போது, உப்புக்கு அவ்வளவு முதன்மை கொடுத்திருக்கிருர்கள். மற்றதெதுவும் இதற்குப் பின்பட்டதுதான். உப்பிட்டவரைத்தானே உள்ளளவும் நினைக்கவேண்டும்.

ஒருவர் ஒரு வருஷத்தில் உண்கிற உப்பு, சராசரி 12 பவுண்டாம். காடுகளில் சாகபக்ஷணிகளாயுள்ள மிருகங்கள் உப்புத் தண்ணீர் தேடிச் சில சமயம் மைல்கணக்காய்ப் போகுமாம். அவற்றுக்குக்கூட உப்பு அவ்வளவு முக்கியமாயிருக்கிறது. இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் உப்பு சத்தியாக்கிரகம் எவ்

**'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பது தமிழர் பழமொழி. உத்தமர்களைப் 'பூமியின் உப்பைப் போல் சாரமானவர்கள்' எனபதாக ஏசுபெருமான் வர்ணித்திருக்கிருர். மகாத்மா நடத்திய உப்புப் போர் உலகப் பிரசித்தம். உப்பை எல்லாருக்கும் தெரியும். ஆனல், இதுபற்றிய பல அரிய விவரங்கள் எத்தனை பேருக்குத் தெரியும்?**

வளவு முக்கியமான இடம் வகிக்கிறது என்பதையும் நாம் அறிவோம். உப்புக்கு வரி விதிப்பதன் மூலம் அரசாங்கம் ஏராளமான வருவாய் பெற்றுவருகிறது.

உப்பு என்பது என்ன? இரசாயன பரிபாஷையில், சோடியம் குளோரைடு என்பார்கள். அதாவது சோடியம் என்ற உலோகமும் குளோரின் என்ற வாயுவும் கூடியதே சாதாரண உப்பு என்பார்கள். கடல் நீரை உப்பளங்களில் பாய்ச்சிச் சூரிய வெப்பத்தால் காய்ச்சிக் கடலுப்பு எடுப்பது போலவே, இயற்கையில் சிற்சில இடங்களில் கடல் அல்லது உப்பு ஏரி இருந்து மறைந்துபோன இடங்களிலிருந்தும் உப்பு கட்டி கட்டியாய்க் கிடைக்கிறது. இதுவே கல்லுப்பு. காசியிலுள்ள பெரிய கட்டிகளைப் பார்க்கும்போது இதைப் பாறையுப்பு என்று கூடச் சொல்லலாம் போலிருக்கிறது. பாலஸ்தீனத்தை யொட்டிய ஓத்தகடலிலும், அமெரிக்க யுடா மாகாணத்தைச் சேர்ந்த பெரிய உப்பேரியிலும் இயற்கையாகவே உப்பு மிகுதியாகவுண்டு. ஜெர்மனியில் ஸ்டாஸ்பர்ட் என்ற இடத்தில் கல்லுப்பு ஏராளம்; இதுவும் இயற்கையில் கடலிருந்து மறைந்துபோன இடம். இங்கிலாந்தில் செஷையரிலுள்ள உப்புப் பாறைகளும் இப்படிப் பட்டவையே.

இந்த இடங்களிலெல்லாம் உப்புப் பாறையானது அடுக்கடுக்காய் காணப்படுகிறது. சிலஇடங்களில் 300 அடி ஆழம் வரையுமுண்டு. ஸ்டாஸ்பர்டில் காணப்படுவது 1000 அடி ஆழமுடையது. ஆனால், இது அபூர்வம். பண்டைக் காலத்தில் இங்கிருந்த கடல் சுவறி நீரற்றுப் போனபோது, அதிலிருந்த பல்வகை உப்புக்கள் முக்கியமாய் நான்கு அடுக்காகப் படிந்தன. முதலடுக்கு மேல் மட்டத்திலுள்ளது, எளிதில் கரையாத கால்ஸியம் கார்பொனேட், மக்னீஷியம் கார்பொனேட் என்ற உப்புக்கள். அடுத்த அடுக்கு, கால்ஸிய, மக்னீஷிய ஸல்பேட், உப்புக்கள். அடுத்தது நன்ருய்க் கரையக்கூடிய சாமானிய உப்பு, ஸோடியம் குளோரைடு. கடைசி அடுக்கு, பொடாஸியம், மக்னீஷியம் என்பவற்றின் கரையக்கூடிய உப்புக்கள்.

1934-38 வருஷங்களில், சராசரி வருஷந் தோறும் உலகத்தில் சுமார் மூன்றேகால்கோடி டன் உப்பு உற்பத்தியாயிற்று. இதில் அமெரிக்கா 23 சதவீதம், ருஷ்யா 13 சதவீதம், ஜெர்மனி 9, சீனு 9, பிரிட்டன் 9, பிரான்ஸ் 6, இந்தியா 5.8, இத்தாலி 4 சதவீதம்; இன்னும் 60 நாடுகள் உப்பு உற்பத்தி செய்தன.

எவ்வளவோ பெரிய தேசமாகிய இந்தியா உலக உற்பத்தியில் ஆறு சதவீதத்துக்குக் குறைவாகத்தான் உற்பத்திசெய்ய முடிந்ததா என்று ஆச்சரியப்படலாம். இங்கிலாந்தின் நன்மைக்காக வென்றே உயிர்வாழ்ந்து வருகிற இந்தியா வெறென்னதான் செய்யமுடியும்? இந்திய உற்பத்தி பெருகிவிட்டால், இங்கிலாந்திலிருந்து ஸ்டாண்டர்டு ஸால்ட்டைப் பெட்டியிலடைத்து இந்நாட்டில் கொண்டுவந்து விற்பதெப்படி?

கொஞ்ச காலத்துக்குமுன் நான் கேள்விப்பட்டிருந்த விஷயமொன்றும் இப்போது ஞாபகம் வருகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது எனக்குத் தெரியாது.

கப்பல்களில் பாரம் குறைந்திருந்தால், கப்பல் சரியாக அமிழ்ந்தி மிதக்கும் பொருட்டு, கனத்துக்காக வேண்டிச் சில சமயம் மணல் மூட்டைகளை ஏற்றுவார்களாம். இங்கிலாந்திலிருந்து இப்படி வந்த கப்பல்களில் மணலுக்குப் பதிலாக உப்பு மூட்டைகளை ஏற்றிவந்தார்கள். பிரிட்டிஷ் சாமான்களுக்கு ஏற்பட்ட சந்தையாகிய இந்தியாவில் உப்பு மூட்டைகளும் விலை போயின. இது காரணமாக, இங்கிலாந்தில் உப்பு உற்பத்திப் பெருக்கமும் இந்தியாவில் சுருக்கமும் ஏற்படத்தானே செய்யும்?

சாப்பாட்டுக்குப் பயன்படுவது தான் உப்புக்கு உபயோகம் என்று நாம் நினைப்போம். இது சரியல்ல. சாப்பாட்டில் உபயோகமாவது மிகவும் குறைவு. இரசாயனத்தொழிலில் வேறெத்தனையோ முக்கிய உபயோகங்களிருக்கின்றன. உலக உற்பத்தியில் சுமார் 40 சதவீத உப்பு. சோடா-ஆஷ் என்னும் சோடியம் கார்பொனேட் செய்ய உதவுகிறது. இந்தச் சோடியம் கார்பொனேட்டானது, கண்ணாடி, சவுக்காரம், அழுக்கெடுக்கிற சோடாமாவு முதலியன செய்யத் தேவைப்படுகிறது. காகிதத் தொழிலுக்காக வேண்டி சோடியம்-ஸல்பேட் செய்யவும் இது வேண்டியிருக்கிறது.

உப்பு நீரில் மின்சாரத்தைப் பாய்ச்சி காஸ்டிக் சோடா (சோடியம் ஹைட்ராக்ஸைடு) செய்யப் பெறுகிறது. இதவும், சவுக்காரத் தொழில், காகிதத் தொழில், நூல் செய்யுந்தொழில் முதலியவற்றுக்கும், அலுமினியம் செய்யவும் பெட்ரோல் சுத்தம் செய்யவும் பயன்படுகிறது.

சோடியம் குளோரைடாகிய உப்பிலிருந்து கிடைக்கிற குளோரின் வாயுவுக்கு எத்தனையோ உபயோகம், காகிதத்துக்கு உபயோகிக்கிற மரச்சோறு முதலியவற்றை வெளுக்க இது வேண்டியிருக்கிறது. நீரிலுள்ள கிருமிகளைக் கொல்லவும் இது பயன்படுகிறது. சென்னைக் குழாய்த் தண்ணீரின் நாற்றமெல்லாம் குளோரின் வாயுவின் நாற்றமென்பது நமக்குத் தெரியும். ஹைட்ரோகுளோரிக் ஆஸிட் என்னும் திராவகம் செய்யவும், உலோகத் தொழிலிலும் இவ்வாயு உபயோகப்படுகிறது.

மெலெண்ணெய்ச் சாயவகைகள், மண்பாண்டத் தொழில், உணவுப் பொருளைக் குளிரவைக்கும் ரிப்ரிஜெரேடர்கள்முதலியன அதிக அளவு உப்பை உபயோகிக்கின்றன. பாறையுப்பானது, தோல்பதனிடும் தொழிலிலும், இரசாயன எருச் செய்விதிலும் பயன்படுகிறது. உப்பிலிருந்து செய்யும்சோடியம் குளோரைட் என்ற உப்பானது, களைகளைக் கொல்ல உபயோகமாகிறது. சோடியம் என்ற தனி உலோகமும் சாமானிய உப்பிலிருந்துதான் செய்யப் பெறுகிறது.

இங்ஙனமாக, உப்புக்குள்ள உபயோகத்துக்குக் கணக்கேயில்லை. மக்களும் விலங்குகளும் தாவரமும் உண்ணும் உப்புக்கு அளவில்லை. ஆனால், காலக்கிரமத்தில் இவை அழிவெய்த, இவற்றிலுள்ள உப்பும் மண்ணோடு மண்ணாகி, மழை நீரில் கரைந்து, ஆற்றோடுபோய்க் கடலில்சேருகிறது. மீண்டும் கடலிலிருந்து உப்பெடுத்து உபயோகிக்கிறோம். மீண்டும் அவ்வுப்பு கடலுக்கேபோகிறது. இது என்ன விசித்திரம்!



# லைப்பாய் பழக்கத்தைக்கூட அவள் கற்றிருக்கிறாள்!



ஊசியால் தைக்கும் போதெல்லாம் பிரயோஜனமுள்ள ஒரு சிறு பெண்ணாவதற்கு அவள் கற்றுக்கொள்ளுகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்கும் பழக்கத்தை அவள் அறிந்திருக்கிறபடியால் ஆரோக்கியமுள்ள ஒரு பெண்ணாக அவள் வருவாளென்றும் தன் தாய்க்குத் தெரியும். ஆரோக்யத்திற்கும், பலத்திற்கும் கண்ணுக்குத் தெரியாத சத்துருவாகிய அழுக்கு அபாயத்திலிருந்து இப்பழக்கம் அவளைப் பாதுகாக்கிறது.




**லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்**

LEVER BROTHERS (INDIA) LIMITED

L 81-50 TM

# (GORDO) கோர்டோ தயாரிப்புகள்

## கோர்டோ - கார் (GORDO-CAR)

துருப்பிடிப்பதைத் தடுத்து பளபளப்பைக் காக்கிறது. கார்கள், சைகில்கள், இரும்புப் பெட்டிகள், முதலியவைகளிலுள்ள குரோமியம் பாகங்களை எப்பொழுதும் பளபளப்பாக வைத்திருக்கிறது.

¾ அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1-0-0

## கோர்டோ - பிலிம் (GORDO-FILM)

பிலிம்களுக்கு, கரிமலசத்து நல்ல உறுதியைக் கொடுப்பதுடன், உஷ்ணத்தை தடுத்து, பொட்டுக்கள் விழாமல், சுத்தமாகக் காப்பாற்றுகிறது.

1 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 4-0-0

## கோர்டோ - கிளாஷைன் (GORDO-GLASHINE)

காரிலுள்ள காற்றுத் தட்டிகளின் கண்ணாடிகள், முகம் பார்க்கும் கண்ணாடிகள், மூக்குக் கண்ணாடிகள் முதலியவைகளை, பளபளப்பாக சுத்தம் செய்கிறது. மங்கலை அறவே நீக்குகிறது. மோட்டார் வைத்திருப்பவர்களுக்கும், ரயில்வே கம்பெனிகளுக்கும், ஹோட்டல்களுக்கும், குடும்பஸ்தர்களுக்கும் மிகவும் உபயோகமானது.

1 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 2-0-0

வியாபாரக் கமிஷன்:

ஒரே சமயத்தில் 12 டின்களோ அதற்கு மேலோ வாங்கினால் 12½% கமிஷன் கொடுக்கப்படும்
ஒரே சமயத்தில் 12 டின்களோ அதற்கு மேலோ வாங்கினால் பாக்கிங், தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

வியாபார விபரங்களுக்கு எழுதவும்:

**THE S. I. T. E. COMPANY (MADRAS) LIMITED**

64, MINT STREET
P. T. MADRAS

Grams: "SITECOMPY" Phone: "2417"



## பாரதியார் சரித்திரம்

செல்லம்மா பாரதி

பாரதியாரின் புதல்வி ஸ்ரீமதி தங்கம்மா பாரதி, தன் தந்தையாரின் சரிதத்தை தன் தாயார் சொல்வதுபோல மிக அழகாக எழுதியிருக்கிறார்கள். சில புதிய விஷயங்கள் அடங்கிய இரண்டாம் பதிப்பு. அழகிய படங்களுடன். காலிகோ பைண்டு.

விலை ரூ. 2 0

தபால் செலவு தனி

## மகாகவி பாரதி

வ. ரா.

பல வருஷங்கள் நெருங்கிப் பழகியதன் காரணமாக, பாரதியாரின் வாழ்க்கையில் நேர்ந்த ரசமான சம்பவங்களை எளிய நடையில் எழுதியிருக்கிறார் வ. ரா., புதிய விஷயங்களுடன். திருத்திய இரண்டாம் பதிப்பு.

விலை ரூ. 3 0

தபால் செலவு தனி

காந்தி ஜயந்தியை முன்னிட்டு இரண்டுக்கும் சேர்த்து முன்பணம் அனுப்புபவர்களுக்கு அக்டோபர் 31௳ வரை தபால் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்

**சக்தி காரியாலயம்**

ராயப்பேட்டை சென்னை | வடக்கு வெளி வீதி மதுரை | வெரைடி ஹால் ரோடு கோயமுத்தூர் | ஹைரோடு திருநெல்வேலி

# செய்வதெப்படி?

**மகாத்மா காந்தி**

அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கமானது எவ்வளவு தூரம் பயனளித்திருக்கக் கூடுமோ, அவ்வளவு தூரம் பயனளிக்கவில்லை. இது ஏன் இப்படி என்று என்னையே நான் அடிக்கடி கேட்டுக் கொள்கிறேன். இங்கே, இப்போது நான் என் மனதில் தோன்றுவதைப் பகிரங்கமாய்ச் சொல்லி, தொண்டர்களோடு ஆலோசனை புரிந்து, இதற்கொரு வழி கண்டு பிடிக்க முயலுகிறேன்.

நாம் யோசியாமலே, காங்கிரஸ் அமைப்பையே பின்பற்றி, கமிட்டிகளை ஏற்படுத்துகிறோம். இப்படிச் செய்வதன் மூலம், கிராமக் கைத்தொழிலைப் பொது மக்களிடையே பரப்பி விட்டதாகவும், அதை முன்னுக்குக் கொண்டுவந்து விட்டதாகவும் நினைத்து விடுகிறோம். காங்கிரஸ் ஒரு ஜனநாயக ஸ்தாபனம். ஆகையால், அதற்கு ஜனங்களிடையே இருந்து தேர்ந்தெடுத்தவர்களைக் கொண்ட கமிட்டிகளை ஏற்படுத்தி, அவற்றின் மூலமே செயலாற்ற வேண்டும். இதை நாம் மறந்து விடுகிறோம். அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கமும், அது போன்ற இதர ஸ்தாபனங்களுமோ, அவ்வாறன்றிச் சுயமாய் அமைந்தவை; குறிப்பிட்ட காரியங்களைச் செய்து முடிக்க ஏற்பட்டவை. அநேக சமயம், மிகத் திறமை வாய்ந்த தொழில் நுணுக்க அறிவு இருந்தாலொழிய, அவற்றால் செயலாற்ற முடியாது. அவை புரியும் குறிப்பிட்ட செயலைப் பாராட்டுகிறவர்களிடமிருந்து பணம் வசூலிக்கப் பெறுகிறது. வசூலித்த பணத்தை உரிய காரியத்துக்காகப் பயன் படுத்துவதற்கு அவை பொறுப்பேற்றுக் கொண்டு, அந்தப் பணத்தின் காப்பாளராகின்றன. நாம் செய்கிற வேலையைப் பற்றிக் கூறுகிற புத்தகங்களைப் பல இடங்களிலுமிருந்து ஒன்று திரட்டி, ஆய்ந்து படிக்கிறோம். நிபுணர்களைத் தேடிப்போகிறோம். கிடைத்த நிபுணர்களைப் பயன்படுத்திக்கொள்கிறோம். நிபுணர்கள் கிடைக்காவிட்டால், நாமே நிபுணர்களாகி விடுகிறோம். நாம் எவ்வளவுக்கெவ்வளவு சலியாமல், மனமார உழைக்கிறோமோ, நமது அறிவு எவ்வளவுக்கெவ்வளவு வளர்கிறதோ, அதே அளவுக்குத்தான் நமது வேலை முன்னேறும். வேலை என்னவோ பிரபலமடையாமல் போகலாம்; பொதுவாய் எல்லாருக்கும் தெரியாத ஒன்றாய்க்கூட இருந்து விடலாம். அப்போது நாம் என்ன செய்யவேண்டும்? அதை நாமே பிரபலமடையச் செய்ய வேண்டும். எல்லாருக்கும் தெரியும்படிச் செய்யவேண்டும். ஜனநாயக முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் சரி, சர்வாதிகார முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும் சரி, உலகமெங்கணுமே உள்ள இந்த மாதிரி

எதை எடுத்தாலும், 'ஜனநாயகம்' செய்ய முடியாது. சில நிர்மாண காரியங்களை நடத்த நிபுணர்களால்தான் ஆகும். கிராமக் கைத்தொழில் சங்கம் வேலை செய்ய வேண்டிய முறையை, மகாத்மா விளக்குகிறார். 'கிராம உத்தியோக்' பத்திரிகை ஆசிரியரின் அனுமதியோடு, இதனை வெளியிடுகிறோம்.

சங்கங்கள் கட்டாயம் வேலை செய்தே ஆகவேண்டும். எந்த நிர்வாகத்தின் கீழே இருந்து வந்தாலும் சரி. ஒன்று ஜனங்களின் ஆதரவைப் பெற்று வேலைசெய்து வரவேண்டும்; அல்லது அவர்களின் எதிர்ப்புக் கிடையிலும் வேலைசெய்து வரவேண்டும். ஜனநாயக நிர்வாகமானாலும் சரி, சர்வாதிகார நிர்வாகமானாலும் சரி, வேலை முறைமட்டும் இரண்டின் கீழும் ஒரேமாதிரிதானிருக்கும்.

நம்மைப் பொறுத்தவரையில், அ. இ. சர்க்கா சங்கம், அ. இ. கி. கை. சங்கம், ஹிந்துஸ்தான் தாலிமி சங்கம், முதலியவை எல்லாம், ஒவ்வொன்றும், சுய ஆட்சி முறையில், தனித்தனியாய் நடந்துவந்த போதிலும், இவை அனைத்தும் காங்கிரசாலேயே உண்டாக்கப்பட்டவை. எல்லாக் காங்கிரஸ்காரரின் உற்சாகமான ஆதரவும் இவற்றுக்கு வேண்டும். அதோடு, காங்கிரஸ்காரர் அகில இந்தியாவின் பிரதிநிதிகள் என்ற முறையில், நாடெங்கும் உள்ள இந்தியர்களின் பரிபூரண ஆதரவும் இந்த ஸ்தாபனங்களுக்கு இருந்துவர வேண்டும். ஆனல், இது உடனே நடந்து விடுமா? அதற்கு முன், என்ன மாதிரி நிபுணர்கள் நமக்குத் தேவையோ, அந்த மாதிரி நிபுணர்கள் இந்தியா பூராவும் அங்கங்கே கிடைக்கச் செய்து விடவேண்டும்.

ஆகவே, முதன் முதலில் நமக்கு வேண்டியது என்ன? நேர்மையான நிபுணர்களைக் கொண்ட ஒரு மத்திய ஸ்தாபனம் இருக்க வேண்டும். வெற்றி பெறுவதற்கு இதைவிட வேறே ராஜபாட்டை கிடையாது. தாம் செய்யும் வேலையைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிற நிபுணர்களாயிருந்தாலொழிய, கமிட்டிகளாலோ ஏஜண்டுகளாலோ ஒன்றையும் சாதித்துவிட முடியாது. எம். ஏ. படிப்புப் படித்த ஒருவர், என்னதான் கெட்டிக்காரராலும், கிராமங்களில் சர்க்காவைப் பரப்பிவிட முடியுமா?

தென்னை மரம், பனை மரம் ஆகியவற்றிலிருந்து வெல்லம்,

### என்ன மூடத்தனம்!

சில நாய்கள், தாம் போட்ட குட்டிகளிலேயே இரண்டொன்றைத் தின்றுவிடுகின்றன. பூனைகளும் இப்படியே செய்கின்றன. மனிதர்களும், தமது வர்க்கம் மிதமிஞ்சி உற்பத்தியாகி விடாதபடி செய்வதற்காகப் பலவிதமான கருத்தடை முறைகளைக் கையாளுகிறார்கள். இப்போது, பெரிய அளவில் நடந்துவரும் தொழிற்சாலைகளும் கருத்தடை முறையைக் கையாளத் தொடங்கி விட்டன. வடக்கு ஹெர்போர்ட் என்ற இடத்தில், ஒரு பெரிய அமெரிக்க மருத்துவசாலையில் சொற்பொழிவாற்றியபோது, ஜே. பி. பிரீஸ்ட்லி என்ற பிரபல ஆங்கில ஆசிரியர் பின்வருமாறு சொன்னர்: “ஆயிரம் மெத்தை விரிப்புகளைக் கும்பலாய்ப்போட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டார்கள். டன் கணக்கான பீங்கான் சாமான்களை ரோடு போடும் ஸ்டீம் ரோலரைக் கொண்டு நசுக்கித் தவிடு பொடியாக்கி விட்டார்கள். விலை உயர்ந்த பெரிய பியானோக்களில் ஏழு பியானோவை உடைத்துநொறுக்கிவிட்டார்கள்.” இதெல்லாம் எதற்காகத் தெரியுமா? விலைவாசி இறங்கி விடாமல் பார்த்துக் கொள்வதற்கும், பண்டங்களுக்குக் கிராக்கி கெட்டுப் போகாமல் செய்வதற்கும் தான்! இதைவிட அறிவீனம் வேறே என்ன இருக்க முடியும்?

— ஜே. சி. குமரப்பா

கருப்பட்டி ஆகியவற்றை எப்படிச் செய்வதென்று கற்றுக் கொடுத்து, இந்தத் தொழில் கிராமங்களில் பரவச்செய்துவிட அவரால் முடியுமா? 'மனித எரு உள்பட, கால்நடைகளின் சாணத்தை எப்படி நிலத்துக்கு எருவாக்கலாம். அவை எப்படி உரமாகும்,' என்றுதான் அவரால் கிராம ஜனங்களுக்குச் சொல்லித் தர முடியுமா? இவை பற்றியும், இவை போன்ற இதர கிளை வேலைகள் பற்றியும் விஷயமறிந்த நிபுணர்கள் நம்மிடமிருக்க வேண்டும்.

ஆளும் சர்க்கார் நமது சொந்தச் சர்க்காராயிருந்தால், அதுஎன்னதான் திறமை யற்றதாயிருப்பினும் நம்மிடம் தொழில் நுணுக்கப் பயிற்சிக் கூடங்கள் இருக்கும். ஏழு லட்சம் கிராமங்களிலே நேற்று நடந்து வந்து, இன்றும் நடந்து வருகிற ஒவ்வொரு பயனுள்ள முயற்சியையும் பற்றி இந்த இடங்களில் போய் ஆராய்ந்து பார்க்க வசதி இருக்கும்.

பொல்லாத காலம், நமக்கு இந்த வசதி இல்லை. ஆகவே, நமது சங்கங்கள், பிரசார ஸ்தாபனங்களாக ஆவதோடு, இந்த மாதிரி தொழில் நுணுக்க ஆராய்ச்சிக் கூடங்களாகவும் இருந்து தீர வேண்டி யிருக்கிறது. அதிலும், பிரசார ஸ்தாபனங்களாக ஆவதற்கு முன்னேயே, தொழில் பயிற்சிக் கூடங்களாக ஆகி யிருக்க வேண்டும். நான் சொல்வது சரி, என்றால் நாம் திருந்திக் கொண்டாகவேண்டும். திருந்திக் கொள்வது சிரமமாகவும், நமது பெருமையைப் பாதிக்கக்கூடியதாகவும் இருந்தாலும்கூட, திருந்திக் கொள்ளத்தான் வேண்டும்.

*

## வேஷத்துக்கேற்ற நடிப்பு

ஸாதுக்களுக்குரிய காஷாய வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டால், ஒருவன் உண்மையில் ஸாதுவைப்போலவே நடந்தொழுக வேண்டும். நாடகத்தில், ராஜா வேஷம் போட்டுக்கொள்பவன் எப்போதும் ஒரு ராஜாவைப் போலவும், மந்திரி வேஷம் போட்டுக் கொள்பவன் மந்திரியைப் போலவும் நடிப்பதை நாம் பார்க்கிறோமல்லவா?

ஒரு சமயம் ஒரு கிராமத்து விதூஷகன் ஒருவன், ஸன்யாஸியைப் போல் காஷாயத்தைத் தரித்துக்கொண்டு, கிராமாதிகாரியிடம் போனான். கிராமாதிகாரி விதூஷகனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க வந்தார். அதை அவன் வேண்டாமென்று மறுத்துவிட்டு அப்பால் போனான். கொஞ்சநேரம் கழித்து, அவன் ஸ்நானம் செய்து உடையை மாற்றிக் கொண்டு, அதிகாரியிடம் வந்து, அவர் கொடுப்பதாக வந்த பணத்தைத் தரவேண்டு மென்று கேட்டான். ஸாதுவைப்போல் உடை யுடுத்திருக்கையில், அவனால் பணத்தைத் தொடக்கூட முடியவில்லை. இப்போதோ அவன் கால்ரூபாய் கொடுத்தாலும் திருப்தியடைபவனாக இருந்தான்.

— ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

## வானவில்லும் வியாபாரி குழந்தையும்

ஒரு பெரிய பணக்கார வியாபாரி தெருவிலே நடந்தார். அவர் குழந்தை கூடச் சென்றது. வானத்திலே ஒரு வானவில் தோன்றியது. குழந்தை முதன்முதலாக இப்போதுதான் ஒரு வானவில்லைக் கண்டது. "அடாடா! இதென்ன அருமையான விளம்பரம்! என்ன சரக்குக்கு அப்பா, இந்த விளம்பரம் போட்டிருக்கிறார்கள்?" என்று கேட்டது.

# நீதிபதி தீர்ப்பு

உத்திரன்

குளிர் காலம் தொடங்கியது. மழைபோல் பனி பெய்ய ஆரம்பித்தது. குளிர் தாங்கமாட்டாமல் மக்கள் கஷ்டப்பட்டார்கள்.

ஏழை ஒருவன் தன் பணக்காரச் சகோதரனிடம் போனான். குளிர் தாங்காமல் அவன் உடம்பு வெட வெடவென்று நடுங்கியது. அவன் தன் பணக்காரச் சகோதரனைப் பார்த்து, "அண்ணா, குளிர்காலம் வந்துவிட்டது. கொஞ்சம் விறகு கொண்டு வந்து சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். தயைசெய்து உன் குதிரையைக் கொஞ்சம் இரவல் கொடு" என்று வேண்டினான்.

தன் குதிரையைக் கொடுக்க, பணக்காரனுக்கு முதலில் இஷ்டமில்லை. ஏதேதோ சாக்குகள் சொன்னான். ஆனால், ஏழை விடுவதாயில்லை. ஆகவே, பணக்காரச் சகோதரன் முகத்தைச் சுளித்துக் கொண்டே, "உன் சாகஸம் எல்லாம் எனக்குத் தெரியாது என்று நினைக்காதே. எப்படியாவது என் குதிரையைத் தட்டிக் கொண்டு போய் விட வேண்டும்; இதுதானே உன் ஆசை? இந்தத் தடவை மட்டும் என் குதிரையை இரவல் தருகிறேன். இனிமேல் இந்த இரவல் விவகாரத்துக்கே என்னிடம் வராதே" என்றான்.

இது ஒரு ருஷ்ய நாடோடிக் கதை. தமிழ் நாட்டிலும், சற்றேறக்குறைய இதேமாதிரி ஒரு கதையுண்டு. நாடோடிக் கதைகள், உலகத்தின் எந்த மூலையிலிருந்து எந்த மூலைக்குவேண்டுமானாலும் பிரயாணம் செய்யும் என்பதற்கு ஓர் உதாரணம்போல் இது விளங்குகிறது.

"அண்ணா! அண்ணா! வெறும் குதிரையை மட்டும் வைத்துக் கொண்டு, நான் என்ன பண்ணுவது? வண்டியில் அதைக் கட்ட வேண்டுமே! அதற்குரிய சேணத்தையும் தாருங்கள்" என்று கெஞ்சினான் ஏழை.

பணக்காரச் சகோதரன் இதைத் காதில் வாங்கவே இல்லை. "ஏதோ கஷ்டப்படுகிறாயே என்று இரங்கி உதவி செய்தால், மேலும் மேலும் தொந்தரவு செய்துகொண்டேயிருக்கிறாயே. என் கண்முன் நிற்காதே; ஓடிப் போ. நின்றால் நாயை ஏவிவிடுவேன்" என்று எரிந்து விழுந்தான்.

சேணம் கிடைக்காத வருத்தத்தோடு, குதிரையை மட்டும் ஓட்டிக்கொண்டு போனான் ஏழை. "குதிரையின் வாலில்தான் வண்டியைக் கட்டி ஓட்டவேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

எல்லாம் கொஞ்ச நாள் ஏழையின் திட்டப்படியே நன்றாக நடந்தன. ஆனால், கடைசியில் ஒரு நாள் வந்தது ஆபத்து!

அன்று வண்டி நிறையப் பாரம் ஏற்றிக் குதிரையை அடித்து ஓட்டினான். குதிரை மிரண்டு ஓடிற்று. வண்டியின் பாரத்தால் குதிரையின் வால் அறுந்து போயிற்று!

ஏழைச் சகோதரன் பீதியடைந்தான். மெதுவாகக் குதிரையைப் பணக்காரனிடம் கொண்டுபோனான். "அண்ணா,

இந்தா, உன் குதிரை. இந்த ஏழைக்கு உதவி செய்ததற்கு வந்தனம்'' என்று நன்றி தெரிவித்தான்.

"அண்ணு! உன் குதிரை மிக்க அற்புதமான குதிரை. என்ன வேகம்! என்ன வலிவு! என்ன வனப்பு! ஆனல்—ஆனல், இதன் வால்மட்டும் அறுந்து போயிற்று. இருந்தாலும், இப்போதும் இது உயர்ந்த குதிரைதான். ரொம்ப வந்தனம்'' என்று, மெள்ள மெள்ள வால் அறுந்ததையும் தெரிவித்தான்.

பணக்காரனுக்குக் கோபம் வந்து விட்டது. "கொள்ளைக் காரா! திருட்டுக் கழுதை! என் குதிரை வாலை அறுத்து விட்டு, அதை மட்டமான குதிரையாக்கி விட்டாயே! இதோ உன்னை என்ன பண்ணுகிறேன், பார்! உன்னிடம் நஷ்டஈடு வாங்காமல் விடுவதில்லை'' என்று உறுமினன்.

ஏழையின் வேண்டுகோள், கெஞ்சல் ஒன்றும் பயன்படவில்லை. அவனை இழுத்துக் கொண்டு நீதிபதியின் கோர்ட்டுக்குப் புறப்பட்டான் பணக்காரன்.

மாலைக் காலம். ஒரு சத்திரத்தைக் கண்டார்கள் இந்தச் சகோதரர்கள். இரவை அங்கே கழிப்பதெனத் தீர்மானித்தார்கள். சத்திரத்துக்குள் புகுந்தார்கள்.

சத்திரக்காரன் பணக்காரனை மட்டும் வரவேற்றன். தன்னிடமிருந்த விலையுயர்ந்த சாராயத்தைக் கொணர்ந்தான். பணக்காரனுக்கு மட்டும் வழங்கினன். நாட்டு வழக்கப்படி, தானும் அவனுடன் சேர்ந்து குடித்தான்.

ஏழையை அவன் கவனிக்கவில்லை. பசியோ காதை அடைத்தது. தாகம் நாக்கை வறட்டியது. ஏழை என்ன செய்வான், பாவம்! பேசாமல் குளிருக்கு அடக்கமாகக் கணப்பின் மேல் தட்டில் படுத்துக்கொண்டான். தூங்கி விட்டான்.

ஆனல், தூக்கத்தில் பல புதுமைகள் விளைகின்றன. கீழே கண்ணுடி டம்ளர்களும், தட்டு முட்டுச் சாமான்களும் விளைத்த சத்தம் ஏழையின் தூக்கத்தைக் கலைத்தன. அவன் அப்படியும் இப்படியும் புரண்டான். கடைசியில், கணப்பின் மேல் தட்டிலிருந்து புரண்டு, சத்திரக்காரனின் குழந்தை படுத்துக் கொண்டிருந்த தொட்டிலின்மேல் விழுந்தான். இவன் விழுந்த வேகத்தில் குழந்தை நசுங்கி இறந்து போய் விட்டது.

சத்திரக்காரன் ஓவென்று கத்தினன். "இந்தப் பாவி என் குழந்தையைக் கொன்று விட்டானே! ஐயோ! என் ஒரே குழந்தைபோய் விட்டதே!'' என்று அழுதான்.

"உன்னைத் தண்டிக்காமல்விட்டால் என் மனம் சாந்தி யடையாது'' என்று ஏழையைப் பார்த்துச் சத்திரக்காரன் கோபத்துடன் கறுவினன். அவனும் நீதிபதியின் கோர்ட்டுக்கு அந்தச் சகோதரர்களுடன் புறப்படத் தயாரானன்.

மறுநாள் காலையில் மூவரும் புறப்பட்டார்கள். ஏழை தன் விதியை நொந்துகொண்டான். அந்தப் பணக்காரக் கும்பலின் முன் ஏழைசொல்லை எவரும் நம்ப மாட்டார்கள் என்று உணர்ந்தான். ஆகவே, தற்கொலை செய்து கொள்வது என்று தீர்மானித்தான்.

இவர்கள் சென்ற சாலையில் ஒரு குறுகிய பாலம் இருந்தது. ஏழை திடீரென்று அதன் கைப் பிடிச் சுவரின்மேல் ஏறினான். கீழே குதித்து விட்டான்.

விதி, மனிதர்கள்மீது ஆச்சரிய மான திருவிளையாடல்களைப் புரிகிறது! பாலத்தின் அடியில் ஒரு கிழவனும் அவன் மகனும் ஒரு வண்டியில் போய்க்கொண் டிருந்தார்கள். ஏழைச் சகோ தரன் கிழவன்மேல் விழுந்தான். இவன் விழுந்த வேகத்தில் கிழ வன் இறந்துபோனான். ஆனால், இவன் மாத்திரம் ஏதோ தெய்வா தீனமாய் ஓர் அடிகூடப் படாமல் தப்பித்துக்கொண்டான்.

"ஐயையோ! இந்தக் கொலை காரன் என் தகப்பனாரைக் கொன்றுவிட்டானே!" என்று கூவினான் வண்டிக்காரன். இதற்காக, அவனைத் தூக்கில் தொங்க விட்டால் அல்லாமல் என் மனம் அமைதி யுறாது" என்று உறுமினான்.

ஆகவே, ஏழைச் சகோதரன் கீழேயிருந்து எழுந்து, பாலத் துக்குமேல் வந்தபோது, அங்கே கோர்ட்டுக்குப் போகிறவர்கள் நான்கு பேர் இருந்தார்கள்.

ஏழையின் மனம் நிராசையால் நிரம்பியது. பணமில்லாத ஏழை யான அவன் கோபமூண்ட பணக்கார எதிரிகளிட மிருந்து தப்ப வழி ஏது? தளர்ந்த நடை யுடன் அவர்களைப் பின்தொடர்ந் தான்.

வழியில் ஒரு பெரிய கல்லைப் பொறுக்கி எடுத்தான் அந்த ஏழை. தன் கைக்குட்டையில் சுற்றினான். "இந்த நீதிபதி மட் டும் எனக்கு எதிராகத் தீர்ப்புக் கூறட்டும். இவன் மண்டையை உடைத்து விடுகிறேன், இந்தக் கல்லாலேயே. தண்டனை என் னமோ கிடைக்கப் போகிறது. ஏன் நிரபராதியாகத் தண்டனை யடைய வேண்டும்?" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

நீதிபதி ஆடம்பரத்தோடு, தன் ஸ்தானத்தில் அமர்ந்திருந் தான். இந்த நால்வரும் அவன் முன் நிறுத்தப்பட்டபோது, அவ னுடைய குள்ளநரிக் கண்கள் பளபள என்று பிரகாசித்தன.

முதலில் பணக்காரச் சகோ தரன் தன் குற்றச்சாட்டை முறையிட்டுக் கொண்டான்,

"இந்த உதவாக் கரைப் பயல் -என் சகோதரன்தான்-என் குதி ரையின் வாலை அறுத்துவிட்டான். அதற்கு நஷ்ட ஈடு தரும்படித் தீர்ப்புச் செய்ய வேண்டும்."

ஏழை பணக்காரனுக்குப் பின் னால் நின்றுகொண் டிருந்தான். அவன் கோபத்துடன், நீதிபதி யைப் பார்த்து, கல் சுற்றப்பட் டிருந்த கைக்குட்டையைக் காட் டினான்.

நீதிபதியின் கூரிய பார்வைக்கு இது தப்பவில்லை. "ஒரு நூறு பணமாவது அந்தக் கைக்குட் டைக்குள் இருக்கும்" என்று தனக்குள் சொல்லிக் கொண் டான். நீதிபதி பின்பு தீர்ப்புக் கூறினான்.

"உன் குதிரையின் வால் வள ரும் வரையில், அவன் அதை வைத்திருக்க வேண்டும். வளர்ந் ததும், அதை உன்னிடம் சேர்ப் பிக்க வேண்டும்."

தீர்ப்பைக் கேட்டதும் பணக் காரன் திகைத்துப் போனான்.

அடுத்தபடி சத்திரக்காரன் தன் குறையை நீதிபதியிடம் முறையிட்டான்.

"இவன் என் குழந்தையை வேண்டுமென்றே கொன்றுவிட்டான்."

இப்போதும் ஏழை சத்திரக்காரனுக்குப் பின்னால் நின்றபடியே, தன் கைக்குட்டையைப் பெருங் கோபத்துடன் வீசிக்கொண்டிருந்தான்.

நீதிபதி இதைப் பார்த்தான். "இன்னொரு நூறு பணம்!!" என்று தனக்குள் சந்தோஷப்பட்டுக்கொண்டான். தீர்ப்புக் கூறினான்.

"இதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஒரு குழந்தை பிறக்கும் வரையில், உன் மனைவி இவனோடு இருக்கவேண்டும். பின்பு, குழந்தையும் தாயுமாக உன்னிடம் ஒப்புவித்துவிட வேண்டும்."

சத்திரக்காரன் தீர்ப்பைக் கேட்டான். திடுக்கிட்டுப் பின்வாங்கினான்.

மூன்றாவதாக, நீதிபதியின் முன்பு கிழவனின் மகன் வந்தான். தன் குறையைக் கூறினான். "இந்த முரடன் பாலத்தின் மேலிருந்து என் தந்தையின் மீது குதித்து அவரைக் கொன்றுவிட்டான்" என்றான்.

இப்போதும் ஏழை அவன் பின்னே நின்றுகொண்டு, கோபத்துடன் முணுமுணுத்துக்கொண்டே, தன் கைக்குட்டையை வீசிக்கொண்டிருந்தான். நீதிபதி கவனித்தான். "நல்லது; முந்நூறு பணம்! நல்ல தொகைதான்!" என்று நினைத்து மகிழ்ச்சியடைந்தான்.

மகனைப் பார்த்து, "அந்தப் பாலத்துக்கே இவனை அழைத்துக்கொண்டு போ. உன் தகப்பனார் இறந்த இடத்தில் இவனை நிறுத்து. நீ பாலத்தின் கைப்பிடியிலிருந்து இவன்மேல் குதித்துச் சாகடித்துவிடு" என்று தீர்ப்பளித்தான் நீதிபதி. "இப்போது திருப்திதானே?" என்று கேட்டான்.

சில நாட்கள் சென்றன. ஏழைச் சகோதரன் பணக்காரச் சகோதரனிடம் போனான். "நீதிபதியின் தீர்ப்புப்படி குதிரையை ஓட்டிக்கொண்டுபோக வந்திருக்கிறேன்" என்று பணிவாய்ச் சொன்னான்.

பணக்காரன் பார்த்தான்: "இதோ பார், தம்பி! நமக்குள் என்ன வித்தியாசம்! நான் கோபத்திலே புத்திகெட்டுப் போய்விட்டேன். இந்தா பத்துப் பணம். அதோ, அந்த மூன்று ஆடுகளையும் ஓட்டிக் கொண்டு போ. எல்லாவற்றையும் மறந்துவிடு" என்று விநயமாகச் சொன்னான்.

பின்பு, சத்திரக்காரனிடம் ஏழை போனான். "நீதிபதியின் தீர்ப்புப்படி உன் மனைவியை என்னோடு அனுப்பிவை. என் கடமையைச் செய்ய, நான் தயார்" என்றான்.

"நண்பரே! ஏதோ போதாத வேளை. தப்பபிப்ராயத்தாலே நடந்துவிட்டது. ஒரு குழந்தை போனால் என்ன பிரமாதம்! ஒரு வாய்ச் சோற்றுச் செலவு மிச்சம். நடந்ததையெல்லாம் மறந்துவிடுங்கள். நமது சிநேகத்துக்கு அறிகுறியாக, அதோ அந்தப் பசுவை ஓட்டிக்கொண்டு போங்கள். இதோ...நூறு பணம். இதைச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்று சத்திரக்காரன் வணக்கத்துடன் உறவு கொண்டாடினான்.

பிறகு, ஏழை கிழவன் மக னிடம் போனான். "நீதிபதி சொன்னபடி நடக்க, நான் தயார். வா பாலத்துக்கு. நான் கீழே நிற்கிறேன். நீ உயரத்திலே, பாலத்தின் கைப்பிடியிலே யிருந்து குதி" என்றான்.

பையன் திடுக்கிட்டான். "ஹி, ஹி, ஹி" என்று பல்லை இளித்தான். "இதோ பார். நான் கிருஸ்தவன். பிறர் குற்றங் களை மன்னிக்கவேண்டியவன். எப்படியும் என் தகப்பனார் சாக வேண்டியவர்தான். கிழடு தட் டிப்போய்ச் சாவை எதிர்பார்த் திருந்தார். அந்த அதிருப்திகர மான சம்பவத்தை மறந்து விடு வோம்" என்றான். "இந்தா, இந்த ஆயிரம் பணத்தை எடுத் துக்கொள்" என்று ஏழைக்குப் பை நிறையப் பணமும் கொடுத் தான்.

மறு நாள் காலையில் முந்நூறு பணம் வாங்கி வருவதற்காக நீதிபதி தன் வேலைக்காரனை ஏழை யின் வீட்டுக்கு அனுப்பினான். வேலைக்காரன் ஏழையின் வீட் டுக் கதவைத் தட்டியபோது, அவன் தனக்குக் கிடைத்த பணத் தையும், ஆடு மாடுகளையும் பார்த் துப் பார்த்துச் சந்தோஷப்பட் டுக் கொண்டிருந்தான். வேலைக் காரன் சொன்னதைக் கேட்ட தும், "என்ன? முந்நூறு பண மா? இந்தக் கல்லைக் கொண்டு போய் உன் எஜமானிடம் கொடு. இதுதான் என் கைக்குட்டை யிலே இருந்தது என்று அவ னிடம் தெரிவி. அவன் மட்டும் எனக்கு விரோதமாகத் தீர்ப்புச் சொல்லியிருந்தால், இந்தக் கல் லாலேயே அவன் மண்டையைப் பிளந்து விடுவது என்றிருந் தேன்" என்றான் ஏழை.

நீதிபதி தன் வேலைக்காரனிட மிருந்து இதை அறிந்ததும், திக் பிரமை யடைந்தான். அவன் நா உலர்ந்து போயிற்று. தன் தலையைத் தடவிக்கொண்டே, "நல்ல காலம்! கடவுள்தான் காப் பாற்றினார்" என்று தனக்குள் ளேயே முணு முணுத்துக் கொண்டான்.

*

## நீதி விசாரணை

ஒரு வேலையுமில்லாமல், சந்தேகத்துக்கிடமாய்த் திரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, மூன்று முயல் குட்டிகள் கைது செய்யப் பட்டன. கோர்ட்டிலே வழக்கு நடந்தது.

நீதிபதி முதல் குட்டியை 'உன் தொழில் என்ன?' என்று விசாரித்தார்.

**முதல் குட்டி:** நான் கடற்கரையில் மணியாம் பருக்கைக் கல் பொறுக்குகிறவன்.

**நீதிபதி:** (இரண்டாவது குட்டியை நோக்கி) நீ?

**இரண்டாவது குட்டி:** நான் முதல் குட்டிக்கு உதவி செய்பவன்.

**நீதிபதி:** (மூன்றாவது குட்டியை நோக்கி) நீ?

**மூன்றாவது குட்டி:** நானா! நான் தான் மணியாம்பருக் கைக் கல்.



ஸ்ரீ அன்னிபெஸண்ட் : ஜனனம் 1847 ; மரணம் 1933. தியஸாபிக்கல் ஸொஸைட்டி தலைமை 1907-33. ராஜத்துவேஷமாய் எழுதியதாக இந்தியாவில் 1917-ஆம் ௵ கைதியாகி, பின்னால் விடுதலை யடைந்தார். இந்திய ஹோம் ரூல் இயக்கத்துக்குப் பாடுபட்டார். காங்கிரஸிலும் கலந்து கொண்டார்.





மேலே : வள்ளலார் இல்ல ஆசிரியர்களும் குழந்தைகளும். கீழே : குழந்தைகளின் விரதாச் சாரி விளையாட்டு. முன் பக்கம் : நாமக்கல் கவிஞர் விஜயம்.



# வாலாஜாபாத் பாடசாலை





மேலே : வள்ளலார் மாணவர் இல்லத்தின் ஒரு பகுதி. பக்கம்: 'அப்பா' என்று குழந்தைகள் அழைக்கும் ஸ்ரீ. மாசிலாமணி முதலியார்.



பக்கம் : குழந்தைகள் சாப்பிடுகிறார்கள்.







மேலே : விரதாச்சாரி விளையாட்டு. பக்கம் : கொத்தமங்கலம் சி. சு. ராமன் செட்டியார் கட்டித் தந்த விருந்தினர் இல்லம்.



பக்கம்: குழந்தைகள் பாலாற்றில் குளிக்கிறார்கள்.



எதிரி விமானங்கள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து நம் விமானங்களுக்குத் தெரிவிக்கும் ரேடார்.



விமான எதிர்ப்பு பீரங்கிப் பயிற்சி பெறும் ஓர் ஆப்பிரிக்காவாசி, ரேடார் இயந்திரத்தைச் சரி பார்க்கிறான்.



ரேடார் இயந்திரத்தின் முதல் படம் இது. இயந்திரம் தரையில் அமைக்கப்பட்டிருக்கிறது.



பிரிட்டிஷ் கான்வாய் கப்பல் ஒன்றில், ரேடார் இயந்திர அதிகாரி வேலை செய்கிறார்.





யுத்த முனைகளில் வேண்டிய இடத்தில் அவசரமாய் அமைத்துக்கொள்ளும் உயர்தரமான ரேடார்.



பிரிட்டிஷ் விமானப் படையில் சேவை புரியும் பெண் ஒருத்தி, ரேடார் இயந்திரத்தில் வேலை செய்கிறாள்.



ரேடார் மூலம் இயக்கப் பெறும் நவீன சோதனை விளக்கின் முதல் படம். வி - குண்டுகளை அழிக்க, இது பெரிதும் உதவி செய்தது.



தாழப் பறக்கும் எதிரி விமானங்களைக் கண்டு பிடிக்க, சங்கிலித் தொடர் போல் பிரிட்டனில் அமைக்கப்பட்ட ரேடார் இயந்திரங்களில் ஒன்று.

# ஓர் அரிய பாடசாலை

சுப. நாராயணன்

சொன்னால் நம்ப மாட்டீர்கள்; அவ்வளவு அற்புதமாய்க் காரியங்கள் நடக்கின்றன. உண்மையான விஷயங்கள், சிலவேளை கற்பனையையும் மிஞ்சி விடுவதுண்டு. அதற்கு இது சரியான ஓர் உதாரணம்.

முப்பது வருஷத்துக்கு முந்தி, விசித்திரமான ஒரு மனிதருக்கு விசித்திரமான ஓர் எண்ணம் உதித்தது. நாலே நாலு பிள்ளைகளை வைத்துக்கொண்டு, ஒரு கோயில் மண்டபத்தில், ஒரு பள்ளிக்கூடத்தைத் துவக்கினார். அதுவும், தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரிலேயே. எவ்வித ஆடம்பரமும் செய்யவில்லை; எவரிடமும் பண உதவி கோரவில்லை. வருஷக் கணக்காய்ச் சலியாமல் உழைத்தார். இரவென்றும் பாராமல், பகலென்றும் பாராமல், ஊர் ஊராய் அலைந்து திரிந்தார். தன்னல மற்ற உண்மை உழைப்புப் பயன் தந்தது. எண்ணற்ற பெருமக்கள் பாராட்டத்தொடங்கினார்கள்; வலியப் பொருளுதவினார்கள்; பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள்.

போன யுத்தத்தின்போது தன்னந்தனியாய் அவர் தொடங்கிய சிறு முயற்சி, இந்த யுத்தத்தின் போது-சரியாய் ஒரு தலைமுறைக்கப்புறம் - கண்டவர் கேட்டவரெல்லாம் வியந்து பாராட்டும் வண்ணம் ஒப்பற்ற அறிவுக் கோயிலாக விளங்குகிறது.

வா. தி. மாசிலாமணி முதலியாரவர்கள் தான் இந்த விசித்திர மனிதர். இன்றும் இவர்தான் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் அச்சாணி. இடையில் ஒன்பது (1932-41) வருஷங்கள், இவரது அறப்பணியில் பங்கு கொண்டு, பாடசாலையின் உள் விவகாரங்களைத் திறம்பட நிர்வகித்து, தமது சொந்தப் பணத்தில் எவ்வளவோ இதற்கு உதவி வந்த இவர் தமயனார் வா. தி. பஞ்சாட்சர முதலியாரவர்களும் இன்று உயிருடனில்லை. 700 சிறுவர் சிறுமியர்க்கு நண்பர் முதலியார் 'அப்பா'வாக விளங்குகிறார். அப்பாவின் குடும்பம் நிரம்பப் பெரிய குடும்பம். சுற்றுக் கிராமங்களிலிருந்தும், மாகாணத்தின் தொலைதூர இடங்களிலிருந்தும் நாளுக்கு நாள் பெருவாரியாக இவரை வந்தடைந்த குழந்தைகளின் வசதியை முன்னிட்டு, பன்னிரண்டு வருஷத்துக்கு முன் ஒரு மாணவர் இல்லம் ஏற்படுத்தினார். அன்பும் அருளும் நிறைந்த பெரியார் ராமலிங்க சுவாமிகள் நினைவுக் குறியாக இதை 'வள்ளலார் மாணவர் இல்லம்' என்றழைப்பது பொருத்தமே. இந்த இல்லம், ஒரு சிறு ஜனநாயக அரசாங்கம் போல், முற்ற முழுக்க மாணவர்களாலேயே நடத்தப்பெற்று வருகிறது. இப்போது இங்கே உள்ளவர்கள் 400 பேர். இவர்களில், 100 பேர் வருஷா வருஷம் இல்ல நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்

பூர்வ காலத்துக் குருகுலம்போல் நடக்கும் பாடசாலைகளில் மிக முக்கியமான ஒன்று வாலாஜாபாத் ஹிந்து மத பாடசாலை. அந்தப் பாடசாலையின் நிர்வாகம் மிக்க அருமையாய் நடைபெறுகிறது. நேரில் கண்ட நண்பர் அந்த விவரத்தைச் சொல்லுகிறார்.

தெடுக்கப் பெறுகிறார்கள். பத்துப் பத்துப் பேரைக்கொண்ட பத்து இலாகாக்கள் உண்டு. முதல் மந்திரி ஒருவர் உண்டு. கஜானா, சுகாதாரம், கல்வி, ஒழுக்கம், முதலிய சகல விஷயங்களையும் கவனிக்க ஏற்பாடு உண்டு. இந்த அரசாங்கத்தில் ஜாதி வேற்றுமை, மத வேற்றுமை கிடையாது. பிராமணரல்லாதார், பிராமணர், சைவர், வைஷ்ணவர், கிருஸ்தவர், முஸ்லிம், பௌத்தர், ஜைனர் எல்லாரும் ஏக குடும்பமாய் வாழ்கிறார்கள். 70 பேர் ஹரிஜனப் பிள்ளைகள் (படிப்பவர் மொத்தம் 175). பிள்ளைகளோடேயே தங்கி வாழும் ஆசிரியர் 15பேர் (மொத்தம் 35). இல்லத்தின்மேற்பார்வையாளராயிருக்கும் நா.ப. தணிகை அரசு அவர்களைப் பிள்ளைகள் "அண்ணா, அண்ணா" என்று அழைப்பதிலிருந்து, இவரது சேவை பிள்ளைகளை எவ்வளவு தூரம் மகிழ்வித்து வருகிற தென்பது புலனாகும். இல்லத்தின் நிர்வாகம், பழைய குருகுல முறையையும், நவீன 'ஹாஸ்டல்' முறையையும், ஓரளவு 'மிலிட்டரி' முறையையும் கலந்து நடைபெறுகிறது. சமையல் விஷயத்தில், அடுப்பில் ஏற்றி இறக்குவதற்கு மட்டும் மூன்று பெரியவர்கள் உண்டு. மற்றப்படி, இடத்தைக் கூட்டிப் பெருக்குவது, ஆற்றில் நீர் மொண்டு வருவது, காய்கறி நறுக்குவது, உணவு பரிமாறுவது முதலிய சகல வேலைகளையும் பிள்ளைகளே தாமாகச் செய்து கொள்ளுகிறார்கள். அப்பாவும் அண்ணாவும், யோசனையாளராகவும், மேற்பார்வையாளராகவுமே இருந்து வருகிறார்கள்.

இரண்டு விஸ்தாரமான கட்டிடங்களில் மாணவர்கள் தங்கியிருக்கிறார்கள். தொழிற்சாலைக்கு இரண்டு கட்டிடங்கள் உண்டு. பண்டகசாலைக்கு ஒரு கட்டிடம். விருந்தினர் மாளிகை ஒன்று புதிதாகக் கெட்டிக் கட்டிடமாய்க் கட்டப் பெற்றிருக்கிறது. இவை தவிர, பல குடிசைகள் ஆங்காங்கு நெடுகிலும் இருக்கின்றன. ஒரு புறம் பாலாறும், மறுபுறம் செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரத்துக்குப் போகும் ரோடும் அமைந்துள்ளன.

ஆசிரமம் போலவும், தொழிற்சாலை போலவும், கல்லூரி போலவும் காணும் இந்தப் பாடசாலையில், எட்டாம்வகுப்பு வரைக்கும் பயனுள்ள படிப்புச் சொல்லித் தரப் பெறுகிறது. தமிழ், ஆங்கிலம், கணிதம், சரித்திரம், சங்கீதம், நாடகம் முதலிய அனைத்தும் கற்பிக்கிறார்கள். தலைமையாசிரியர் கே. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் கீழ் 35 தேர்ந்த ஆசிரியர்கள், முழு ஈடுபாட்டோடு, மாணவர்களை எல்லாத் துறைகளிலும் பயிற்றுவித்து வருகிறார்கள்.

பாடசாலையார் ஆண்டுதோறும் வெளியிட்டு வரும் அறிக்கையைப் பார்த்தால், யாருக்கும், மலைப்பும் வியப்பும் தோன்றாமல் இருக்க முடியாது. "என்ன! இவர்கள் சொல்லித் தராத படிப்போ, தொழிலோ, கலையோ ஒன்றும் பாக்கியிராது போலிருக்கே!! சாரணியம், செஞ்சிலுவை, விரதாச்சாரி இயக்கம், உடற் பயிற்சி, சிலம்பம், குஸ்தி, இன்னும் என்னென்னவோ இருக்கின்றன!!! காகிதம் செய்தல், புத்தகம் பைண்டு செய்தல், தச்சுவேலை, பொத்தான் செய்தல், ஈயம் பூசுதல் போன்ற கைத்தொழில்களெல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்களே!!! இது நடக்கிற காரிய

மா!'' என்று ஆச்சரியம் ஆச்சரியமாய்த்தானிருக்கும்.

எனக்கும் அப்படித்தான் இருந்தது. விஷயம் கொஞ்சம் மிகைப்படுத்தப் பட்டிருக்குமோ என்ற சந்தேகங்கூட ஏற்பட்டு விட்டது. அதனால், ''அப்பா'' அவர்கள் அழைப்புக்கு இணங்க, இந்த வருஷம் மாணவர் இல்ல ஆட்சி மன்றத் திறப்பு விழாவுக்கு நானும் நண்பர்களுடன் வாலாஜாபாத் போய் வந்தேன்.

23-8-45-ல் தான் விழா. முதல் நாளிரவே அங்கு சேர்ந்தோம். சாப்பாடு, உபசரணை எல்லாம் பெரிய கலியாண வீடு மாதிரி தான். பிள்ளைகளின் பாட்டு, ஆட்டம், உடற் பயிற்சி, யோகாசன வேலைகள் எல்லாம் ஒரே திருவிழா மயம். நாமக்கல் கவிஞருக்களித்த வரவேற்பு,பிரசங்கங்கள், சர்ச்சைகள் எல்லாம் பெரியமகாநாடு போலிருந்தது.

இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை எப்படித் தொடர்ந்து நிர்வகித்து வரமுடிகிற தென்பது பெரிய ஆச்சரியமே. போன வருஷம் ரூ. 53,000 செலவாகியிருக்கிறது. படிப்புக்கு எவ்விதத் கட்டணமும் வசூலிப்பதில்லை. மாணவர் இல்லத்தில் தங்குகிறவர்களில், முடிந்தவர்களிடம் மட்டும் சாப்பாட்டுக்காகப் பிள்ளைக்கு மாதம் ஆறு ரூபா வீதம் வாங்கிக்கொள்கிறார்கள். பிள்ளைகள் செய்த பண்டங்களை விற்பது, பாடசாலைக் காய்கறித் தோட்ட வருமானம், இவற்றின் மூலம் வருஷத்துக்கு 23,000 வருகிறது. சர்க்கார் உதவித் தொகை 4,700. நன்கொடை 10,000. இதர மான்யம், உதவி, முதலியன 8,000. ஆக 45,700க்குக் கணக்கு வந்து விட்டது. பாக்கி துண்டு விழும் ரூ. 7,300க்கு வழி? அது, ''அப்பா' வின் இன்ஷ்யூரன்ஸ் கமிஷன் மூலம் வருகிறது.

அப்பா, தம் உயிரை 50,000க்கு ஓரியண்டலில் இன்ஷ்யூர் செய்து, அத்தொகை தமக்குப் பின்பு பாடசாலைக்குச் சேரும்படி ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார். தாம் வேறு, பாடசாலை வேறு என்ற நினைப்பே அவருக்கில்லை. ''அப்பா'' யாரையும் பணந் தரும்படி, கேட்பதில்லை. யாரும் இன்ஷ்யூரன்ஸ் செய்வதானால், அதைத் தம் மூலம் செய்யட்டும்; அதில் வரும் கமிஷனைப் பாடசாலைக்குக் கொடுத்துதவலாம் என்று தான் சொல்வார். மனமுவந்து வலிய வழங்கும் நன்கொடைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார். வருஷா வருஷம் செலவு நடை கூடிக் கொண்டே போனாலும், எப்படியோ பணம் வந்து கொண்டேதானிருக்கிறது என்று சிரித்துக் கொண்டே சொல்வார் நண்பர் முதலியார். தற்சமயம் மாதா மாதம் 5,000 செலவாகிறதாம். முட்டின்றிப் பணம் வந்து கொண்டு மிருக்கிறதாம்.

ஆரம்பத்தில், முதலியார் ஒரு விசித்திரப் பேர்வழி என்று சொன்னேன். அவரிடம் பழகுகிறவர்கள் அனைவரும் அப்படியே நினைப்பார்கள். வெகு சாதுர்யமான பேச்சாளி. மிகவும் சரளமாகப் பழகுவார். கணத்தில் எதிரியின் மனதைக் கவர்ந்து விடுவார். பேச்சில் பக்கா இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு! ஆனல், பாலிசி எடுத்துக்கொள்ளும்படி மட்டும் இதுவரை யாரையும் கேட்டதே இல்லை! ஆள் மகா நேர்மைப் பேர்வழி.

உதாரணம் :

அன்று, விழா நிகழ்ச்சியின் போது, பாடசாலைக்கு ஒரு கட்டிடம் கட்ட வேண்டியதைப் பற்றிப் பேச்சு வந்தது. அன்பர் ஒருவர் ரூ. 25-ஐக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தவரிடம் கொடுத்து, அங்கேயே இதரரும் பணம் தந்துதவ வழி காட்டினார். உடனே, அப்பாவுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! "யாரும் இங்கே, இப்போது, பணம் வசூலிக்கப் படாது. தருவதானால், தபால் மூலம் அனுப்பட்டும். பணம் உதவுகிறவர்கள், மனமுவந்து தரவேண்டுமே ஒழிய, வந்த இடத்தில் அவர்களைக் கட்டாயம் பண்ணுவது கூடவே கூடாது. வேண்டும்போது பெருந்தொகையாய்க் கேட்டு வாங்கிக்கொள்வேன். கொடுக்கவும் எத்தனையோ பேர் சித்தமாயிருக்கிறார்கள்" என்று உணர்ச்சியோடு, ஆனால் விநய பூர்வமாய், சொல்லிவிட்டு, அன்பர் தந்த ரூ. 25-யும் திருப்பிக் கொடுத்து விடச் செய்துவிட்டார். மனுஷன் எவ்வளவு உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்து ஒழுகி வருகிறார் என்பது அப்போதுதான் பளிச்சென்று விளங்கியது. இவ்வளவு மகத்தான சேவையைப் பழுதறச் செய்துகொண்டு வர இவரால் எப்படி முடிந்தது என்பதும் அப்போது தான் புரிந்தது.

வாலாஜாபாத் பாடசாலை பெரும்பாலும் வார்தாக் கல்வித் திட்டப்படியே நடப்பதாகப் பலரும் சொல்வது சரி யென்றே கண்டேன். ஆனால், படிப்பு விஷயத்தில், வார்தாத் திட்டம் சரியான பயனளிக்காதே என்று, அதை எதிர்ப்பவர்கள் ஆட்சேபிப்பதுண்டு. அது சரியா, தப்பா என்று தீர்ப்பளிப்பதற்கு நான் என்ன கல்வித் துறையில் நிபுணனா? உங்களுக்குச் சந்தேகமிருந்தால், ஒரு முறை பாடம் நடக்கும்போது அங்கே போய்ப் பிள்ளைகளை நேரே சோதனை பண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள்.

தனித் தமிழில், திரு. வி. க. நடையில், மறைமலை அடிகளும் சற்று "அமைவாக எண்ணமிட்ட பிறகே பொருளோர்ந்து கொள்ளற்கான" மின்பொறியர் (எஞ்சினியர்), ஆணையாளர் (கமிஷனர்), கருவூலம் (பணம்), ஆடலரசு (நடராஜன்) — போன்ற சொற்களைக் கையாண்டு வருகிறவர்களுக்கு, "வாலாஜாபாத் இந்து மத பாடசாலை" என்ற "சம்ஸ்க்ருத" வேதபாடசாலையைப்போல் ஒலிக்கும் பெயர் ஏற்பட்டது முதலில் எனக்கு அதிசயமாகவே யிருந்தது. ஆனால், பிள்ளைகள், ஆசிரியர்கள் இவர்கள் வாயில் இடையறாது ஒலித்துக்கொண்டிருந்த சைவத் திருமுறைகளின் இன்னிசையும், இவர்களது நெற்றியில் எந்த நேரமும் இலங்கிக் கொண்டிருந்த சைவச் சின்னமாகிய திருநீற்றின் எழிலும் இந்தப் பெயரின் பண்புப் பொருத்தத்தை விளக்கிக் காட்டின. மறுநாள் ஊர் திரும்பவேண்டிய நாங்கள், எங்களை வெள்ளென எழுப்பி விடக் கேட்டிருந்தோம். அதற்கு நண்பர் தணிகையரசு என்ன செய்தார் தெரியுமா? முதல் நாளிரவு, அகாலம் வரை, கவிதை முதல் கட்டை ரேஷனிங்வரை தீப்பொறி பறக்க விவாதம் செய்துவிட்டு அலுத்து உறங்கிய எங்களை, அதிகாலை ஐந்து மணிக்கு பி. பி. சி. ரேடியோ மாதிரி காத்திரமும் இயப்ப வொண்ணாத இனிமையும் வாய்ந்த ஒரு குரல் "போற்றி என் வாழ் முதலாகிய

பொருளே! புலர்ந்தது" என்று திருப்பள்ளி எழுச்சி பாடியது. இதன் முன்னே பரம நாஸ்திகனும் அகங் குழைந்து, கைகூப்பி எழாமல் வேறென்ன செய்வான்?

ஆகாங்க்ஷை (ஷாங்ஹாய் அல்ல!), வைஷம்யம், மூர்த்தன்யம், சௌலப்பியம் (சௌளம் அல்ல!), ஐதிஹ்யம்-போன்ற வேத கால வடமொழிச் சொற்களை உபயோகித்தால்தான் பாமரனுக்கும் புரிகிற தமிழ் எழுதமுடியும் என்று காட்டி வருகிற பிரபல ஆசிரியர்களும், அதிதீவிர தேச பக்தர்களும், மத பக்தர்களும், புரட்சிகரமான சீர்திருத்த வாதிகளும், சுயமரியாதைக்காரர்களும், கட்சிச் சார்பற்ற கனதனவான்களும், பொது மக்களும் ஒரு முகமாய்ப் பாராட்டி, ஆதரித்துவரும் இந்த லட்சியக் கல்லூரியை நீங்களும் போய்ப் பார்த்து வர வேண்டாமா? உங்களாலான உதவியையும் இதற்கு வழங்க வேண்டாமா? முக்கியமாக, பல பணக்காரரும், அறிவாளிகளும், தியாகிகளும் ஒன்று சேர்ந்து செய்யவேண்டிய ஒரு காரியத்தை, இந்தப் பொல்லாத வா. தி. மா. முதலியார் எப்படித் தன்னந்தனியாய்ச் சாதிக்க முடிகிறதென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டாமா? இவருடைய துறையிலேயே இவரை வெல்லும் பொருட்டு, தமிழ் நாட்டில் குறைந்தது இன்னும் ஒரு பத்து "அப்பா" வை யாவது உண்டு பண்ணி, நாடெங்கும் இத்தகைய பள்ளிச்சாலைகளை ஏற்படுத்த வேண்டாமா?— கட்டாயம் ஒரு முறை போய்ப் பாருங்கள்.

✱

## யார் பேசுவது சரி?

ஓர் ஆங்கில சோல்ஜர், ருஷ்யாவில் இருந்த காலத்தில், ஒரு ருஷ்ய அதிகாரியுடன் சம்பாஷணை செய்ய நேர்ந்தது.

ருஷ்ய அதிகாரி, உயர்ந்த ஆங்கில இலக்கியங்களெல்லாம் படித்தவர். மகா சுத்தமாய் அவர் ஆங்கிலம் பேசினர். ஆங்கில சோல்ஜரோ, சாதாரணமான நடப்பு பாஷையில் பேசினர்.

ஆங்கில சோல்ஜரின் ஆங்கில பாஷை, ருஷ்ய அதிகாரிக்குக் கொச்சையாய்த் தோன்றியது. ஆகையால், அவர் ஆங்கில சோல்ஜரின் ஆங்கிலத்தைத் திருத்திக் கொண்டே யிருந்தார். இது ஆங்கில சோல்ஜருக்குப் பிடிக்கவில்லை. கடைசியில், அவர் சலிப்போடு சொன்னர்: "சரிதான்; என் ஆங்கிலம் எப்படியிருந்தாலும் சரியே. நான் பேசுவது தொழிலாளிகளின் ஆங்கிலம்; நீங்கள் பேசுவதோ முதலாளிகளின் ஆங்கிலம். எது நல்லது? நீங்களே சொல்லுங்கள்?"

## குழந்தையின் மரியாதை

கமலு ஐந்து வயதுக் குழந்தை. தகப்பனர் ஏதோ கோபமூண்டு, கமலுவை இரண்டு அறை அறைந்துவிட்டு, ஆபீசுக்குப் போய்விட்டார். சாயங்காலம் வரையில் கமலுவின் கோபம் தணியவில்லை. தகப்பனர் சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பினர்.

"கமலு, எங்கே அம்மா? அவளைக் கூப்பிடு" என்ருர்.

கமலு பேசாமல் 'உர்' என்று முகத்தை வைத்துக் கொண்டே மாடிக்கு ஓடினள். வெகு மரியாதையாக, "அம்மா, உன் புருஷன் கீழே வந்திருக்கிருர். அழைக்கிருர்" என்ருள்.

# சுகுணி

காளிதாஸ் மேகானி

சிந்து நதிக்கரைப் பசும்புல் வெளியில் சில எருமைகள் மேய்ந்து கொண்டிருந்தன. அந்த எருமைகளை மேய்க்கும் வாலிபன், ஒரு மரத்தடியின் நிழலில் உட்கார்ந்து குழலூதிக் கொண்டிருந்தான். அவனுடைய உண்மையான பெயர் சாகாட். ஆனால், கிராம ஜனங்களுக்கு அவன் எந்த ஊர், அவன் பெற்றோர் யார் என்ற ஒன்றும் தெரியாது. ஜனங்கள் அவனை மேஹர் என்றே அழைதது வந்தார்கள். மேஹர் என்பதற்கு எருமைகளை மேய்ப்பவன் என்றுதான் பொருள். மேஹரின் எஜமானுக்குச் சுகுணி என்று ஒரு பெண் உண்டு. அவள் அவனை 'அநாதை' என்று பரிகசிப்பதுண்டு. சுகுணியின் வாயிலிருந்து வெளிவரும் இந்தப் பரிகாச வார்த்தைகள், மேஹருக்கு மிக்க இனிப்பாகவே யிருக்கும்.

சுகுணியின் தந்தை தோலாஜி என்னும் வகுப்பைச் சேர்ந்த ஒரு குயவன்.

உச்சி வெயில் மண்டை வெடித்து விடும் போலிருந்தது. மேஹர் மரத்தடியின் நிழலில் உட்கார்ந்து குழலூதுவதில் முனைந்திருந்தான். கண்ணாடி போல் பளபளவென்று துலங்கிய ஒரு செம்பை அம்மானை ஆடிக்கொண்டே, சுகுணி அங்கே வந்து சேர்ந்தாள். 'மேஹர், மேஹர்' என்று அவள் அவனைச் சத்தமிட்டுக் கூப்பிட்டாள்.

சிறிது நேரம் வரையில் அவன் அசையவேயில்லை. குழலூதுவதில் மெய் மறந்து, தன்னுணர்ச்சியிழந்திருந்தான். மரக் கிளையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த அவன் கால்களைப் பிடித்துச் சுகுணி உலுப்பினபோதுதான், மேஹருக்குத் தன் உணர்ச்சி வந்தது.

"இப்போதாவது கீழே இறங்கி வருகிறாயா, அல்லது காலைப்பிடித்துக் கீழே இழுத்துப் போடட்டுமா?" என்றாள் சுகுணி.

மேஹர் வெட்கமடைந்து, கீழே குதித்தான். அவன் பயந்தவனைப்போல் நடித்து, "அகாலத்தில் வந்து ஏன் கோபித்துக் கொள்கிறாய்? விஷயமென்ன?" என்று கேட்டான்.

"வீட்டுக்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள். சீக்கிரமாக இரண்டு சேர் பால் கறந்து கொடு" என்றாள் சுகுணி.

"எருமைகள் என்னவோ வெகு தூரத்தில் இருக்கின்றனவே. நீ போய் அவைகளை ஓட்டிக்கொண்டு வா."

"நான் ஏன் போவேன்? படேலின் பெண் எருமைகளை ஓட்டுவாளா, என்ன? எதற்காக உன்னை அப்பா வேலைக்கு வைத்திருக்கிறார்? உன்னைச் சிம்மாசனத்தில் உட்காரவைத்துப் பூஜிப்பதற்கா? சீக்கிரம் போய் எருமைகளை ஓட்டிவா; இல்லாவிட்டால் உன் இராச் சாப்பாட்டில் மண் விழுந்து விடும்."

மேஹர் நாலுபுறமும் தன் பார்வையைச் செலுத்தினான். ஆனால்,

ஓர் அபூர்வமான குஜராத்திக் காதல் கதை. மூல ஆசிரியரின் முழுப் பெயர் ஜவேர்சந்த் காளிதாஸ் மேகானி என்பதாகும். தமிழ்ப் படுத்தியவர் ப. கி. விஜயராகவன்.

எருமைகள் அவன் கண்களுக்குத் தென்படவில்லை. அவைகள் தான் புல் பூண்டுகளில் மறைந்து மேய்ந்து கொண்டிருக்கின்றனவே!

"சிட்டியடி. அவைகள் எங்கிருந்தாலும் வந்து சேர்ந்துவிடும்" என்று சுகுணி சொன்னாள்.

மேஹர் தலையைச் சொறிந்து கொண்டே, "சிட்டியடிக்க எனக்குத் தெரியாது" என்று சொன்னான்.

"அட வெட்கம் கெட்டவனே! மாடு மேய்ப்பவனாயிருந்தும் சிட்டியடிப்பதற்குத் தெரியவில்லையே! நீ ஏன் அந்த வேலையை ஒப்புக் கொண்டாய்? எங்கேயாவது ஆற்றிலே குளத்திலே விழுந்து சாகிறதுதானே!"

சுகுணி இரண்டு காதுகளையும் விரல்களால் பொத்திக்கொண்டு, ஒரு பெண் மயில் கூவுவதைப் போல், வெகுதூரம் கேட்கக் கூடியவாறு ஏதோ சத்தம் செய்தாள். நீண்டு அடர்ந்து வளர்ந்திருந்த புல் பூண்டுகளிடையேயிருந்து, சிறிது நேரத்தில் எருமைகள் அனைத்தும் கத்திக்கொண்டு ஓடிவந்து, அவளை நெருங்கிச் சூழ்ந்து கொண்டன.

"சரி, இப்போதாவது சீக்கிரம் பால் கறந்து கொடு" என்றாள் சுகுணி.

மேஹர் வெட்கத்தோடு நின்றான்.

"நல்ல இடையன் நீ! உனக்குப் பால் கறக்கக்கூடத் தெரியவில்லையே! உன் வாழ்க்கையில் மண் விழ" என்று சுகுணி கோபித்துக் கொண்டாள்.

சுகுணி தானாகவே பால் கறக்கலானாள். சிறிது நேரத்தில் பால் செம்பு நிரம்பிவிட்டது. ஊற்றுப் போல் நுரை பாத்திரத்திலிருந்து பொங்கியது.

"முட்டாள் மேஹர்! சிட்டியடிக்கத் தெரியாதவனே! பால் கறக்கத் தெரியாதவனே!" என்று சொல்லிவிட்டு, சுகுணி தலையில் பால் செம்பை வைத்துக் கொண்டு கிராமத்தை நோக்கிப் பெருமிதமாக நடந்து சென்றாள். சுகுணியின் புன் சிரிப்பையும் பெருமித நடையையும் கண்டு மேஹர் அப்படியே சித்திரம் போல் அசைவற்று நின்றான். சுகுணியின் வசவு அவனுக்கு மிக்க இனிப்பாயிருந்தது. அவள் என்றைக்காவது அவனை வைதால் அன்று மேஹரின் ஆனந்தத்துக்கு எல்லை கோல முடியாது. அவனது உள்ளம் பூரிப்படையும்!

சுகுணி மேஹரிடம் எல்லையற்ற கருணை காட்டினாள். மேஹர் தன் வேலையில் அநேகம் தவறுகள் புரிவான். குயவன் தோலாஜி அதற்காக அவனைத் திட்டுவான்; கோபித்துக் கொள்வான். எஜமான் திட்டினால், மேஹரின் மனது சங்கடப்படும். அவன் உற்சாகம் குன்றி விடுவான். அப்போது சுகுணி அவன்மீது அன்பு மழை சொரிவாள். அவனை உற்சாகப்படுத்த மறைமுகமாக முயற்சிப்பாள். சுகுணியின் முயற்சி அவளுடைய தந்தைக்குத் தெரியாமலில்லை; ஆனால், கருணையுள்ளம் படைத்த தன் பெண்ணின்மீது அவனுக்கு அபார நம்பிக்கை. நானூறு கழுதைகளும், பதினைந்து எருமைகளும் உடையவன் குயவன் தோலாஜி. செல்வமாக வளர்த்த தன் ஒரே பெண் ஒரு சாமிய இடையனைக் காதலிப்பாள் என்று அவன் கனவிலும் ஒரு போதும் கருதவில்லை!

ஆவணக் காப்பகம்

ஒரு நாள் சம்பவம்! மேஹர் சிந்துநதிக் கரையில் உட்கார்ந்திருந்தான். ஐந்து கழுதைகளை இழந்ததற்காகத் தோலாஜி அன்று அவனுடன் சண்டையிட்டான். அவனது அழகிய முகத்தில் வேதனை நிறைந்த சோக ரேகைகள் படர்ந்திருந்தன. சுகுணியின் காலடிச் சத்தம், அவனை விழிப்புறச் செய்துவிட்டது. வந்தவுடன் சுகுணி பரிகாசம் நிறைந்த குரலில் சொன்னாள்: "இன்னும் உன் மூளைக்கு அது எட்டவில்லையா! எங்கே அந்தக் கழுதைகள்!''

இதைக் கேட்டவுடன், மேஹரின் கண்ணிலிருந்து பொலபொல என்று கண்ணீர் வடிய ஆரம்பித்தது. சுகுணி புரிந்துகொண்டாள். மாடுமேய்ப்பவன் இம்மாதிரி அழமாட்டான். அவள் மேஹரின் கைகளைப்பற்றி மதுரமான குரலில் சொன்னாள்: "அடே, மாடு மேய்ப்பவனயிருந்தும், ஏன் அழுகிறாய்? மாடு மேய்ப்பவனுக்கு இவ்வளவு பச்சை உள்ளமா?''

"சுகுணி! நான் உன்னை ஏமாற்றிவிட்டேன். நான் ஒரு மாட்டிடையன் அல்ல!''

"என்ன! நீ மாடு மேய்ப்பவன் அல்லவா? அப்படியானல், ஒரு ராஜகுமாரனே?''

"ராஜகுமாரன் அல்ல; ஆனல் ராஜகுமாரனைப் போல் செல்வமாய் வளர்ந்த ஒரு பிரபுவின் மகன்.''

"யார் மகன்?''

"இதை யெல்லாம் தெரிந்துகொண்டு, நீ என்ன செய்யப் போகிறாய்?''

"என்மீது ஆணையாக இதை நீ சொல்லித்தான் தீரவேண்டும்! இவ்வளவு பெரிய ரகசியத்தை மறைத்து வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?''

"நல்லது, சுகுணி! நான் சிந்துவாசியல்ல. புகாரா நாட்டு முஸ்லீம்; வெளித் தேசத்தவன். என் தந்தையின் பெயர் மிர்ஜா அலி பேக். அவர் பெரும்பணக்காரர். இப்போது அவருக்கு வயது எழுபத்தஞ்சு இருக்கலாம். அவரது முதுமைப் பருவத்தில் ஒரு முஸ்லீம் சித்தரின் ஆசீர்வாதத்தால் அவருக்கு நான் மகனய்ப் பிறந்தேன். சுகுணி! நான் வெறும் மாட்டிடையன் அல்ல. நான் புகாராவிலுள்ள பெரிய பெரிய வித்வான்களிடமெல்லாம் கல்வி கற்றவன். இந்தியாவைப் பார்ப்பதற்காக, இங்கே வந்து சேர்ந்தேன். இரவு இங்குள்ள ஒரு சத்திரத்தில் தங்கினேன். உன் தந்தையிடம் மண் பாத்திரங்கள் வாங்க உன் வீட்டுக்கு வந்தபோது, உன்னைக் கண்டேன். கண்டதும் உன்னை மோகித்துப் பித்தனகிவிட்டேன். என் அருமை நண்பன் அசன் பேக் என்னைப் பலவாறு தேற்றினன்; ஆனல், நான் ஆறுதலடையவில்லை. என் ரத்தினங்கள் களவு போயின; என் ஐசுவரியம் கரைந்துவிட்டது; என் நண்பன் மறைந்து விட்டான்! காற்றுடன் பேசும் தன்மை பெற்ற என் ஒட்டகத்தையும் எவனே களவாடி விட்டான். நானே உன் காதலைப் பெற மோகங்கொண்டு, தன்னிலை அழிந்து, இன்று சிந்துவில் மாடு மேய்ப்பவனக இருக்கிறேன். உன் தந்தையின் கழுதைகளை மேய்க்கிறேன்.''

சுகுணி ஆச்சரியம் அடைந்தாள். என்றாலும், பரிகாசக் குரலில் சொன்னாள்: "எனக்கு இப்போதுதான் விஷயம் புரிந்தது! புகாராவின் ஐசுவரியத்தை



# சருமம் சுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!

# ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்யமுடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக்கொள்ள வேண்டும்; இல்லையெனின் அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனா வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமைவாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிருமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனாவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய்ச்சேர்த்து நன்மையைக்கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின்மீது படிந்துள்ள அழுக்கையும், வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்திசெய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்றாய்ப் போஷிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனாவையே உபயோகியுங்கள்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமியையொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும், குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.




ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சணைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

REXONA PROPRIETARY LIMITED

RP. 27-50 TM


பட்டு
என்றால் மிருதுவாயுள்ளது
அது மைசூர் பட்டானுல் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.
மைசூர் சில்க்
மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு
கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்..
MSK II TM


சகல விதமான
வலிகளையும்
10 நிமிஷங்களில்
நிறுத்த
ஸாரிடோன்
Saridon

அடைவதற்காகவும், சகோதரர்களின் அன்பைப் பெறுவதற்காகவும், நீ ஆனந்தமாக இதைவிட்டுச் செல்லலாம். கூட்டின் கதவை நான் திறந்து விடுகிறேன்.''

''முடியாது. இப்போது நான் எங்கே செல்வேன்? கூட்டில் அடைபட்டிருந்த பறவையைக் காட்டுப் பறவைகள் அங்கீகரிக்க மாட்டா. சிந்துவின் கரையோரத்தில் தான் எனக்குச் சமாதி.''

''அப்படியானால் யாருக்காகக் கண்ணீர் வடிக்கிறாய்?''

''என்னைக் கேவலம் ஓர் இடையனாக எண்ணும் சுகுணிக்காக.''

சுகுணியும் மேஹரைத் தன் கணவனாக மனதிலே வரித்து விட்டாள்.

## 2

சிந்து நதிக்கரையில், பரந்த ஆல மரத்தடியில், ஒவ்வொரு நாளும் உச்சிவேளையில், சுகுணியும் மேஹரும் சந்திப்பது வழக்கமாகி விட்டது. இந்த விஷயம் எப்படியோ தோலாஜியின் காதுக்கு எட்டிவிட்டது. அவர்கள் இப்போது நடுப்பகலில் சந்திப்பதற்குப் பதிலாக, நள்ளிரவில் சந்தித்து, கிசு கிசு என்று காதல் கதைகள் பேசுவது அந்த ஆல மரத்துக் கிளைகளில் படுத்திருக்கும் பட்சிகளுக்குக் கூடக் கேட்காது; ஆனால், எப்படியோ தோலாஜியின் காதுக்கு அத்தனையும் எட்டி விட்டது.

தோலாஜி மறுநாள் காலையில் மேஹரிடமிருந்து கோலைப் பிடுங்கிக் கொண்டு சொன்னான்: ''இனிமேல் நீ இந்தச் சதாபுரத்தின் எல்லையில் கால் வைத்தாயானால், உன்னை வெட்டிக் கொன்று உன் ரத்தத்தால் சுகுணிக்கு ஸ்நானம் செய்விப்பேன் என்பது உன் ஞாபகத்தி லிருக்கட்டும்'' என்று எச்சரித்தான். மேலும், ''நன்றி கெட்டவனே! இங்கிருந்து வெளியேறு'' என்று உறுமினான். மேஹரும் அகன்றான்.

சிந்துவின் மறுகரையில் மேஹர் தனக்கென்று ஒரு குடிசையை அமைத்துக் கொண்டான். அங்கே அவன் காதல் வெள்ளத்தில் மூழ்கிப் பிரக்ஞையற்றவனாகி ஊண் உண்டிகளையும் பல சமயம் மறந்துவிடுவான். காலையி லிருந்து மாலை வரையில் ஈரானி, அரபி, சிந்தி பாஷைக் கவிதைகளைப் பாடுவதிலும் குழலூதுவதிலுமே நேரத்தைப் போக்குவான். இரவு சமீபித்ததும், மீன் கறி சமைப்பான். சமைத்த மீனை நள்ளிரவில் தலை மீது சுமந்து, சிந்து நதியில் குதிப்பான். யானைகளையும் அடித்துச் செல்லக்கூடிய அந்த நதியின் பிரவாகத்தில் வலிமை பொருந்திய தன் கைகளால் தண்ணீரைக் கிழித்துக் கொண்டு, பிரம்மாண்டமான ஒரு முதலையைப் போல் பயமில்லாமல் நீந்திச் செல்வான். கன்னங்கரிய இருளில் கண்மூடிக் கண் திறப்பதற்குள், சிந்து நதியின் ஒரு மைல் அகலத்தையும் கடந்து அக்கரையை மேஹர் வந்தடைந்ததும், சுகுணியின் கோமளமான இரு கைகளும் அவனை வரவேற்றுத் தண்ணீரிலிருந்து அவனை வெளியேற்றிவிடும். மறுபடியும் அவ்விருவரும் அதே ஆலமரத்தினடியில் அமர்ந்து, மீன் விருந்துண்டு, காதல் பேச்சிலே இரவின் ஒரு ஜாமத்தைக் கழித்து விடுவார்கள். மேஹர் மறுபடியும் சிந்து நதியைக் கிழித்துச் சென்று, மறு கரையி லிருக்கும்

தன் குடிசைக்குப் போய்ச் சேர்வான்.

இம்மாதிரியாக அநேகம் இரவுகள் கழிந்தன. சிந்து நதியில் உண்டாகும் பயங்கரமான சூறைக்காற்று கூட மேஹர் இக்கரைக்கு வருவதைத் தடுக்க முடியாது.

ஒரு நாள் பூர்ணச் சந்திரனின் நிலவொளியில் அவன் சமைத்துக் கொண்டு வந்த மீனின் ருசியை அளவிட்டுச் சொல்லமுடியவில்லை. சுகுணி ஒவ்வொரு கவளத்தையும் விழுங்கி விட்டு, அதைத் தெவிட்டாது புகழ்ந்தாள்: "மேஹர்! இன்று இந்த மீன் எவ்வளவு ருசியாயிருக்கிறது! தினந்தோறும் ஏன் இவ்வளவு ருசியுள்ள வஸ்துவை நீ கொண்டுவரக் கூடாது?"

மேஹர் சிரித்தான்: "தினந்தோறும் கொண்டு வரலாம், சுகுணீ! ஆனால், இந்த மீனைச் சமைத்தவன், சில தினங்களுக்குப் பிறகு உயிரோடிருக்க முடியாது."

அப்போது மேஹரின் முகத்தில் ஏதோ வேதனையின் அறிகுறி தென்பட்டது. அவன் அந்த வேதனையை அடக்கி வைத்துக் கொள்வதற்காகச் செய்தமுயற்சிகளைச் சுகுணி சட்டென்று ஊகித்து விட்டாள். "ஏன் இன்று இவ்வளவு வியாகூலமாயிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"வியாகூலமா? அப்படி ஒன்றும் இல்லையே."

சிறிது நேரத்தில் சுகுணிக்கு என்னவோ சிலீர் என்று ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. அவள் திடீரென்று வியப்புடன் கூவினாள்: "இங்கே ஏது தண்ணீர்?"

உடனே, அவளுடைய திருஷ்டி மேஹரின் தொடைமீது விழுந்தது. தொடையிலிருந்து ரத்த வெள்ளம் பெருகிக் கொண்டிருந்தது.

"இதென்ன மேஹர்!"

"இதுவா? இதுதான் இன்று அவ்வளவு ருசியாயிருந்த மீனின் ரத்தம்!"

சுகுணிக்கு ரகஸ்யம் தெரிந்து விட்டது.

இன்று மேஹருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை. அவன் தன் தொடையையே அரிந்து சமைத்து வந்துவிட்டான்.

"மேஹர்! கடவுளின் முன்பாக உன்மீது ஆணை. இனி நாளையிலிருந்து என் முறையாகும். நீ இங்கே வரவேண்டாம்."

"அப்படியானால், என் இடத்துக்கு நீ வருவாயோ?"

"ஆம். நான் வருவேன்?"

"நீ ஒரு பெண்ணாயிற்றே! இவ்வளவு பெரிய நதியை எப்படிக் கடப்பாய்? சுகுணி, உனக்கு ஒன்றும் பைத்தியம் பிடித்துவிட வில்லையே?"

"இதன் முடிவு நாளை இரவு தெரியும். கடவுளின்மீது ஆணையாக நீ வரவேண்டாம்!"

## 3

சிந்து நதியில் இரு கரைக்கும் நடுவில் பனிரண்டு சுழல்கள் இருக்கின்றன. முப்பத்திரண்டு பாறைகள் இருக்கின்றன. பாறைகளின் நடுவே தேள்கள் இருக்கின்றன. அவ்வளவு பயங்கரமான நதியைக் கடப்பதற்காக, சுகுணி நள்ளிரவில் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாள். வீட்டிலுள்ள இனிப்பான பால், மிருதுவான படுக்கை இவைகளை விட்டு, சிந்துவின் அலையில்

ஊஞ்சலாடுவதற்கு அவள் புறப்பட்டு விட்டாள்!

"யாரது? பெண்ணா?"

"ஆம், ஒரு பிரயாணி!"

"யார்? நீயா? சுகுணியா?"

"ஆம், சகோதரா. நீ யார்?"

"நான்தான் சிந்துவின் அலை. சுகுணி, நீ இந்தப் பாதிராத்திரி வேளையில் எங்கே போகிறாய்?"

"சிந்துவின் மறு கரைக்கு!"

"சுகுணி, சிந்துவில் நீந்தி நீ மறுகரையை அடைய முடியுமா? இன்னும் நீ சிறிய பெண். உனக்கு அவ்வளவு பலமேது?"

"அலைச் சகோதரா, பலத்தைக் கொடுப்பவர் அல்லா! நீந்திச் செல்வதற்கு உதவியாகச் சுண்டிப் பார்த்துத் தேர்ந்தெடுத்த ஒரு மண் குடம் கொண்டு வந்திருக்கிறேன்."

"இதெல்லாம் யாருக்காக?"

"மனதைப் பறி கொண்ட அந்த மேஹருக்காக."

"அட ஆண்டவனே! சுகுணி, உலகம் உன்னைத் தூற்றுகிறதே! அது உனக்கு தெரியவில்லையா?"

"சகோதரா, கேள்: பிரிய சகோதரா, என் நடத்தையைப் பற்றி, மேலே இருக்கிறாரே அவர் கவனிக்கிறார். வழியிலே, அருகே, வீட்டிலே உள்ளவர்கள் என்னை இகழ்வதைப் பற்றி நான் ஏன் சட்டைசெய்யவேண்டும்? என் தலைவிதியை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். உலகம் வீணாக என்னை இகழ்ந்து பேசித் தானாகக் கேடடைகிறது."

"ஏ சுகுணி, நீ உன் குலத்துக்கே மாசு தேடிவிட்டாய். முட்டாளும் நன்றியற்றவளும் ஆகிவிட்டாய். என்றாவது ஒரு நாள் நீ உன் பலத்தையும் யௌவனத்தையும் சிந்து நதியில் இழந்து விடுவாய். இந்தப் பெரிய நதியைக் கிழித்துச்செல்லும்போது, என்றாவது ஒரு நாள் நீ ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களை எண்ணப்போகிறாய். நீ முழுகி இறந்து விடுவாய். நீ சும்மா இரு. வீணாகக் கஷ்டங்களில் ஏன் சிக்கிக் கொள்கிறாய்? மரணத்தோடு ஏன் விளையாடுகிறாய்?"

இந்த உபதேசங்களைப் பொருட்படுத்தாமல் சுகுணி தண்ணீரில் குதிக்கத் தயாராகி விட்டாள். இடுப்பிலே துணியை வரிந்து கட்டிக் கொண்டாள். கையில் மண் குடத்தை எடுத்துக் கொண்டாள். நதியில் குதிப்பதற்காகக் கரையை வந்தடைந்தாள். அவள் மனது மறுகரையிலிருக்கும் காதலனைக் கலந்து விட்டது. அலைமேல் நாட்டியமாடிக் கொண்டும், முழுகி முழுகியெழுந்தும், சுகுணி தன் இரு கைகளாலும் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு சென்றாள்.

அன்பென்னும் கவசத்தைப் பூண்டு, உலக பயத்தையெல்லாம் உதறித்தள்ளி, தீரங்கொண்டு விட்டாள் சுகுணி. அவளுடைய அன்புக்கு முன்னே சிந்துநதியின் பயங்கரமான முதலைகளும் மீன்களும் அகோர அலைகளும்கூட எதிர் நிற்க முடியவில்லை. இம்மாதிரி அநேகம் இரவுகள் கழிந்தன.

கடுங்குளிர்! எவருக்கும் வீட்டை விட்டு வெளியேறத் துணிவில்லை. எல்லோரும் போர்வை போர்த்துக்கொண்டு படுக்கையில் கிடந்தார்கள். எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. இந்தச் சமயத்தில் சுகுணி தன் குடத்தை எடுத்துக் கொண்டு வெளியேறப் போகிறாள். அவள் வெளியே செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் அவளைத்

தடைசெய்து சொன்னன்: "சுகுணி, நீ இந்தக் குளிரிலே விறைத்துச் சாகப்போகிருய்."

சுகுணி சொன்னள்: "சகோதரா, வேறெரு பெண்ணயிருந்தால் கோடைகாலத்து நடுப்பகலில்கூட இந்தத் தண்ணீரில் இறங்க மாட்டாள்; ஆனல், நான் கடுமையான குளிரிலும் கூடச் சந்தோஷமாக நதியில் குதிக்கிறேன். எனக்கு மரணத்தைப் பற்றிக் கொஞ்சம்கூடக் கவலே கிடையாது. காரணமென்னவென்ருல், என் கணவனின் அன்பு என் உள்ளத்தை ஒவ்வொரு நிமிஷமும் வாட்டிக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் யாராவது மரணத்தோடு இம்மாதிரி விளேயாடுவார்களா?"

"சுகுணி, நீ போகாதே! நதியிலுள்ள பாறைகளினூடே விஷப் பாம்புகளும் தேள்களும் மறைந்துகொண் டிருக்கின்றன. அவை உன்னேத் தீண்டிவிடும்."

சுகுணி பதில் சொன்னள்: "சகோதரா, என் பாதையிலே பனிரண்டு சுழல்கள் இருக்கின்றன. முப்பத்திரண்டு பாறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு பாறையின் குகையிலும் விஷப் பாம்புகளும் வசிக்கின்றன. நான் இவை அனேத்தையும் நன்ருய் அறிவேன். ஆனல், மற்றவர்கள் எந்தப் பாதையில் செல்வதற்குத் தயங்குகிருர்களோ, அதுதான் அன்புவழி. எவள் ஒருத்தி தண்ணீரைக் கண்டு பயந்து வீட்டிலேயே தங்கி விடுகிருளோ அவள் செயல் அன்புக் கடையாளமல்ல."

சுகுணி இவ்வாறு சொல்லிவிட்டு, கச்சை கட்டிக்கொண்டு, பனிக்கட்டி நிறைந்த சிந்து நதியின் தண்ணீரில் குதித்தாள். அவள் வெகு தூரம் நீந்திச் சென்றுவிட்டாள். இக்கரையில் நின்றுகொண் டிருப்பவனுக்கு நீந்தும் சத்தம் அதிக நேரம் கேட்கவில்லே. அவன் வீட்டுக்குத் திரும்பிச் சென்றுவிட்டான்.

குளிர்காலம் சென்றது; வெயில்காலம் சென்றது; என்ருலும், சுகுணி மறுகரை யடைந்து நள்ளிரவில் தன் காதலனேச் சந்திப்பதற்கு யாதோர் இடைஞ்சலும் உண்டாகவில்லே. இப்போது மழைகாலம் வந்துவிட்டது. சிந்து நதி இருகரையும் புரண்டு பாய்கிறது. அலேகள் எழும்பி எழும்பி ஆகாயத்தைத் தொடுகின்றன. அதைக் கண்ட மாத்திரத்திலேயே எவருக்கும் மயிர் கூச்சல் உண்டாகிறது. அந்தப் பயங்கரமான சூருவளிகூட, தினந்தோறும் நிகழக்கூடிய விளேயாட்டாக ஆகிவிட்டது சுகுணிக்கு. சுகுணி தன் குடத்துடன் கரையையவந்தடைந்தவுடன், யாரோ ஒரு மனிதன் அவளே நெருங்கிச் சொன்னன்:

"சுகுணி, பல்லேக் கிட்டும் இந்தக் குளிர்ந்த தண்ணீரில் நீ என் இறங்குகிருய்? இந்த அலேகள் பயங்கரமாக ஒன்ருேடொன்று மோதிக் கொள்கின்றன, பார். இந்தப் பயங்கர அலேகள் ஒரு வேளே உன் பிராணனே அபகரித்து விடுமோ என்னவோ! உயர்ந்து நிற்கும் கரைகளேப் பார். இதோ அதோ என்று கரைந்து வரும் கரைகள் உன்மீது இடிபோல் உடைந்து விழும்போல் இருக்கின்றனவே! சிறிது நிதானித்துச் செல்."

"சகோதரா, நான் எப்படிச் சிறிது நேரமேனும் தாமதிக்க முடியும்? எங்கள் சந்திப்பில் சிறிது தவக்கம் ஏற்பட்டுவிட்டாலும், என் மேஹர் தவியாய்த்

தவித்துப் பிராணனை விட்டுவிடு வாரே!''

சுகுணி தண்ணீரில் பிரவேசித்தாள். மீனைப்போல் சரளமாய் நீந்திச் சென்ருள். இம்மாதிரி தினந்தோறும் இரண்டாம் ஜாமத்தைத் தன் காதலனுடன் கழித்துவிட்டு, எஞ்சிய இரவிலேயே இக்கரை வந்தடைவாள்.

இதற்கு மத்தியில் தன் கௌரவத்தை நிலைநாட்டுவதற்காக, லோபியான தந்தை சுகுணியை ஒரு நாள் ஒரு குரூபியான குயஜாதிப் பையனுக்கு விவாகம் செய்து வைத்துவிட்டான். விவாகத்தின் போது, சுகுணி பகிரங்கமாக ஆட்சேபித்துக் கோபித்தாள்; ஆனால், கலியாணமோ கட்டாயமாக நடந்தேறி விட்டது. அவள் மாமியார் வீட்டுக்குப் போக மறுத்தபோது, தந்தை அவள் கணவனைத் தன் வீட்டிலேயே நிறுத்திக் கொண்டான். அப்படியிருந்தும், சுகுணி முதல் இரவே கணவனை எச்சரிக்கை செய்து வைத்தாள்: ''நீ என் சகோதரன் போலவும் தந்தை போலவும், என்னிடம் நடந்துகொள்ள வேண்டும். மறுபடியும் இந்த அறையை நாடி வராதே.''

சுகுணி தன் சுற்றத்தாருடன் கலந்து கொள்வதில்லை. உலகத்திலுள்ளோரிடமிருந்து அவள் மனம் வேறுபட்டு விட்டது. ஐந்து முறை நமாஸ் செய்வதிலும் குரானிலுள்ள சுலோகங்களை மனனம் செய்வதிலும், உபவாசத்திலும், அவளுடைய பகல் வேளை பெரிதும் கழிய ஆரம்பித்தது. சிந்துவின் மறுகரையில் உட்கார்ந்திருக்கும் தன் கணவனுக்கு இரவு நேரத்தை யெல்லாம் ஒப்படைத்து விட்டாள்.

சுகுணியின் சுய ஜாதிக்கணவனால் இதையெல்லாம் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவன் அம்பைவிடக் கூர்மையான வசை மொழிகளைப் பொழிய ஆரம்பித்து விட்டான். சுகுணி தனிமையில் உட்கார்ந்து எண்ணமிடலானுள்:

''என்னுடைய இந்தக் கணவன் கடவுளைத் தொழுவதுமில்லை; தன் அழுக்குத் துணிகளைத் துவைப்பது மில்லை. சாயங்கால மானவுடன் நீண்ட குறட்டைவிட்டுத் தூங்கி விடுகிருன். பொழுது புலர்ந்ததும் ஒரு புறமாகப் புரண்டு படுத்துக் கொள்கிருன். நடு ராத்திரியில் எழுந்து சாப்பிட அழுகிருன். இப்படியிருந்தும் இவன் ஓர் ஆண்மகனும்! என்னைச் சுடுசொல் சொல்கிருன். ஏனோ இவனுக்கும் எனக்கும் கால்கட்டுக் கட்டினுர்கள்? எனக்கு இம்மாதிரியான கணவனைப் பற்றி அக்கரையில்லை. நான் இவனை விட்டு விட்டுச் சிந்துவின் மறுகரைக்கே சென்று விடுகிறேன்.''

கணவன் செய்யும் துன்பமும் ஜனங்கள் கிசுகிசு என்று ரகஸ்யம் பேசுவதும் நாளுக்கு நாள் விருத்தியாயிற்று. சுகுணியின் பெற்ருேர்கூட, அவள் சாவதே நல்லது என்று கருதினுர்கள். உண்மையிலேயே சுகுணியின் சாவு சமீபித்துவிட்டது.

இரவு இருட்டாயிருந்தது. ஆனால், மாதமோ வைகாசி மாதம். வைகாசிமாத இரவு காதலர்க்கு உகந்தது. படகின் பாய் மரம் போல் சுகுணியின் மேக வர்ணப் போர்வையின் தலைப்பு, காற்று மோதி விரிந்தது. சிந்து நதியின் மறுகரையை யடைவதற்காக, சுகுணிக்கு இரண்டு இறக்கைகளைச் சிருஷ்டிகர்த்தா அருளி

யது போலிருந்தது அந்தப் போர்வை. தன் மார்பு சுகுணியோடு விளையாடுவதற்காக விம்மியதுபோல் சிந்துநதி பொங்கியது. மினுமினுக்கும் நட்சத்திரங்கள், சுகுணி நீந்துவதைப் பார்ப்பதற்காகத் தொங்கலிட்டதுபோல், கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

கரையில் நின்றுகொண்டு சுகுணி எல்லாத் திக்குகளிலும் தன் பார்வையைச்செலுத்தினுள். எல்லா ஜீவராசிகளும் இன்று சுகுணியோடு நட்புப் பாராட்டுபவைபோல் இருந்தன. உலகம் எவளை நிந்தனை செய்ததோ, அவளை இன்று தேவதைகள் தன் மயமாக்கிக் கொண்டுவிட்டன.

கச்சை கட்டிக்கொண்டு சுகுணி தண்ணீரில் குதித்துவிட்டாள். சிந்துநதியின் அலைகள் பூப்பந்தாடுவதுபோல் அவளை மேலே தூக்கின. அழகிய வர்ணச் சித்திரங்கள் தீட்டப்பட்ட குடத்தை முகத்தில் அணைத்துக் கொண்டு, சுகுணி அலையைக் கடக்க ஆரம்பித்தாள். அவளுக்கு இன்று காற்றும் தண்ணீரும் மிகவும் சுகம் அளித்தன. "கடவுள் அனுக்கிரகத்தினுல் மேஹர் இன்று இங்கே இப்போது என்னுடன் இருந்தால், இருவரும் கைகோத்துக் கொண்டு சமுத்திரம் வரையில் நீந்திச் செல்லலாமே! பாதாள லோகம் வரை சென்று அங்கே அமைதியாகக் காலம் கழிக்கலாமே!" என்று அவள் எண்ணினுள்.

"இன்று தண்ணீரை விட்டு நான் வெளியேறப் போவதில்லை. தண்ணீரிலிருந்தபடியே மேஹரைக் கூப்பிடுவேன். தண்ணீரை விட்டு வெளியேவந்தால் மறுபடியும் உலகத்தில் வாழ்வதற்கு மோகம் உண்டாகும்..."

கற்பனைக் குதிரைமேல் சுகுணி இம்மாதிரி சவாரிசெய்து கொண்டிருந்தாள். திடீரென்று அவளுடைய பிடியிலிருந்து குடம் நழுவ ஆரம்பித்தது. "குடத்தின் மண் ஏன் இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்துபோகிறது? நான் சுண்டிச் சுண்டியெடுத்துவந்த மண் குடத்தின் மேல் இன்று யாரேனும் ஒரு வேளை மந்திரம்போட்டு விட்டார்களோ! ஆயிரத்தில் ஒரு குடத்தைத் தட்டித் தட்டிப் பார்த்து நான் தேர்ந்தெடுத்தேன். குயவன் இதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே. அப்படியிருந்தும் இந்தக் குடம் எப்படி என்னிடம் வந்து சேர்ந்தது! ஏ அல்லா! இப்போது நீதான் என் கணவனேடு என்னைச் சேர்த்து விடவேண்டும்."

அவளுடைய எண்ண ஊற்று அடைபட்டுவிட்டது. இதற்குள் மண்குடம் தண்ணீரில் முழுகி விட்டது. படபடவென்று அடித்துக் கொண்டிருந்த சுகுணியின் கைகளில் கொஞ்சம்கூட மண் தங்கவில்லை. அவளுக்கென்னவோ நீந்தத் தெரியும்; ஆனலும், மேஹரைக் காக்கவைத்துக் கோபமுண்டாக்கி வேடிக்கை பார்க்கவேண்டும் என்ற மனேரதத்தில் சிக்கியவளாய், அவள் மிக மெதுவாகவே நீந்திச்சென்ருள். கரைக்கு வெகு தூரத்திலேயே அவள் தங்கிவிட்டாள். அவள் மிகவும் களைப்படைந்து விட்டாள். யாரோ தன் குடத்தின்மேல் மந்திரம்போட்டு விட்டார்கள் என்ற ஆச்சரியமான எண்ணம் அவளுக்கு இப்போது உண்டாயிற்று:

"ஆயிரக் கணக்கான குடங்களிலிருந்து ஒரு நல்ல குடத்தைத் தேர்ந்தெடுத்தேன். அதன்மேல்

சித்திரம் வரைந்தேன். இன்று அதே குடம் எப்படியோ தண்ணீரில் முழுகிவிட்டது. நான் பக்குவப்படுத்தி யிருந்த குடத்தையே, என் துர்ப்பாக்கியம் பச்சையாக்கி விட்டது'' என்று அவள் புலம்பினாள்.

குடம் மாற்றி வைக்கப்பட்ட குடம். தங்கள் குலத்தைக் கெடுத்த பெண்ணை முழுகடிப்பதற்காகவே, சுகுணியின் பெற்றோர், அவளுடைய குடத்துக்குப் பதிலாக அதேமாதிரியான மற்றொரு குடத்தை மாற்றி வைத்துவிட்டார்கள். அன்பும் கள்ளம் கபட மற்ற உள்ளமும் படைத்தவளான சுகுணிக்கு இதைப்பற்றிய தகவல் தெரியாது. அவள் என்றும்போல் இன்றும் அதே இடத்திலிருந்து குடத்தை எடுத்துக் கொண்டு, கரையை வந்தடைந்தாள்.

## 4

சுகுணி இன்று ஆதாரமற்றவளானாள். தண்ணீரைக் கிழித்து முன்னேறுவதற்கு விரும்புகிறாள்; ஆனால், கைகளில் வலிமையில்லை. கருக்கிருட்டு; அக்கரையில் யாருமே காணப்படவில்லை; இக்கரையிலிருந்து சுகுணியை யாரும் காணமுடியாது. அக்கரையில் ஆடு மாடுகள் மேய்கின்றன. அவைகளின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணிகள் விட்டுவிட்டு ஒலிக்கும் ஓசை கேட்கிறது. மேஹரின் மதுரமான குழலோசையும் கேட்கிறது.

"இந்த மணிகள் எங்கேயிருந்து ஒலிக்கின்றன? என் பிரியமான அக்கரை இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது? இன்று இரவு பூராவும் என் வரவை நோக்கி வீரன் மேஹர் குழலூதிக் கொண்டே யிருப்பான். அவனுடைய குழலிலிருந்து எழும் பவித்ரமான மூல மந்திர ஓசையின்மேல் காது வைத்து இத்தனை அலைகளையும் கடந்துவிட்டேன்; ஆனால், இப்போது என் கைகளில் பலம் இல்லை; கால்களிலும் பலம் இல்லை... பரவாயில்லை; குடம் என்னவோ மோசம் செய்துவிட்டது. அல்லாவே! எங்கள் சந்திப்பில் ஒருவித மோசமும் உண்டாக்கவேண்டாம்! எதிரே மேஹர் தண்ணீரில் குதித்துவிட்டான். அவனுடைய தலைப்பாகை நனைந்து மிகவும் பாரமாகியிருக்கும். ஆண்டவனே! தண்ணீர் ஆழமோ, இல்லையோ; அதைப்பற்றி எனக்குக் கவலை கிடையாது. நீந்திச்சென்று நான் என்னுடைய மேஹரின் முகத்தைக் காண்பதற்கு உதவிசெய்யப் பிரார்த்திக்கிறேன்.''

ஆனால், அவளுக்கு அவனது முகத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. குழலோசை, யைக் கேட்டுக்கொண்டே தண்ணீர்ப் படுக்கையில் தனிமையாக இருக்கவேண்டியதுதான். சிந்து நதியின் மத்திய பாகத்தை யடைந்தவுடன், அபலை சுகுணி களைப்பு மேலிட்டுச் செயலற்று விட்டாள். கண்கள் இருண்டு விட்டன. தலை சுழல ஆரம்பித்தது. கண்கள் திறந்தன. மரண தேவன் கண்முன் நிற்கிறான். இருந்தபோதிலும், அவளுடைய இதயம் மேஹரிடம் சென்று விட்டது.

குழலோசை மிகவும் இனிமையா யிருந்தது. குழலின் கீத ஆனந்தத்தைப் பங்கப்படுத்தச் சுகுணி விரும்பவில்லை. ஆனால், அவளுடைய தேகம் ஜலத்திலே சமாதியாகத் தயார் ஆகிக் கொண்டிருந்தது. ஓர் அலை வந்து

மோதி சுகுணியின் காலைக் குலுக்கிச் சென்று விட்டது. அவள் மிதந்து சென்றாள். மிதந்து செல்லும்போது, அவள் வாயிலிருந்து பலமாக இதயத்தைப் பிளக்கும் கீச்சென்ற ஒரு சப்தம் பீறிட்டது: "மேஹர்! மேஹர்!! ஓ மேஹர்!!!"

சப்தம் எழும்பியதும், குழலோசை நின்றுவிட்டது. "இதோ வருகிறேன்" என்ற சப்தத்துடன் மறுகரையில் யாரோ தண்ணீரில் குதிக்கும் ஓசை கேட்டது.

தண்ணீரில் முழுகி மிதந்து வரும் சுகுணி என்னவோ அலை மோதியவுடன் கூக்குரலிட்டு விட்டாள் ஆனால், உடனே அவள் பச்சதாபப் பட்டாள். அன்று மீன் கிடைக்காதபோது, மேஹர் தன் தொடையைக் கீறி மாமிசம் எடுத்த ரணம் இன்னும் ஆறவில்லை என்பது அவளுக்கு ஞாபகம் வந்தது. "அந்த ரணத்துடன் மேஹர் நீந்த முடியாது; அப்படி நீந்தி வந்தால் எனக்காகப் பிராணனைப் பொருட்படுத்தாமல் நீந்தி வரவேண்டும்" என்று நினைத்தாள்.

முதலில் அவள் குடத்தைப் பிடித்துக்கொண்டு நீந்தினாள். குடம் முழுகியதும், இரண்டு கைகளையும் பரப்பி நீந்தினாள். முழுகியவுடன் நதியிலிருந்து, நிர்க்கதியான ஒரு பெண் குரல் எழும்பியது: "என் பிரிய சாகாட்! என் மேஹர்! நீ திரும்பிச் சென்றுவிடு. நதியிலுள்ள ரத்தத்தை உறிஞ்சும் பிராணிகள் என்னைச் சூழ்ந்துகொண்டு விட்டன."

கடைசியாக, மறுபடியும் குரல் எழும்பியது: "வராதே, மேஹர்! நீ இங்கே வாராதே"

ஆனால், மேஹர் யாருக்காகத் திரும்பிச் செல்வது?

அவன் பலதடவை முழுகினான். குகைகளைக் கண்டான்; ஆனால், சுகுணியைக் காணமுடியவில்லை. அவன் தொடையின் ரணம் கிழிந்தது. அதிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்தது. சிறிது நேரத்தில் பிரக்ஞையற்ற அவன் சரீரம் "சுகுணி! சுகுணி!" என்ற ஓலத்துடன், ஆழமான ஜலராசிக்குள்ளே சுகுணியைத் தேடிக் கொண்டே சமாதியடைந்துவிட்டது.

பொழுது விடிந்தது. அன்னை சிந்து இரு காதலர்களின் சவங்களையும் ஒன்றாகவே ஒரே கரையில் கொண்டுவந்து சேர்த்தாள். சுகுணியின் சுற்றத்தார்கள் சிந்து நதிக்கரையில் வந்துகூடினார்கள். காதலர் இருவரும் ஒன்றாகவே புதைக்கப்பட்டார்கள். மேலே சமாதியொன்றும் எழும்பியது. உயிரோடிருந்தவர்களை ஜனங்கள் பிரித்தார்கள். ஆனால், இறந்தவர்களைப் பிரிக்க, யாருக்கும் மனமில்லை; துணிவுமில்லை.

*

## கௌரவமும் அரசியல் வாதியும்

தேச கௌரவத்தை (ஏன், கௌரவப் பட்டங்களின் ஜாபிதாவில் காண்பதை யன்றி வேறெந்த கௌரவத்தையுமேதான்) ஓர் அரசியல் வாதிக்கு விளக்கிச் சொல்வதென்றால், அது அசாத்தியமான காரியமாகும். பிறவிக் குருடனுக்கு, சூரியோதய சௌந்தர்யத்தை எங்கேயாவது விளக்கிச் சொல்லமுடியுமா?

—ஸி. பி. ஒகானல்



# பரம்பரையாக அழகைக் காப்பாற்றுதல்

சிறு பெண்களுக்கு புத்தி சொல்ல தாயார்களைக் காட்டிலும் சிறந்தவர் இல்லை. சுத்த ஜலமும், பியர்ஸ் சோப்பும் கொண்டு, ஒழுங்கான முறையால் சருமத்தின் அழகைக் காப்பாற்றிக் கொள்வதே இந்தத்தாய் தன் மகளுக்குக் கற்பிக்கும் புத்திமதிகளில் ஒன்று. தன் தாயிடமிருந்து கற்ற இந்த முறையைத்தான் இவள் தன் சிறுவயதிலிருந்தே அனுசரிக்கிறாள். அதனால்தான் இவளுடைய சருமமும் இன்றுவரை மாசில்லாமல் காணப்படுகிறது. மகளும் தன் சருமத்தை ஜாக்கிரதையாக அதே மாதிரிக் காப்பாற்றிக்கொண்டு வருகிறாள். ஆகையினால், இவள் சருமமும் தாயினுடையதைப் போல யாதொரு பழுதுமின்றி விளங்கும்.

நாற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளை விட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.



# பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 39-50 TM

A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

| சோனல் | பயோ-சரசா |
|---|---|
| படை, சொறி சிரங்கு, முகப் பரு, சேற்றுப்புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங் களுக்கும் சிறந்த களிம்பு. | **IODISED SARASAPARILLA**<br>ரத்த சுத்தி திராவகம்<br>துர்நீர் சம்மந்தமான சொறி சிரங்கு, கட்டி, மேகப்பத்து, கரப்பான் முதலியவைகளுக் கும், வெட்டை சம்மந்தத்தால் ஏற்படும் கை, கால், இடுப்பு வலி கள், பிடிப்பு, பக்ஷவாதம், மொழி சூலை முதலிய சகல வியாதி களுக்கும் சிறந்த மருந்து.<br>பாட்டில் 1-க்கு விலை 2-8-0 |

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

ஏஜண்டுகள்

**T. N. C. நாகலிங்கம் பிள்ளை & சன்ஸ்**

மருந்து ஷாப் : : மதுரை

use

# KESHA-MITRA

**HAIR-OIL**

(VEGETABLE)

A LITTLE'S ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த

நீண்ட கேசத்திற்கு

# கேச மித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை

அறவே போக்குகிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும்
கிடைக்கும்



லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

அண்ட் பார்மகூடிகல்ஸ் லிமிடெட்

11-12, முதல் லைன் பீச் : : சென்னை

# அன்னி பெஸண்ட்

கோவை அ. அய்யாமுத்து

இந்தியாவிலே பல்லாண்டுகள் மேன்மையுடன் வாழ்ந்திருந்த அன்னி பெஸண்ட் அம்மையாரையும், அவர் இந்த நாட்டுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் புரிந்துள்ள சிறந்த ஊழியத்தையும் அறியாதார் யாருமிரார். அம்மையாரின் பிறப்பும், வளர்ப்பும், அவர் இந்தியாவுக்கு வருமுன்னர் பட்ட கஷ்டங்களும், பெற்ற அநுபவங்களும் நாம் அறிய வேண்டியவையாகும்.

1847-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், லண்டன் மாநகரில் 'டெவான்ஷயர்வுட்' என்ற வமிசத்தில் அன்னி பிறந்தார். அவருடைய தாய் அயர்லாந்து தேசத்தவள். தந்தையின் தாயும் அத்தேசத்தவளே. எனவே, அன்னியின் உடலில் மூன்றில் இரண்டு பாகம் அயர்லாந்து ரத்தமும், ஒரு பாகம் ஆங்கில ரத்தமும் கலந்திருந்த தென்னலாம்.

அன்னியுடன் பிறந்த சகோதரர் இருவர். ஒருவன் இரண்டு ஆண்டுகள் மூத்தவன், மற்றவன் ஓராண்டு இளையவன். அன்னியின் தந்தை கல்விமான். குடும்பத்தை நடத்தப் போதுமான வருவாய் உடையவர். ஒரு நாள் இவர் சில வைத்திய நண்பர்களுடன் சேர்ந்து, க்ஷயரோகத்தாலிறந்துபோன சவத்தை அறுத்துப் பரிசோதனை நடத்தினர். அப்போது அதன் நெஞ்செலும்பு முறிந்து இவருடைய விரலில் பட்டுக் காய முண்டாயிற்று. அந்த விரலைத் துண்டித்து விடுமாறு டாக்டர்கள் சொல்லியும் இவர் கேட்கவில்லை. 1852-ஆம் ஆண்டு க்ஷயரோகத்துக்காளாகி மாள நேர்ந்தது. அவர் இறந்த சிலநாட்களில் அன்னியின் தம்பியும் மரணமடைந்தான்.

அன்னியின் அன்னைக்குத் தன்னுடைய மூத்த மகனை நன்றாய்ப் படிக்க வைக்க வேண்டுமென்ற ஆவல். ஆனால், கையில் பணமில்லாத விதவை. உதவிக்கு யாருமில்லை. இந்த நிலையை யறிந்த அக்கம் பக்கத்தார்கள் "என் வீணைகப் பகற்கனவு காண்கிறாய்? உன் பையனை எங்கேயாவது ஒரு தொழிலில் அமர்த்துவதுதானே" என்று ஆலோசனை கூறினார்கள். அவள் மனம் இசையவில்லை. தன் இரு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு லண்டனை விட்டு 'ஹாரோ' என்னு மிடத்துக்குச் சென்றாள். அங்கேயுள்ள கல்லூரியி னருகில் ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து, குடித்தனத்தை ஆரம்பித்து, கல்லூரி மாணவர்கள் சில பேர்களைச் சேர்த்து 'ஹாஸ்டல்' நடத்தினாள். இவ்வருவாயைக் கொண்டு, தன்னையும், தன் குழந்தைகளையும் அவள் காப்பாற்ற முடிந்தது. தன் எண்ணப்படியே தன் மகனையும் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்தாள்.

---

இந்திய சுதந்தரப் போராட்டத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவர் அன்னி பெஸண்ட். இந்து வேதாந்த தத்துவங்களில் உலகமே சிரத்தை கொள்ளச் செய்தவர்களிலும் ஒருவர் அவர். அடையார் தியஸாபிகல் சங்கத்தின் மூல கர்த்தர்களிலும் ஒருவர். அவர் வாழ்க்கை பூராவுமே ஒரு பெரும் போராட்டமாகும்.

அன்னிக்கு எட்டு வயதிருக்கும்.

மிஸ் மரியாள் என்ற பணக்கார மாதொருத்தி அவளைக் காண நேர்ந்தது. அன்னியின் மீது மரியாளுக்கு ஆசை பிறந்தது. "இந்தப் பெண்ணை என்னுடன் அனுப்பு. நான் அவளுக்கு உணவும், உடையும், தகுந்த கல்வியும் அளித்துப் பெரியவளாக்கி உன்னிடமே அனுப்பி விடுகிறேன்" என்று தாயிடம் சொன்னாள். பிச்சைக்காரிக்கும் தன் பிள்ளையைப் பிரிய மனம் வராது. அன்னியைப் பிரிய, அவள் அன்னைக்கு லேசில் மனம் வருமா? வெகுநாள் யோசித்துப் பார்த்தாள். ஆண் பிள்ளைகளான மாணவர்கள் கூட்டமாக வசிக்கும் வீட்டிலே ஒரு பெண்ணைத் தனியாக வளர்ப்பது கடினமென்று உணர்ந்தாள். தன் எளிய நிலைமையில் தன் பெண்ணுக்கும் தகுந்த கல்வி அளிப்பது இயலாத காரியமென்று அவள் மனதிற் பட்டது. ஒருவாறு மனந்தேறி அன்னியை மரியாளுடன் அனுப்பி வைத்தாள்.

மரியாள் கல்யாணமாகாதவள். அவள் வீட்டிலே அவள் வாழ்க்கையை இன்புறச் செய்ய மக்கள் இல்லை. வேறு துணையுமின்றித் தன்னந்தனியே இருந்தாள். இந்த நிலையில் அன்னி கிடைத்தது அவள் மனதுக்கு ஆறுதலாய் இருந்தது. அன்னிக்குத் துணையாக மற்றொரு பெண்ணையும் சேர்த்தாள். இந்த இரண்டு பெண்களையும் மரியாள் தன்னிரு கண்களேபோல் கண்காணித்து வளர்த்தாள். அன்னி அவளுடன் ஒன்பதாண்டுகள் வசித்தாள். சிறந்த கல்வி பயின்றாள். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளில் தேர்ச்சி பெற்றாள். சங்கீதமும் கற்றாள். படிப்பிலே அவளுக்கு மட்டில்லாப் பிரியம் இருந்தது. சிறந்த ஞாபகசக்தி யுடையவள். எதையும் விரைவில் மனப்பாடம் செய்து இனிய குரலில் உரக்க ஒப்புவிப்பாள். மில்டனின் 'சுவர்க்க நீக்கம்' அவளுக்கு வெகு பிரியம். பிசாசுடன் நேராகப் போராடுவது போல் கனவு காண்பாள். "போராடுங் காலமெல்லாம் போய்விட்டதே. காலங்கடந்து நான் பிறந்துவிட்டேனே. ஒரு புத்தப் புதிய கொள்கையைப் பரப்பிய குற்றத்துக்காக ரோமாபுரி அரசன் என்னைத் தண்டித்து, பசியால் மெலிந்த சிங்கத்துக்கு என்னை இரையாக்கினால், ஆஹா! எவ்வளவு அற்புதமாய் இருக்கும்!" என்றெல்லாம் அன்னி பகற் கனவு காண்பதுண்டு.

1863-ஆம் ௵ அன்னி, மரியாளிடம் விடைபெற்றுக் கொண்டு ஹாரோவிலிருந்த தன் அன்னையிடம் வந்து சேர்ந்தாள்.

1866-ஆம் ௵ ஈஸ்டர் வாரம். புதிதாகக் கட்டப்பட்ட ஒரு தேவாலயத்தில் ஜோடனைகள் வெகு மும்முரமாய் நடந்து கொண்டிருந்தன. ஈஸ்டர் வாரத்தில்தான் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைபட்டது. அந்த வாரத்தின் மகிமையை ஒரு கட்டுரையாக வரைய வேண்டுமென்ற ஆவல் பிறந்தது அன்னிக்கு. உடனே மத்தேயு, மார்க்கு, லூக்கா, ஜான் ஆகிய நான்கு அப்போஸ்தலர் எழுதிய சுவிசேஷங்களையும் புரட்டினாள். இந்த நாலு பேரும் இயேசுவின் சீடர்கள். யேசுவுடன் இருந்தவர்கள். ஆனால், அவர்கள் கூற்று ஒன்றுக் கொன்று முரணாயிருந்தது. அன்னியின் மனதிலே சந்

தேகம் பிறந்தது. யேசுவிடம் தெய்வீகத் தன்மை இருந்திருக்குமா என்று யோசிக்கலானுள்.

இந்த வாரத்திலே பிராவ் பெசண்ட் என்ற வாலிபனைக் கண்டாள். அவன் கேம்பிரிட்ஜிலே கல்வி பயின்றவன். புதிய தேவாலயத்தில் பாதிரியாய் இருந்தான். இவனை அன்னி மணப்பதென்று ஏற்பாடாயிற்று.

அன்னிக்குக் கல்யாணம் என்ற பேச்சே பிடிக்கவில்லை. எதற்காக ஒருவனைக் கட்டிக்கொண்டு அவன் சொற்படி நடந்து சீரழிய வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு. தன் அன்னையிடம் சொல்லிப் பார்த்தாள். அன்னைக்கு மன வருத்தம் ஏற்படும்போலிருந்தது. வேண்டா வெறுப்பினளாய் பிராவ் பெசண்டை 1867-ஆம் ஆு மண முடித்துக் கொண்டாள். அப்போது அன்னிக்கு ஆண்டு இருபது.

மனம்போல் வாழ்வு. புருஷனுக்கும் பெண்சாதிக்கும் ஒத்துக் கொள்ள வில்லை. எப்படியோ நாயும் பூனையும்போல் வாழ்க்கை நடந்தது. அன்னிக்குச் சில சமயம் கோபம் வரும். புருஷனின் அதிகார தோரணையை ஆட்சேபித்துச் சண்டை போடுவாள். சில சமயம் மூலையில் உட்கார்ந்து, சிறு குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுவாள். அவள் மனதிலே சில சமயம் உறுதி தோன்றும்; சில சமயம் தளர்ச்சி தோன்றும். படிப்பதிலும் எழுதுவதிலும் பொழுதைப் போக்கி வந்தாள். 1868-ஆம் ஆு முதன் முதலாக ஒரு கட்டுரை எழுதினுள். பல சிறு கதைகளும் எழுதினுள். 'கறுப்பெழுத்து மகான்கள்' என்பது அவள் எழுதிய கட்டுரையின் தலைப்பு. ஆங்கிலப் பஞ்சாங்கத்திலே பல மகான்கள் பிறந்த தேதிகள் சிவப்பு எழுத்திலும், கறுப்பு எழுத்திலும் அச்சிடப்பட்டிருக்கும். நம் சிவாலயங்களிலே அறுபத்துமூன்று நாயன்மார்கள் உற்சவம் கொண்டாடப்படுவதைப்போல், கிறிஸ்தவ தேவாலயங்களிலே சிவப்பெழுத்து மகான்கள் பிறந்த தினங்களில் விசேஷ ஆராதனைகள் நடைபெறும். ஆனுல், கறுப்பெழுத்து மகான்களுக்கு அந்தப் பாக்கியம் கிடையாது. எனவே, அன்னிக்கு அவர்கள்மேல் பச்சாத்தாபம் தோன்றியது போலிருக்கிறது. அந்தக் கட்டுரையை யாருக்கோ அனுப்பினுள். அவர்கள் அதை வெளியிடாமல் வெகு பத்திரமாய் வைத்துக் கொண்டார்கள். சிறு கதையொன்றை 'பேமிலி ஹெரால்டு' என்ற பத்திரிகைக்கு அனுப்பினுள். அவர்கள் உடனே ஒரு கடிதமும் அதோடு முப்பது ஷில்லிங்குக்கு ஒரு செக்கும் அனுப்பினுர்கள். கதை ஏற்றுக் கொள்ளப்பட்டவுடனே, பிரசுரமாவதற்கு முன்னமே ஒரு கதைக்கு ஒன்றரைப் பவுன் - முப்பது ரூபாய் - வந்துவிட்டது!

முப்பது ஷில்லிங்கைப் பார்த்ததும் அன்னி பெசண்டுக்கு மூர்ச்சை தட்டிவிடும் போலிருந்தது. அவ்வளவு ஆனந்தம். 'என் பணம், என் பணம்' என்று குதித்தாள். "போடிபோ! பைத்தியமே! ஏன் வீணுக உளறுகிருய். உனக்கேதடி பணம்! ஆங்கிலச் சட்டத்தை நீ படித்த தில்லையோ?" என்று யாரோ உறுமியதுபோல் அவள் காதில் பட்டது. அந்தக் காலத்து ஆங்கிலச் சட்டப்படி கல்யாணமான பெண்ணுக்குத் தனிச் சொத்துரிமை கிடையாது. எல்லாம் கணவனுக்குத்தான்

சொந்தம். இருந்தாலும், ஏதோ சுய முயற்சியால் சம்பாதிக்கும் தைரியம் பிறந்து விட்டது அன்னி பெஸண்டுக்கு. பல கதைகள் எழுதிப் பல பவுன்கள் சம்மானம் பெற்ருள்.

1869-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அன்னி ஆண் மகவொன்றைப் பெற்றெடுத்தாள். அடுத்த வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. புத்தகங்களை யெல்லாம் தூக்கி மூலையில் எறிந்துவிட்டுக் குழந்தைகளைப் பராமரிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தினுள். பையனுக்கு ஜுரங் கண்டு ஒருவாறு தப்பிப் பிழைத்தான். கைக்குழந்தைக்கு ஓராண்டிருக்கும். அதற்கும் ஜுரம் கண்டது. மார்பில் சளிகட்டி, சுவாசம் தடைப்பட்டது. உதவிக்கு ஆள் இல்லை. இரவும் பகலும் கண்விழித்து அதைக் காத்து வந்தாள். "இனி அது பிழைக்க முடியாது; இன்னுஞ் சில மணி நேரத்தில் அதன் பிராணன் போய்விடும்; சாகும்போது கஷ்டப்படாமல் சாகட்டும்" என்று சொல்லி ஒரு துளி 'குளோரபாம்' மயக்க மருந்தைப் பஞ்சில் விட்டுக் குழந்தையின் மூக்கின்மேல் வைத்துவிட்டுப் போய்விட்டார் டாக்டர். அன்று இரவு முழுவதும் எமனுடன் போராடியது அந்தக் குழந்தை. அன்னி விழித்த கண் மூடாமல் பார்த்திருந்தாள். டாக்டர் சொன்னபடி குழந்தை சாகவில்லை. பிழைத்துக்கொண்டது.

பல நாட்கள் நல்ல உணவும், நல்ல உறக்கமும், ஓய்வும் இல்லாததால், அன்னிபெஸண்டின் உடல் நலிவுற்றது. ஒரு வாரம் படுத்த படுக்கையாய்க் கிடந்தாள். இந்த நாட்களிலே அவள் மனதில் ஒரு பூகம்பம் கிளம்பியது. அவளுடைய ஆன்மாவின் அஸ்திவாரத்தைப்பெயர்த்தது. "ஆண்டவனும் ஆண்டவன்! கருணைக் கடலாம்! என் குழந்தை, அறியாக் குழந்தை, ஒரு வயதுக்குழந்தை என்ன பாபம் செய்தது, நோயால் இப்படிக் கஷ்டப்பட! போதாக் குறைக்கு எனக்கும் நோய். என் குழந்தைகளை யார் காப்பாற்றுவார்கள்? கடவுளாவது மண்ணுங்கட்டியாவது" என்று அவள் மனம் தடுமாறினுள். உடுக்க உடையும், குடிக்கக் கஞ்சியும், இருக்க நிழலுமில்லாமல் ஏழைகள் படுங் கஷ்டமெல்லாம் அவள் மனதை உறுத்தின. அவள் தாயை எவனே மோசம்செய்து கடனில் ஆழ்த்தி விட்டான். அதுவும் அவள் நெஞ்சில் ஆழமாகத் தைத்தது. கிறிஸ்துவைப்பற்றி அவள் கொண்டிருந்த எண்ணங்கள் யாவும் காற்றில் பறந்தன. மதத்தில் அவள் கொண்டிருந்த பற்று மாயமாய்மறைந்தது. கடவுளிடம் வைத்திருந்தபக்திகரைந்துமறைந்தது. 'அன்பே கடவுளென்ருல், அவனியில் துன்பமேன்?' என்று அவள் மனம் துடிதுடித்தது.

இந்த மர்மத்தை விளக்குமாறு கடவுளின் பிரதிநிதியாக விளங்கும் தன் பாதிரி பர்த்தாவைக் கேட்டாள். அவனுல் ஒன்றும் விளக்க முடியவில்லை. வேருெரு பாதிரியின் உதவியை நாடினுள். அவரும் "துன்பத்தின் மர்மத்தை அறிய முடியாது; யேசுவின் சிலுவையில் நம்பிக்கை வை" என்று சொல்லிவிட்டார்.

1879-ஆம் ஆண்டில் ஒருநாள் அவள் புருஷன் அவளைப் பிரமாதமாய்க்கோபித்துவிட்டு வெளியே சென்றிருந்தான். வீட்டில் யாருமில்லை. சாளரத்தின் வழியே பரந்த வானவெளியைப் பார்த்து நின்ருள் அன்னி. அவள் மனம்

ஊசலாடிக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தாள். ஓர் அறைக்குள் வேகமாய்ச் சென்றாள். ஒரு சிறிய புட்டியை எடுத்தாள். மீண்டும் ஜன்னலருகில் வந்தாள். 'வாழ்க்கையின் போராட்டம் முடிந்தது. இனிக் கவலையில்லை' என்ற ஆனந்தம் அவள் முகத்தில் கூத்தாடியது. புட்டியைத் திறந்தாள். அதனுள் ளிருந்த திரவத்தைக் குடிக்க வாயருகே கொண்டு போனாள். "ஓ! கோழை! கோழை!" என்ற சப்தம் ஏதோ அவள் காதில் விழுந்ததுபோல் தோன்றியது. வெட்கம் அடைந்தாள். விஷப் புட்டியை வெளியே வீசி எறிந்தாள். சில நிமிஷம் உறுதியுடன் நின்றாள். பின்பு மயக்கமுற்றுத் தரையில் சாய்ந்தாள். அதுவே நோயாகப் பல நாள் படுக்கையில் இருந்து பரிதவித்தாள்.

உடல் நலம் பெற்றபின் சிலநாள் தன் தாயிடம் சென்று வசித்தாள். அப்போது செயிண்ட் ஜார்ஜ் மண்டபத்தில் ரெவரண்ட் சார்லஸ் வொசே என்பவர் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அன்னி அந்தப் பிரசங்கத்தைக் கேட்டாள். அதன்பின் கடவுளைப் பற்றிய எண்ணத்தில் மாறுதல் ஏற்பட்டது. கடவுள் அன்பும் கருணையு முள்ளவர் என்று மனந் தெளிந்தாள். ஆனால், யேசுவின் கடவுள் தன்மையை மட்டும் அவளால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

இதன். பிறகு தாமஸ் ஸ்காட் என்ற பெரியாரைப் பார்த்தாள். அவர் சமயக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகி ஒவ்வொரு விஷயத்தையும் சுதந்தரமாக எண்ணும் இயல்புடையவர். அவருடைய வீடு ஓர் அறிவு விளக்க சபையாகத் துலங்கியது. பல பெரியார்கள் அங்கே கூடிப் பற்பல நுட்பமான கருத்துக்களை விவாதிப்பது வழக்கம். இந்த விவாதங்களில் அன்னியும் கலந்து பயன் பெற்றாள். இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. மீண்டும் கணவன் வீடுபோய்ச் சேர்ந்தாள்.

1873 ஆம்ஆண்டு அன்னி ஒரு பிரசங்கம் செய்தாள். இதுதான் அவள் முதல் முதலாகச் செய்த பிரசங்கம். இந்தப் பிரசங்கத்துக்குத் தலைமை வகித்தது ஒரு காலி நாற்காலி! பிரசங்கத்தைக் கேட்ட கூட்டமோ நாற்காலிகளும் பெஞ்சுகளும், சர்ச்சின் சுவர்களும், கதவு ஜன்னல்களும்! சர்ச்சில் யாருமில்லாத சமயம். அதற்குள் அன்னி நுழைந்தாள். மேடை மீதேறினாள். மனதில் என்னவோ தோன்றிற்று. உடனே ஒரு சபைமுன் பேசுவதாக எண்ணிக்கொண்டு சுமார் அரைமணி நேரம் சரமாரியாகப் பிரசங்கம் செய்துவிட்டாள். அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளுடைய செவியைத் துளைத்து இன்பம் கொடுத்தது. 'ஓகோ! நமக்கும் இப்பேர்ப்பட்ட ஒரு சக்தி இருக்கிறதா!' என்று அவள் மனம் பூரித்தது.

பிரதி ஞாயிற்றுக் கிழமையும் பிரார்த்தனை முடிந்தபின் பக்தர்கள் பாதிரியை நெருங்கி அவர் மூலம் யேசுவின் நற்கருணையைப் பெறுவது வழக்கம். ஒரு ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை முடிந்ததும், இந்தச் சடங்கைப் பெறாமல் அன்னி வெளியேறினாள். பாதிரியின் மனைவி இவ்வாறு சென்றது அங்கிருந்தவர்களிடம் பரபரப்பை உண்டாக்கியது.

ஊரெங்கும் இதே பேச்சாய் முடிந்தது. "சர்ச்சின் கட்டுப் பாட்டுக்கு நீ அடங்கி நடக்க வேண்டும்," என்றான் கணவன். முடியாதென்று மறுத்தாள் மனைவி. இந்த விஷயம் அன்னி யின் தாய் காதுக்கும் எட்டிற்று அவள் கடுந்துயரில் ஆழ்ந்தாள். தன் மகளுக்கு எவ்வளவோ சொல்லியும் பயனில்லாது போயிற்று.

1873 ஆம் ஆகஸ்டு மாதம் அன்னி தன் கணவனை விட்டுப் பிரிந்தாள். பெண் குழந்தையை அவள் கூட்டிச்செல்ல அநுமதிக் கப்பட்டது. அன்னி தன்னந் தனியளாய் உலகில் நின்றாள்.

ஒரு கிறிஸ்தவ குருவின் வீட் டில் சமையல் வேலை கிடைத்தது. குழந்தை மேபலைத் தன் தாயிடம் ஒப்புவித்துவிட்டு அந்த வேலையில் அமர்ந்தாள். 1874 ஆம் மத் தியில் இவ்வேலையினின்று நீங்கித் தன் தாயுடன் சென்று வசித் தாள். சில நாளில் அவள் தாய் நோயுற்று, இந்த மண்ணுலகை விட்டு நீங்கிவிட்டாள். அன்னி தன்னிடமிருந்த சில நகைநட்டுக் களையும் பணமாக மாற்றி, ஒரு வேளை உண்டும் உண்ணாமலும் காலங் கடத்திவந்தாள். பிரதி தினமும் பிரிட்டிஷ் மியூசியத்துக் குச்சென்று பல புத்தகங்களை வாசிப்பாள். இரவில் வீடுசேர் வாள். தாமஸ் ஸ்காடின் வீட் டில் சில சமயம் போஜனம் செய் வாள். குழந்தையைக் கவனித் துக்கொள்ள ஒரு வேலைக் காரியை அமர்த்தியிருந்தாள்.

இந்தக் காலத்தில் அன்னியின் மனதில் மீண்டும் கடவுளைப்பற் றிய குழப்பம் ஏற்பட்டது. பிரார்த்தனை செய்வதை நிறுத்தி னாள். புத்தியுள்ள கடவுளா யிருந்தால் நான் சொல்லாமலும் கேட்காமலும் எல்லாம் செய்வா ரென்பது அவளுடைய முடிவு. "கடவுளின் இயல்பும் இருப்பும்" என்றொரு கட்டுரை எழுதி முடித் தாள்.

1874 ஆம் ஆகஸ்டு மாதத் தில் அன்னி பெசண்ட் சார்லஸ் பிராட்லா என்னும் அறிஞனைச் சந்தித்தாள். விஞ்ஞான மண்ட பத்தில் அவருடைய பிரசங்கத் தைக்கேட்டு அப்படியே மனம் சொக்கிப்போனாள். "கிருஷ்ண னும் கிறிஸ்துவும்" என்பது அன்று பிராட்லா பேசிய விஷ யம். அவர் அந்த இரண்டு புரா ணங்களின் கட்டுக் கோப்புகளை யும் தகர்த்துச் சின்னாபின்னமாக் கித் தூக்கி எறிந்தார். பிராட் லாவைச் சந்திக்கு முன்பே, அவர் தலைமை வகிக்கும் 'தேசீய உல காயதச் சங்கத்தில்' அங்கத்தின ராவதற்கு அன்னி விண்ணப்பம் போட்டிருந்தாள். பிராட்லா அன்னியை முன்பின் கண்ட தில்லை. என்றாலும் அன்று பிர சங்கம் முடிந்ததும், அவர் நேரே அவளிருக்குமிடத்துக்குச் சென்று "மிஸஸ் பெசண்ட்" என்று அவளை நோக்கி விளித்து, அங்கத்தினரின் பத்திரத்தை அவள் கையில் கொடுத்தார். "நான்தான் அன்னி என்று உங் களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று அன்னி மற்றொரு சமயம் அவரைக்கேட்க, "உன் முகத் தைப் பார்த்ததும் நீயாய்த்தான் இருக்கவேண்டுமென்று எனக் குத் தோன்றியது" என்று சொல்லிச் சிரித்தார் பிராட்லா.

"ஒரு விஷயத்தைப்பற்றி உன் அபிப்பிராயத்தைக் கூறுமுன், உன் அபிப்பிராயத்துக்கு நேர் விரோதமாக மற்றவர் கூறும் அபிப்பிராயத்தைத் தெரிந்து

கொள். ஒரு விஷயத்தைப்பற்றிப் பற்பல அறிஞர்கள் கூறியுள்ள கருத்துக்களனைத்தையும் ஆராய்ந்து பாராமல், அந்த விஷயத்தை நீ முற்றிலும் அறிந்துவிட்டதாக எண்ணவேண்டாம். பொது மக்களிடையே ஊழியம் செய்ய விரும்புகிறவன், தான் வெளியில் பிரசங்கம் செய்வதைவிட அதிகமும், அதிக நேரமும் தன் வீட்டுக்குள் உட்கார்ந்து படிக்கவேண்டும். உன் கருத்துக்கிசைய மற்றவர்கள் கூறுவதைப் படித்து, வீண் காலம் போக்கவேண்டாம். உன் கருத்துக்கு எதிர்மாறுயுள்ள விஷயங்களைப் படித்தால், சில சமயம் உனக்குத் தெரிந்திராத பல உண்மைகள் புலனாகும்'' என்று அன்னிக்குப் பிராட்லா உபதேசித்தார்.

அந்தக் காலத்தில் சார்லஸ் பிராட்லா தம் கொள்கையின் காரணமாகக் 'கிறிஸ்தவ அன்பர்களின்' தாக்குதலுக்காளாகி, தொழில்புரிந்து, பொருள் நஷ்டமுற்று, மனைவிமக்களைப் பிரிந்து, தன்னந்தனியராய்க் கஷ்ட திசையில் காலங்கடத்திவந்தார். அன்றையதினம் என், அவர் சாகும் வரையிலும்தான் அவரிடமிருந்த பொக்கிஷம், அவருக்குச் சொந்தமான ஏழாயிரம் புத்தகங்களும், அவருடைய பேனாவும் நாவுந்தான்.

அன்னி, தான் எழுதிவைத்திருந்த 'கடவுளின் இயல்பும் இருப்பும்' என்ற கட்டுரையை, பிராட்லாவிடம் படித்துக்காட்டினாள். இதற்கு முன் ஒருவன் நாஸ்திகனாய் இல்லாமலே தேசிய உலகாயத சங்கத்தில் சேரமுடியுமா என்று பிராட்லாவின் 'நேஷனல் ரிபார்மர்' பத்திரிகைக்கு அவள் எழுதிக் கேட்டிருந்தாள். "ஆகா! பேஷாய்ச் சேரலாம். சங்கத்தின் கொள்கைகள் உமக்கு உடன்பாடாயிருந்தால் உம்முடைய கொள்கைகள் எதுவாயிருந்தாலென்ன?'' என்று பிராட்லா அந்தப் பத்திரிகையில் பதில் எழுதியிருந்தார். அன்னி தன் கட்டுரையைப் படித்து முடித்ததும், "உலகாயதம் என்னவென்று தெரியாமல் உன் எண்ணங்கள் அந்தத் துறையில் பிரவேசித்துவிட்டன. உன் கட்டுரையில் இரண்டே வார்த்தைகளைத்தான் மாற்றவேண்டும். கடவுள் இல்லை என்று நாங்கள் சொல்வதில்லை. கடவுளைப் பற்றி நமக்கு யாதொன்றும் தெரியாது என்று தான் சொல்லுகிறோம்'' என்றார் பிராட்லா.

"உலகாயதம் என்ற கொள்கையிலே கடவுளுக்கு இடமில்லையே தவிர கடவுள் இல்லையென்று உலகாயத வாதிகள் சொல்வதில்லை. கடவுள் என்று சொல்வது எங்களுக்கு விளங்கவில்லை யென்று தான் அவர்கள் சொல்லுகிறார்கள். கடவுளைப் பற்றிய எண்ணம், கருத்து, நினைவு, நோக்கம், அப்பியாசம், அறிவு, சிந்தை, கற்பனை, இவை தங்களுக்கு இல்லை யென்றுதான் அவர்கள் சொல்லுகிறார்கள். கடவுள் என்ற வார்த்தை சப்திக்கிறதே யன்றி அதில் யாதோர் அர்த்தமும் தோனிப்பதில்லை. கடவுளை நாம் மறுக்கவில்லை. நமக்குப் புரியாததை நாம் எப்படி இல்லை யென்று மறுக்கமுடியும்? கடவுளிருப்பதை ஊர்ஜிதம் செய்கிறவர்கள் கூறும் நியாயத்தை நம்மால் கிரகிக்க முடியவில்லை. அவர்கள் கூறும் நியாயங்கள் சரியல்ல என்றே எங்களுக்குப் படுகிறது.'' என்று பிராட்லா மேலும் விளக்கினார்.

பிராட்லாவின் கொள்கைகள் அன்னி பெசண்டுக்கு உடன்பாடாயிருந்தன. இருவரும் பல்லாண்டுகள் சேர்ந்துழைத்தார்கள். ஒருவருக்கொருவர் அருந்துணையாக இருந்தார்கள். 'நேஷனல் ரிபார்மர்' பத்திரிகைக்கு அன்னி, 'அஜாக்ஸ்' என்ற புனை பெயருடன் விஷயதானம் செய்து வந்தாள். பின்னல் அதன் நிர்வாகத்திலும் பங்கெடுத்துக்கொண்டு துணையாசிரியராகவும் வேலை பார்த்து வந்தாள். விஞ்ஞான மண்டபத்திலும், பிற இடங்களிலும் அடிக்கடி பிரசங்கங்கள் செய்து வந்தாள்.

1877–ஆம் ஆு நோல்டன் பிரசுரம் என்ற ஒரு நூலை அச்சிட்டு விற்றதற்காக பிராட்லாவுடன் அன்னிபெசண்டும் கைது செய்யப்பட்டார். டாக்டர் சார்லஸ் நோல்டன் என்பவர் 1835-ஆம் ஆு அமெரிக்காவில் எழுதிப் பிரசுரித்தது அது. 'கல்யாணமான எந்தப் பெண்ணும் தன் சக்திக்கு மீறி அதிகமான குழந்தைகளைப் பெற்று அவதிப்படலாகாது. குறிப்பிட்ட அளவுக்குக் குழந்தைகள் பிறந்தவுடன், தன் புருஷனின் இச்சைக்கு உடன்பட மறுக்கவேண்டும்' என்பதே அந்தப் பிரசுரத்தில் இருந்த விஷயம். இந்தப் பிரசுரத்தை, பிரிஸ்டல் என்ற பட்டணத்தில் ஒருவன் தடபுடலாக விளம்பரம் செய்து விற்றுக்கொண்டிருந்தான். அவனைப் போலீசார் 'ஆபாசப்பிரசுரம்விற்ருன்' எனக்குற்றம்சாட்டி நியாயஸ்தலத்தில் நிறுத்தினர்கள். அவன் தான் 'குற்றவாளியே' என்று ஒப்புக்கொண்டான். 'இதில் என்ன குற்றம் இருக்கிறது? பொதுஜன நன்மையை உத்தேசித்து, குழந்தைகள் அதிகம் பெறுவது நன்மையா தீமையா என்று விவாதிப்பதில் என்ன குற்றம்? ஒரு மனிதனுக்கு அவ்வளவு கூடச் சுதந்திரம் இல்லாமலாபோய்விட்டது? பார்ப்போம் ஒரு கை,' என்று பிராட்லா துணிந்தார். நோல்டன் பிரசுரத்தை அச்சிட்டு, இன்ன தேதியில், இன்ன இடத்தில் விற்கப் போவதாக, பிராட்லாவும் அன்னிபெசண்டும் அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். அவ்விதமே அச்சிட்டு, விற்று, மார்ச்சு 24-ந்தேதிகைதுசெய்யப்பட்டார்கள். கச்சேரி வாசலில் ஜாமின் கொடுக்க ஒரு 'பட்டாளம்' காத்திருந்தது. இருவரும் ஜாமினில் வெளியே வந்தார்கள். ஜூன் 18-ந் தேதி விசாரணை நடந்தது.

ஜூரர் தலைவன் 'குற்றவாளி' என்று அபிப்பிராயம் கூறினன். இனிமேல் பிரசுரத்தை அச்சிட்டு விற்பதில்லை என்று உறுதி கொடுத்தால் விடுதலை செய்வதாக ஜட்ஜு கூறினர். இந்த நிபந்தனைமீது விடுதலை பெறுவதை குற்றவாளிகள் விரும்பவில்லை. ஆறுமாதக் காவலும், 200 பவுன் அபராதமும், விடுதலையானபின் 500 பவுன் நன்னடக்கை ஜாமீனும் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. மீண்டும் ஜாமீனில் வெளிவந்து அப்பீல் செய்யவே தண்டனை ரத்தாயிற்று.

அதன்பிறகு 'ஜனசங்கைச் சட்டம்' என்ருெரு பிரசுரத்தை அன்னிபெசண்ட் எழுதி வெளியிட்டார்.

1878–ஆம் ஆு மிஸ்டர் பெசண்டின் வக்கீலிட மிருந்து அன்னிக்கு ஒரு நோட்டீஸ் வந்தது. அன்னியுடன் வசித்து வந்த அவள் குழந்தையான மேபலை அவளது பாதுகாப்பிலிருந்து விடுவிக்கக்கோர்ட்டில் விண்ணப்பம் செய்யப் போவதாக, அதில் கண்

டிருந்தது. தேவநிந்தனையும் மத தூஷணையும் செய்பவருக்கு, குழந்தையை வளர்க்க யோக்கியதை கிடையாது என்று அந்த விண்ணப்பத்தில் கூறப்பட்டிருந்தது. அன்னிபெசண்ட், தன் வழக்கைத் தானே வாதாடினுள். ஜட்ஜுக்கு இது பிடிக்கவில்லை. வழக்கு விசாரணை நடந்து, அவள் கணவருக்கு அநுகூலமாக முடிவு கூறப்பட்டது. மேலே அதிகாரிகள் அன்னியிடமிருந்து கவர்ந்து, அவள் கணவனிடம் ஒப்புவித்தார்கள். இந்த வியாகூலத்தால் அன்னி வெகுநாள் நோயுற்றிருந்து, பிராட்லாவின் அன்பாலும் ஆதரவாலும் குணமும் ஆறுதலும் அடைந்தாள்.

குணமடைந்தபின், 'இங்கிலாந்தும் இந்தியாவும் ஆப்கானிஸ்தானமும்' என்று ஒரு சிறு நூல் எழுதி அன்னி பிரசுரம் செய்தாள். இந்தப் புத்தகத்தின் மூலமே இந்தியரின் உள்ளத்தில் அன்னிபெசண்ட் முதன்முதல் குடிகொண்டது. 1879-ஆம் ஆு எட்வர்ட் பி. அவலிவ் என்பவருடன் அன்னி பெசண்டுக்குப் பழக்கமுண்டாயிற்று. இவரிடம் நான்கு மாதம் கல்வி பயின்று, லண்டன் யூனிவர்சிட்டியில் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு எழுதி, அதில் தேர்ச்சியுமடைந்தாள். அதன்பின் அவலிவ் ஆரம்பித்த வகுப்புகளில் சேர்ந்து சயன்ஸ் பரீட்சையில் தேறி, ஆசிரியர் பத்திரமும் பெற்றுள்.

1884-ஆம் ஆு ஏப்ரல் மாதத்தில் செயிண்ட் ஜேம்ஸ் மண்டபத்தில் பிராட்லாவும் என்றி ஹைண்ட்மன் என்பவரும் சோஷலிசத்தைப் பற்றிச் சர்ச்சை நடத்தினுர்கள். ஹைண்ட்மன் பழுத்த அதேவாதி. மக்களின் பொருளாதார நிலைமையைச் சமப்படுத்தி உயர்த்த வேண்டு மென்பதே அவர் கட்சி. மக்களின் பகுத்தறிவை வளரச் செய்துவிட்டால், எல்லாம் தானே சமனடைந்துவிடும் என்பது பிராட்லாவின் கட்சி. இந்த இரண்டு கட்சிகளுக்கு மிடையே பரஸ்பரம் சிநேகபாவ மிருக்கவில்லை. அன்னிபெசண்டின் உள்ளம் அபேதவாதத்தில் இருந்தது. ஆனுல், பிராட்லாவுக்குப் பயந்து அவள் தயங்கித் தயங்கிப் பார்த்தாள். ஆனுல், 1885-ஆம் ஆு ஆரம்பத்தில் சோஷியலிஸ்ட்டுக் கட்சியின் பக்கம் சாய்ந்துவிட்டாள். அதன் பின்பு பிராட்லாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமில்லாது போனுலும் இருவரின் நட்புக்கும் யாதொரு பங்கமுமில்லாதிருந்து வந்தது.

இந்த மாறுதலுக்குப் பிறகு, அன்னிபெசண்ட் சேரிகளிலும், தொழிலாளர் மத்தியிலும் தீவிரமாக வேலை செய்து வரலானுர்.

"மக்களின் வறுமைக்கும் துன்பத்திற்கும் ஒரு முடிவில்லையா? ஏழையென்றும் பணக்காரனென்றும் என்றுமே வாழ்ந்து வரவேண்டுமா? ஒளியும் நிழலும் போல், செல்வமும் வறுமையும் தவிர்க்க முடியாதவையெனச் சிலர் சொல்லுகிருர்கள். அதை நான் நம்பமாட்டேன். அறியாமையே வறுமைக்கு வித்து. ஒழுங்கற்ற சமுதாய அமைப்பே வறுமைக்கு ஆதாரம். அறிவைக் கொண்டும், சரியான சமூக அமைப்பைக் கொண்டும் வறுமையை விரட்டமுடியும். சேரிகளிலே வசிக்கும் வயோதிகர்களின் நிலைமையை உயர்த்துவது அசாத்தியமெனத் தோன்றினுல், அங்கே யுள்ள சிறுவர்களையும் சிறுமிகளையும் நல்ல காற்றோட்ட

முள்ள இடங்களுக்கு மாற்றிக் கல்வி கற்பித்து, தொழிற் பயிற்சியும், ஊக்கமும் அளித்தால், அவர்கள் ஏன் முன்னேற முடியாது'' என்று வாதித்தாள் அன்னி பெசண்ட். சிட்னி வெப், பெர்ளுட்ஷா, யூபர்ட், ஸ்ரீமதி புளாண்ட், கிரஹாம் வாலஸ் போன்ற தோழர்களுடன் சேர்ந்து சோஷியலிசப் பிரசாரத்தைப் பலப்படுத்தி வந்தாள்.

1885-ஆம் ஆண்டு அரசாங்கத்தார் சோஷியலிஸ்டு கூட்டங்கள் நடைபெற வொட்டாமல் தடுத்தார்கள். பலர் சட்டத்தை மீறி சிறைப்பட வேண்டியிருந்தது. இறுதியில் ஜனங்களுடைய உற்சாகமேவெற்றிபெற்றது. அன்னி ஆரம்பித்த 'அவர் கார்னர்' என்ற சோஷியலிஸ்ட் பத்திரிகை அதிக செல்வாக்குடன் நடைபெற்று வந்தது. 1886-ஆம்ஆண்டு எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம். வேலை நேரத்தை எட்டுமணிக்குக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கிளர்ச்சி. இவ்விதமாக, அன்னி பெசண்ட் சோஷியலிஸ்ட் கட்சியில் இரண்டறக் கலந்து போனதால், ''நேஷனல் ரிபார்மர்'' பத்திரிகையில்பிராட்லாவுடன் தனக்கிருந்த துணையாசிரியர் பதவியை 1887-ஆம் ஆண்டு விடவேண்டியும் வந்தது.

1888-ஆம் ஆண்டு அன்னிபெசண்டின் மனதில் ஓர் எண்ணம் உதயமாயிற்று. மதபேதத்தைப் பாராட்டாமல் மக்களின் மேன்மையே பெரிதெனக் கருதி வழிபடக்கூடிய பொது ஆலயம் ஒன்று கட்டவேண்டுமென்பதே அந்த எண்ணம்.

அந்த எண்ணத்தைப் பரப்ப, அவளும் மிஸ்டர் ஸ்டெட் என்பவரும் சேர்ந்து, லிங்க் என்னும் அரையணா வாரப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார்கள். கடவுளுக்குச் சேவை செய்ய மக்கள் ஆர்வத்துடன் உழைத்து வருவதேபோல் மக்களுக்குச் சேவை செய்ய ஆங்காங்கு ஆணும் பெண்ணும் முன் வரவேண்டுமென்பதே புதிய பத்திரிகையின் கொள்கையாக அமைந்தது. இந்தக் கிளர்ச்சியின் பயனாக உபயோகிப்போர் சங்கம் ஒன்று நிறுவப் பட்டது. தொழிலாளர்களுக்கு நியாயமான கூலிகொடுத்துச் செய்யப்படாத பொருள்களை யாரும் விலை கொடுத்து வாங்கக்கூடாதென்பதே இந்தச் சங்கத்தின் வேலைத் திட்டம். இந்தச் சங்கத்தின் முயற்சியின் பயனாய், பல தொழிற்சாலைகளில் தொழிலாளரின் கூலி உயர்த்தப் பட்டது.

இறுதியாக அன்னி பெசண்ட் 1889-ஆம் ஆண்டு எச். பி. பிளாவட்ஸ்கி அம்மையாருடன் கூட்டுறவு கொண்டாள். மக்களுக்குள்ளே சகோதரத்துவத்தை [illegible]ண்டு பண்ண தியசாபிகல் சங்கம் சிறந்ததெனக் கண்டு, அந்தச் சங்கத்தில் சேர்ந்தாள். இந்தியாவே தாயகமாய் இங்கே வந்து வசிக்கலானாள். அவளுக்கும் பிராட்லாவுக்கு மிருந்த தொடர்பு யாவும் அறவே முறிந்தன.

இந்திய அரசியல் வானத்தில் காந்தி உதயமானதும், பல சிறு நட்சத்திரக் கூட்டங்கள் ஒளிமங்கியதைப் போல், அம்மையாரும் மறைந்தாள். என்றாலும், சென்னை அடையாரில் அம்மையார் ஏற்றிய விளக்கு இன்னும் பிரகாசமாய்ச் சுடர்விட்டுஎரிந்து கொண்டிருக்கக் காண்கிறோம்.

# கிழவி மனம்

ரஜனி

மாலைநேரம். தாழ்வாரத்தில் மஞ்சள் வெயில் விழுந்து எல்லாச் சாமான்களையும் தங்கம் போலப் பிரகாசிக்கச் செய்தது. நாகம்மாள் சமையலறையி லிருந்தாள். சித்தடக்கமான சரீரம். ஐம்பத்தைந்து வயதானாலும், முப்பது வயது நிரம்பியவள் போல்தான் அவள் தோற்றமளித்தாள். அவள் முகத்தில் அலுப்புத் தட்டியிருந்தது. "என்ன பொண்ணு இது! படிச்சால்தான் என்ன; ஊரிலே உலகத்திலே வீட்டுவேலை செய்வதில்லையா? எனக்குன்னு வந்து பிறந்திருக்கு! வெள்ளிக்கிழமை கோவிலுக்குப் போகணும்னால் கூட ஒய்வில்லை" என்று சலித்துக்கொண்டே, தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தாள்.

கூடத்து அறையில் நாகம்மாளின் பெண் நளினம் இருந்தாள். அந்த அறையி லிருந்த சாமான்களை அங்கு மிங்குமாக எடுத்துவைத்து அழகு பார்த்துக் கொண் டிருந்தவள், திடீரென்று சமையலறையில் புகுந்து, அடுப்பி லிருந்த உலை நீரைக் கீழே இறக்கி வைத்துவிட்டு, காப்பிக் கெட்டி லில் ஜலம் எடுத்து வைத்தாள். நளினம் சமைய லறைக்குள் சென்றதை, நாகம்மாள் பார்க்க வில்லை. சமையலறையில் பாத்திரங்கள் ஓசைப்படுவதைக் கேட்டதும், அவள் எழுந்து உள்ளே வந்தாள். நளினம், காப்பி போடுவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

"இதென்னடீ காரியம், சமைச்சுட்டுக் கோவிலுக்குப் போகணும்னு பார்க்கிறேன்..."

"போயேண்டீ, போயேன் யார் வேண்டா மென்று?"

"யாரு வேண்டா மென்கணும்...அடுப்பைக் கிளறிக் கிண்டு வந்து உட்கார்ந்துட்டயே! நீ—கொஞ்சம் ஒத்தாசை செய்தால்..."

"வந்துட்டியா! என்னாலே ஒண்ணும் செய்ய முடியாது. ராத்திரி எனக்குச் சாதம் கூட வேண்டாம். இப்போ ராமன் வருவார். அவருக்கு ஒரு டம்ளர் காப்பி கொடுப்போமின்னு போடவந்தேன்."

"அதுக்கு இந்த ரகளை எதுக்கு? உலைநீர் கொதிக்கிறது. அதிலேயிருந்து ஒரு டம்ளர் ஜலம் எடுத்துக்கப் படாதா? அதைக் கீழே இறக்கிவெச்சுட்டு என்னமோ பண்ணறயே!"

"கொஞ்சம் சும்மா இருடீ, அம்மா. இதோ ஆச்சு-நான் போறேன்..." என்று கத்திக் கொண்டே காப்பி போட்டாள் நளினம்.

என்னமோ பிராரப்தம்" என்று தலையில் அடித்துக் கொண்டே, மீண்டும் தாழ்வாரத்துக்குச் சென்றாள் நாகம்மாள். "ஊம், படிக்கவெச்சது தப்பு.

**அவள் நவநாகரிகப் பெண்கள் இரண்டு பேரின் தாய். வீட்டிலே காலேஜ் மாணவி அடிக்கும் கூத்துச் சகிக்காமல், இன்னொருத்தி வீட்டுக்குப் போனால், அங்கே நடக்கும் கோரணியோ சகிக்கவே யில்லை. அவளுக்குப் போக்கிடம்தான் எங்கே?**

இரண்டும் இரண்டாப்பை, இரண்டும் கழண்டாப்பை என்று ஆச்சு. அவர் கெடுத்த காரியம் இது. இருந்து இந்த லட்சணங்களைப் பார்க்காமல் போய் விட்டார், புண்ணியவான்'' என்று, இறந்து போன தன் கணவனை எண்ணி ஏங்கினாள் நாகம்மாள்.

அவளுக்கு இரண்டு பெண்கள். நளினம் காலேஜில் வாசித்துக் கொண்டிருக்கிறாள். நவநாகரிக யுவதி. அவள் தமக்கை விமலு பக்கத்துத் தெருவில் வசித்து வருகிறாள். கலியாணமாகி இரண்டு மூன்று வருஷங்களுக்கெல்லாம், விமலுவுக்கு மஞ்சள் அழிந்து விட்டது. கணவனின் ஞாபகமாக ஒரு குழந்தையும் ஐம்பதினாயிரம் ரூபாய் பொறுமான சொத்தும், ஒரு வீடும் அவளுக்குக் கிடைத்தன. அதை வைத்துக்கொண்டு தனிக் குடித்தனம் செய்து வருகிறாள். அவளும் படித்தவள்தான். ஆனால், காலேஜை எட்டிப் பார்க்கவில்லை. அவளுக்குச் சங்கீத ஞானமுண்டு. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு, அவள் குழந்தை இறந்துவிடவே அந்தத் துக்கம் தாங்காமல் வீட்டிலே அடைத்துக் கிடந்தாள். இப்போது துக்கத்தை மறக்கத் தூரபந்து ஒருவனின் தூண்டுதலால் தனது சங்கீத ஞானத்தை அபிவிருத்தி செய்து கொண்டிருந்தாள்.

"அடீ அம்மா, அடுப்புக் காலிடீ'' என்று கத்திக்கொண்டே வெளியே வந்தாள், நளினம். எழுந்து அவளைப் பின் தொடர்ந்தாள் நாகம்மாள். நளினம் தன் அறைக்குச் சென்றதும், மேஜையிலிருந்த புத்தகங்களை எடுத்து ஒழுங்காக அடுக்கினாள். சுவரில் இருந்த படங்களை எடுத்துத் தூசி தட்டி மாட்டினாள். வெள்ளைத் துண்டு ஒன்றை எடுத்து நாற்காலியின்மீது போட்டாள். இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த நாகம்மாளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் இருந்தது.

"இதென்னடீ கூத்து. ஒரே அமக்களமாயிருக்கு,'' என்று முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டாள்.

"கூத்துத்தாண்டீ கூத்து. ராமன் வரார் என்றேனே.''

"அது யாருடீ ராமன்? அவனுக்கா இத்தனை தடபுடல்? வசந்தசேனா மாதிரி அமக்களப் படுத்தறையே.''

"ஆமாம், வசந்தசேனை, சீதை எல்லாம் நான்தான்'' என்று நளினம் சிரித்துக்கொண்டே, ஓடிவந்து, செல்லமாகத் தாயின் கன்னத்தில் தட்டினாள்.

"அடி எழவே, என்னை எதுக்கடீ தொட்டே? நான் கோவிலுக்குப் போகணும்னு...''

"எண்டி இப்படிக் கத்தறே! அரிசியைப் போட்டுட்டுத் தொலையேண்டி. நான் அடுப்பைப் பாத்துக்கரேன். அவர் வர நாழியாச்சு'' என்று அவளும் அலுத்துக்கொண்டாள்.

"என் பாவம், இதுகளைக் கட்டிண்டு அழ வேண்டியிருக்கு'' என்று தலையிலடித்துக் கொண்டே, சமயலறைக்குள் சென்றாள் நாகம்மாள்.

சமையல் முடிந்ததும் நாகம்மாள் கோவிலுக்குப் புறப்பட்டாள். நளினியிடம் சொல்வதற்காக அவளுடைய அறைக்குச் சென்ற போது, அங்கே கும்மாளமாக அவளும் அவனும் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்

தது. அவர்தான் ஸ்ரீராமன். அவர் வந்துவிட்டார்.

"நான் சகுந்தலை வேஷம் போட்டுண்டதின் பலன் என்ன தெரியுமா மிஸ்டர் ராமன்? நாடகத்தில் நான் துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுதினேனே, அதற்குப் பதில் எத்தனை துஷ்யந்தர்கள் எனக்குக் கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார்கள் தெரியுமோ?" என்று சொல்லிக் கலகலவென்று சிரித்தாள் நளினம்.

"நீயும் பதில் எழுதுவது தானே?"

"என் துஷ்யந்தனைத்தான் நான் தினம் தினம் பார்த்துவருகிறேனே. கடிதம் எதற்கு?" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டாள் நளினம்.

"உன் துஷ்யந்தன் ஊருக்குச் சென்று, உன்னை மறந்துவிட்டால்."

"என்னிடம் கணையாழி இல்லை. அடையாளம் காட்டி ஞாபகப்படுத்த-ஆனால், நான் துஷ்யந்தனைத் தனியாக விடப்போவதாக உத்தேசமில்லையே."

"தேவடியாள், தேவடியாள்! இந்த அவந்தரையை இருந்து பார்க்காமல் அவர் தப்பித்துக் கொண்டார். படிப்புப் படிப்புன்னு குடும்பத்தைக் குட்டிச் சுவரா அடிச்சுட்டாரே!" என்று முணுமுணுத்துக் கொண்டே நாகம்மாள் வெளியேறினாள். கோவிலுக்குப் போனாள். சுவாமி தரிசனம் நடந்தது. ஆனால், மன நிம்மதிமாத்திரம் கிடையாது.

சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்ததும், நாகம்மாளுக்கு வீட்டுக்குப் போகவே மனமில்லை.

"என்ன லூட்டி! இந்தக் காலத்துப் பெண்கள் காலேஜ் படிப்புன்னு, சதா எவனோடாவது கூத்தடிக்கிறதுகள். இல்லாத போனால் சுதந்தரம், விடுதலை என்று கிளம்பி விடுகிறதுகள். மானம் லஜ்ஜை யில்லாமே, என்ன சுதந்தரம் வேண்டிக் கிடக்கு? நளினம் அடிக்கிற கொட்டம் சகிக்க முடியவில்லை... அவன் தொலையாத வரைக்கும் அங்கே போகாமே இருப்பதே நல்லது. வேண்டாம், பேசாமெ விமலு வீட்டுக்குப் போனால் போச்சு-எங்கே கிடந்தால் என்ன இந்தக் கட்டைக்கு...? விமலு நல்லபெண், குழந்தையிலே இருந்தே ரொம்ப அடக்கம். ஆனாலும் பாட்டுப் பாட்டுன்னு வரவாளோடே எல்லாம் பேசிண்டு இருப்பா. இப்பொகூடப் பாட்டுக் கத்துக்கறேன்னுதானே சொன்னாள். பாவம், துக்கம் மறைய ஏதானுமொன்னு வேணுமோல்லியோ- என் கிட்டவந்து இரேண்டீ என்று எத்தனைநாள் கூப்பிட்டிருக்கா. கலியாணமாகாத இந்தப்பொண்ணை வச்சிண்டு... சே, என்னஅமக்களம்! என்னகூத்து! இன்னிப்போதை விமலு ஆத்திலேதான் தொலைப்போமே..."

அவள் இவ்வாறு சிந்தித்தவாறே பாதை திரும்பி, விமலு வீட்டை நோக்கி நடந்தாள். 'விமலு நல்லவள்' என்ற ஜபத்தில் ஈடுபட்டிருந்தது அவள் மனம்.

அதோ, அந்த மூலை திரும்பி ஐந்து ஆறுவீடு தாண்டினால், விமலுவின் வீடு இருக்கிறது. நாகம்மாள் மூலை திரும்பித் தெருவில் நுழைந்துவிட்டாள். திடீரென்று வானம் கறுத்துப் படபட வென்று தூற்றல் போட்

டது. "அட சனியனே!" என்று சொல்லிக் கொண்டே, வேகமாக நடந்தாள். வீட்டை நெருங்கும்போதே, ஜல், ஜல் என்று சலங்கைச் சப்தம் கேட்டது. அதன்கூடவே மெல்லிய குரலில் யாரோ பாடும் சப்தம். 'நல்ல நாட்டியம்! தேவடியாள் எல்லாரும் குதிக்கிறதை விட்டுட்டா. குழந்தை பெற்ற குட்டிகள் எல்லாம் இப்போ சலங்கையைக் கட்டிண்டு தாதைன்னு குதிக்க ஆரம்பிச்சுட்டதுகள்'' என்று எண்ணிக் கொண்டே, வாசல்படியில் ஏறினாள்.

கதவு தாளிட்டிருந்தது. வாசல்புறமாக இருந்த அறையில் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பெருந்தூற்றல் படபட வென்று விழ ஆரம்பித்தது. "விமலு விமலு!" என்று கூப்பிட்டுக் கொண்டே, நாகம்மாள் கதவைத் தட்டினாள். பதிலில்லை. ஒரு நிமிஷம் தயக்கம். அப்படியே சில நிமிஷநேரம் நின்றுகொண்டிருந்தால், அவள் தொப்பலாக நனைந்துவிட வேண்டியதுதான்.

'கண்டவுடன் என் உள்ளம்
கொள்ளை கொண்ட கள்வா
கார்வண்ணனே கமலக்கண்ணா!'

என்ற பாட்டு ஒலித்தது. மழையின் படபடப்பின் ஊடே நாகம்மாள் கவனித்தாள். பாட்டும் சலங்கைச் சப்தமும், ஊன்றிக் கவனித்தாள். ஆம், விமலுவின் அறையிலிருந்துதான் இந்த ஓசை! சிறிது பிரமிப்புடன் அவள் மீண்டும் கதவைத் தட்டினாள். பதிலில்லை. திண்ணை விளிம்பில் காலை வைத்துக் கொண்டு, ஓரமாக இருந்த ஜன்னல் கம்பியைத் தாவிப்பிடித்து உள்ளே எட்டிப்பார்த்தாள். ஆம் விமலுதான்!

அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அங்கே நிகழ்ந்த காட்சியைக் கண்டதும் சுத்தவேண்டும் போல்தான் ஓர் உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. தொண்டை கரகரத்தது. ஆவேசம் மேலெழுந்துவர, கரகரப்பான குரலில் 'விமலு' என்று கத்திக் கொண்டே திரும்பினாள்.

அவள் குரல், உள்ளே ஸ்வாரஸ்யமாக பரதநாட்டியத்தில் ஈடுபட்டிருந்த விமலுவை உலுக்கிற்று. அவள் பதம் பாடிக் கொண்டே, அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தாள். விமலுவின் அசைவில் தோன்றிய பிசகுகளைச் சுட்டிக்காட்டி, அவள் அங்கங்களைத்தொட்டுச் சரியாகப் பதம் பிடிக்க, கோபாலன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் சொல்லியபடி அவள் ஆடினாள். அவன் பாடினான். அபிநயத்தில் தவறு ஏற்படும் போது அவன் திருத்தினான். அவள் மீண்டும் மீண்டும் அபிநயம் பிடித்தாள். புரியாமல் தான் தவறு இழைத்தாளோ, அல்லது அவனது ஸ்பரிச மோஹத்தில் திளைத்து, வேண்டுமென்றே தவறாக அபிநயம் பிடித்தாளோ தெரியாது. ஆனால் வெளியே கேட்ட குரல் அந்த நாடகத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது. அவள் முகத்திலிருந்த களிவெறியாட்டம் இறங்கிற்று. "யார் அது?" என்று கேட்டுக் கொண்டே வந்து, வாசல் கதவைத் திறந்தாள்.

அதற்குள்ளே நாகம்மாள் எண்ணாததெல்லாம் எண்ணிவிட்டாள். அவளுக்கு உள்ளே செல்லவேண்டுமென்ற எண்ணமே தோன்றவில்லை. மழையில் நின்று கொண்டிருக்கி

ருமே என்ற உணர்ச்சியற்று, மனம் அப்போது கண்ட காட்சியின் லாப நஷ்டக் கணக்கைப் போட்டுக்கொண் டிருந்தது.

"துக்கத்தை மறக்கச் சங்கீதம், பயிலுவதாகச் சொன்னுளே, இப்போது தேவடியாள் மாதிரி நட்டுவனிடம் நாட்டிய மல்லவா கற்றுக் கொள்கிருள்! அதுவும் அவன் தொட்டுத் திருப்புகிருன். இவள் 'உள்ளம் கவர்ந்த கள்வா' என்று கண்களை அகல விழித்துச் சிமிட்டி.....ஐயையே! என்ன அசிங்கம்!"

"அம்மா, எங்கேடீ வந்தே?" என்று கேட்டுக் கொண்டே கதவை நன்ருகத் திறந்தாள் விமலு. அவளை வெறித்துப் பார்த்துக்கொண்டே, உள்ளே நுழைந்தாள் நாகம்மாள். கதவைத் தாளிட்டுக்கொண்டு அவள் பின்னுலேயே வந்தாள் விமலு. விமலுவின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே, ரேழியைத் தாண்டிக் கூடத்துக்குச் சென்ருள் நாகம்மாள்.

"உன்னைத்தாண்டீ கேட்கிறேன்?" என்று அலுப்பும் கோபமும் மேலிட, மீண்டும் கேட்டாள் விமலு. தனது நேரத்தை வீணுக்க வந்துவிட்டாளே இவள் என்ற அலுப்பு விமலுவுக்கு.

"கோவிலுக்குப் போனேன். அப்படியே இங்கேயும் வந்துட்டுப் போகலாமேனு வந்தேண்டியம்மா" என்று சொல்லிக் கொண்டே, கூடத்து அறையில் எட்டிப் பார்த்தாள் நாகம்மாள். உள்ளே தெருப்பக்கமாகப் பார்த்துக் கொண்டு கோபாலன் நின்று கொண்டிருந்தது தெரிந்தது.

"கோயிலுக்குப் போயிட்டு வந்தையா, நளினத்தோடே சண்டை போட்டுண்டு வந்தையா?" என்று நையாண்டியாகக் கேட்டாள் விமலு.

"ஆமாம், உங்களைப் பெத்த துக்கு......"

"எங்களைப் பெத்தத்துக்கு என்னவாம்? உன் வாய் சும்மா இராது. வயசாச் சோல்லியோ, கூறுகெட்டுப் போச்சு. சனியன், ஒரு இடத்திலே கிடக்கிறதில்லே-அங்கே அவளோடே சண்டைப் பிடிச்சிண்டு, இங்கேவந்திருக்கே. இங்கே என்னுடே மாரடிச்சிண்டு...ஹூம், உன் ஜன்மம் இப்படி!...யாரை நொந்துக்கரது?"

"தெய்வத்தைத்தான்" என்று சொல்லிக்கொண்டே நாகம்மாள் சமையலறைக்குள் சென்று, ஒரு சாக்கை எடுத்துப் பிரித்துப் போட்டுக்கொண்டு படுத்தாள். அறையில் விமலுவும் கோபாலனும் பேசிக்கொண் டார்கள்.

"வயசாயிட்டாலே கொஞ்சம் தடுமாற்றம்தான், விசுக், விசுக்குனு கோபம் வரும். நீயும் எதுக்கு ஜதைகட்டிண்டு சண்டை போடறே?"

"பின்னே என்ன, இந்த இருட்டிலேயும் மழையிலேயும் என்ன தலைபோற காரியம்? அடிச்சுப் பிடிச்சிண்டு ஓடிவந்திருக்காளே! எதுக்கு?"

"என்னவோ வயசாச்சு. உன்ரகளை தான் சகிக்கல்லே."

"வயசாச்சு, வயசு! குட்டிச்சுவருக்குக் கூடத்தான் வயசு ஆயிடறது. பொண்களைப் பெத்துட்டாப்பிலே ஆச்சா? அவா மனசு தெரிஞ்சு பழகினுத்தானே பெரியவாளுக்குக் கண்ணியம், இவளாலே என் மானம் போறது."

இந்தச் சம்பாஷணை நாகம்மாள் காதில் விழுந்துகொண்டுதானிருந்தது: "ஊம், என்னாலே மானம் போறதா? இதுகளாலே என் மானம்னு போறது!" என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே எழுந்தாள். அவள் புடவைத் தலைப்பு ஈரமாக இருந்தது.

"ஏண்டியம்மா, தூங்கல்லே நீ? போர்வை வேணுமா?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தாள் விமலு. அவள் பதில் சொல்ல வில்லை. "விமலு, இங்கே வா" என்று அதட்டினான் கோபாலன். அவள் பெட்டிப் பாம்பாக அடங்கி உடனே திரும்பினாள்.

நாகம்மாள் கூடத்தி லிருந்த விளக்கை அணைத்துவிட்டு, தலைப்பை விரித்துக்கொண்டு படுத்தாள்.

'ஜல் ஜல்' என்று சலங்கைச் சப்தம் மீண்டும் கேட்க ஆரம்பித்தது. அவன் பாடினான். இப்போது வேறே ஏதோ ஒரு பாட்டு. "அது வேண்டாமே!" என்றாள் விமலு.

"பின்னே?"

"உள்ளம் கவர்ந்த கள்வா பாடுங்கோ."

அவன் சிரித்தான். அவளும் கலகலவென்று சிரித்தாள். மீண்டும் ஒரே குதூகலம். பாட்டும் கூத்தும் ஒரே அமக்களமாக இருந்தது.

நாகம்மாளுக்குச் சகிக்க முடியவில்லை. அவள் எழுந்து உட்கார்ந்தாள். அன்று மாலை நடந்த சம்பவங்கள் எல்லாம் சலனப் படம் போல் ஒன்றன்பின் ஒன்றாக அவளுக்கு ஞாபகம் வந்தன. "நளினத்தை மிஞ்சி விட்டாளே விமலு" என்ற எண்ணம். "சே-விமலு நல்லவள்..." ஆம், அப்படித்தானே சிறிது நேரத்துக்கு முன்பு வரையில் அவள் எண்ணியிருந்தாள்.

"சே அவள் நல்லவள்...அவன் என்னவோ சொக்குப் பொடி போட்டு விட்டான்...அவள்..."

'கண்டவுடன் என் உள்ளம் கவர்ந்த' என்ற பதம் காற்றில் மிதந்து வந்தது. "ஆமாம், இவள் உள்ளத்தை அவன் கவர்ந்து விட்டான்! இல்லாவிட்டால் அவன் போட்ட அதட்டலில் இவள் மிரளுவாளா! குழந்தையைப் பறிகொடுத்த துக்கத்தையும் மறந்துவிட்டுக் குதிக்கிறாளே! பேஷ், ஏதாவது சொன்னால், கலென்னு சொல்லும்; காதல்னு உளறும். நான் கர்நாடகம் தானே..."

மீண்டும் இருவரும் கல கலவென்று சிரிக்கும் ஒலி கேட்டது "சை, தேவடியாள்! ஆண்டி பெத்தது அஞ்சும் குரங்கு-' வேண்டாம், இந்தச் சனியன்களைப் பாராமெ, எங்கேயாவது இட்டலிக்கு அரைச்சுப் பிழைக்கலாம்; அப்பளாம் போட்டுப் பிழைக்கலாம். மானங்கெட்ட சனியன்கள்..."

மீண்டும் பாட்டுச் சத்தம்.

'பாலும் கசந்ததடீ, படுக்கையும் நொந்ததடீ!......'

"பேஷ் நல்ல பாட்டு—நல்ல நாட்டியம்!" என்று முணுமுணுத்தாள் நாகம்மாள்.

அவளுக்கு இதற்கு மேல் அங்கே இருக்கவே பிடிக்கவில்லை. எழுந்து இருட்டில் தட்டித் தடவிக்கொண்டே மெல்ல மெலல வாசல்படிக்கு வந்து கதவைத் திறந்தாள். எதிரே கும்மிருட்டு. பிசு பிசு வென்று தூறிக்கொண் டிருந்தது. தலைப்



# மேற்கு இந்தியாவில் -

# தேநீர் அருந்தும் நேரம்

கடற் கரையோரமாயுள்ள செழிப்பான விளை நிலங்களடங்கின குஜராத்திற்கும் பெரும்பாலும் கல் மயமாய் இருக்கும் தக்காண பீடபூமியிலுள்ள மஹாராஷ்டிரத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! சொந்த நிலங்களில் பாடு படுவதிலோ, கூலிக்கு உழைப்பதிலோ, அல்லது பட்டினங்களில் வேலை செய்வதிலோ இந்நாட்டு மனிதர்கள் தேர்ந்தவர்கள்; உழைப்பாளிகள்.

குஜராத்திகளுக்கும், மஹாராஷ்டிரர்களுக்கும் உள்ள அநேகம் பழக்க வழக்கங்களில் வித்தியாசமே கிடையாது. காலையில் குளித்தவுடன் ஒரு கோப்பை சூடான தேநீர் அருந்துவது இவர்கள் இருவருக்கும் உள்ள ஒரு பொது வழக்கம். ஓர் சைனாப் பாத்திரத்தில் தேயிலைக் கஷாயத்தைப் போட்டு அவ்வவர்கள் ருசிக்குத் தகுந்தபடி பாலையும் சீனியையும் தனித் தனியே கோப்பையில் கலந்து கொள்வார்கள். அநேகமாய் மத்தியானங்களிலேயே, அன்றாட முதல் உணவு உண்ணப்படும் கிராமங்களில் உள்ளவர்கள் காலைத் தேநீர்ப் பானத்தோடு கொஞ்சம் பழங்களும் உண்ணுவது வழக்கம்.

மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேலும் கீழும் உள்ள இந்தப் பிரதேசங்களில் இந்தியாவின் மற்றப் பிரதேசங்களைப் போலவே புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை அதிகமாக விரும்பப்படுகிறது.

# ப்ரூக் பாண்ட

"இரு இலையும் ஒரு மொட்டும்"

# புத்தகங்கள்

| | | |
|---|---|---|
| பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள் | காந்திஜி | 2-8 |
| நமது மொழிப் பிரசினை | காந்திஜி | 2-8 |
| கதைகள் | ராஜாஜி | 4-8 |
| கட்டுரைகள் | ராஜாஜி | 4-8 |
| வீட்டு வைத்தியர் | டாக்டர் ராஜன் | 7-8 |
| அருமைப் புதல்விக்கு | எஸ். சத்தியமூர்த்தி | 5-0 |
| வசந்தன் | எஸ். வி. வி. | 4-0 |
| கதைக் கோவை | 4-ம் புத்தகம் | 10-8 |
| மணல் வீடு | சி. சு. செல்லப்பா | 1-0 |
| உஷா | சரத்சந்திரர் | 1-8 |
| மலரும் மாலையும் | கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | 6-0 |

கிடைக்குமிடம்:

சக்தி காரியாலயம்

சென்னை : மதுரை : கோயமுத்தூர் : திருநெல்வேலி



வாழ்க்கையின் வெற்றி




ஸ்திரீகளுக்கு
ஏற்படும் சகலவித
கர்ப்பாசய நோய்களை
நீக்கி வாழ்க்கையில் வெற்றியை
அளிக்கக்கூடிய சிறந்த டானிக்

அருணா

ஆயுர்வேதாஸ்ரமம்
மதராஸ்

யை மடித்துத் தலையில் போட்டுக் கொண்டாள். எங்கே செல்வது?

கோவிலில் அர்த்தஜாம பூஜை மணி டணார் டணார் என்று ஓசை யிட்டது.

"பகவானே நீதான் காப்பாத் தணும்" என்று படியிலிருந்து இறங்கி வீதியில் நடந்தாள். அவள் மனத்திலிருந்த பாரம் குறைந்தது. மேகத்தின் பாரம் குறைந்ததும் மழை பொழிவது போல, அவள் உள்ளத்திலே ஒரு குளிர்ச்சி பிறந்தது. நரகத்தி லிருந்து மீண்ட ஆத்மாவைப் போல, அவள் விடுவிடென்று அந்த அந்தகாரத்தைக் கிழித்துக் கொண்டு நடந்து மறைந்தாள். எங்கே? அதுதான் தெரிய வில்லை.

*

## ஹிட்லர் சமாசாரம்

1960-ஆம் வருஷம் அமெரிக்காவில் பின்வரும் சம்பாஷணை ஒன்று நடக்கப் போவதாக, ஓர் அமெரிக்கப் பத்திரிகை கூறுகிறது:

"அப்பா! இந்த ஹிட்லர் செத்தானு, இல்லையா? அவன் உண்மை தான் என்ன?"

"அவனைப்பற்றி எத்தனையோ கதைகள் கிளம்பிவிட்டன. முதலில் அவன் செத்தான் என்றார்கள். பிறகு, அவன் ஸ்பெயின், ஜப்பான், அர்ஜெண்டினு, அயர்லாந்தில் எல்லாம் ஓடி ஒளிந்ததாகச் சொன்னார்கள். ஆனால், சில நாளைக்குமுன் சிக்காகோவில் டானெர்பிளிட்ஸ் என்ற இடத்தில் ஒருவன் செத்தான். அவன்தான் ஹிட்லர்."

"அப்படியா? பதினஞ்சு வருஷமாய் அவன் நம்மிடையே வாழ்ந்தும், அவனை யாரும் கண்டுகொள்ள வில்லையா?"

"இல்லை. அவன் பெயரைத்தான் மாற்றிக் கொண்டானேயல்லாமல், குணம் மாறவில்லை. தன் வழக்கப்படியே, ருஷ்யாவைத் திட்டினன்; பிரிட்டனைத் திட்டினன்; அமெரிக்க சர்க்காரைத் திட்டினன்; உலகத் தையே திட்டினன். இப்படித் திட்டிக்கொண்டே அவன் வாழ்ந்ததால், அவனும் ஒரு சாதாரண அமெரிக்கன்தான் என்று எல்லாரும் எண்ணி விட்டார்கள்; சந்தேகமே கொள்ள வில்லை. இதுதான் விஷயம்."

## ஷாவும் பூவும்

ஒரு பிரபல எழுத்தாளர், ஜார்ஜ் பெர்னார்ட் ஷா அவர்களின் வீட் டுக்கு ஒரு சமயம் போனார். பேராசிரியரான ஷாவின் மேஜையில், பூக்கள் பறித்து வைத்த கிளாஸ் ஒன்றும் இல்லாதது, எழுத்தாளருக்கு ஆச்சரியமா யிருந்தது.

"அடடா! மலர்கள் என்றால், உங்களுக்குப் பிடித்தமாயிருக்கும் என்றல்லவா நான் எண்ணினேன். உங்கள் மேஜையில் மலரையே காணேமே!" என்றார் எழுத்தாளர்.

"உண்மைதான், மலர்களை எனக்கு நன்றாய்ப் பிடிக்கும். மலர்களை மாத்திர மல்ல; குழந்தைகளையும்தான் எனக்கு நன்றாய்ப் பிடிக்கும். இதற்காக, குழந்தைகளின் மென்னியைப் பிடித்து நறுக்கி, அந்தத் தலை களை என் மேஜைமேல் நான் கொணர்ந்து வைத்துக் கொள்வ தில்லை" என்று வெடுக்கென்று ஷா பதில் சொன்னார்.

# புத்தக உலகம்

**கதைக் கோவை, தொகுதி நாலு:** வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. டெம்மி 1×8. 514 பக்கங்கள். விலை ரூ 10—8—0.

"உலகத்து மொழிகள் எல்லாவற்றிலும் புதிய இலக்கிய வகைகளில் சிறு கதை சிறப்பாக விளங்குகிறது. தமிழ் நாட்டில் சிறுகதை வளர்ச்சி வியத்தற் குரியது. அளவிலும் அழகிலும் தமிழ்ச் சிறு கதைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன..." என்று இந்தத் தொகுதியின் முகவுரையில் மேயர் ஸ்ரீ ராதாகிருஷ்ண பிள்ளை சொல்லுகிறார். அதை இதிலுள்ள எழுபத்தைந்து சிறு கதைகளும் மெய்ப்பிக்கின்றன. வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்தும் படம் பிடித்துக் காட்டுவதைபோல் அமைந்துள்ளன இந்தக் கதைகள். ஒவ்வொரு கதையிலும் ஒவ்வொரு விதமான நடை அழகும், புதுப்புதுக் கருத்துகளும் வெவ்வேறு வகையான வர்ணனைகளும், விதம் விதமான சுவைகளும் விரவி நிற்கின்றன. நாம் தினசரி காணும் நிகழ்ச்சிகளுக்கு உருவம் கொடுத்து, உயிர்ச் சித்திரங்களாக்கி யிருக்கிறார்கள் இதிலுள்ள பல கதைகளின் ஆசிரியர்கள். மனிதனுடைய மனோதத்துவத்தையும், உணர்ச்சி வேகத்தையும், குண பேதங்களையும் ஆராய்ந்து, சொல்லாலே உருவாக்கி யிருக்கிறார்கள் வேறு பலர். முக்கியமாய்ச் சில கதைகளைக் குறிப்பிடலாம். ர. அய்யாசாமி எழுதியுள்ள 'இன்ப வேட்கை' என்ற கதை, 'கடவுள் எங்கே யிருக்கிறார்?' என்ற உண்மையை, அபூர்வமான முறையில், அருமையான நடையில் சித்தரிக்கிறது. கு. பா. கல்யாணராமனின் 'அறுந்த காற்றாடி'யின் கதை அமைப்பும், சொல் திறமையும் குறிப்பிடத் தக்கன. 'பெண் ஜன்ம'த்தில் ஆர். எஸ். ருக்மிணி ஒரு படித்த பெண்ணின் மனோ பாவத்தை-ஏக்கத்தை-புலப்படுத்துகிறார். ச. து. சு. யோகியார் கதையின் நடையும், வர்ணனையும் சிறந்திருக்கின்றன. சுற்றுப்புறக் காட்சிகளை வைத்துக்கொண்டு, சம்பவங்களைச் சிறப்பாகக் கையாண்டு, ஓர் இனிய ஹாஸ்ய சித்திரம் தந்திருக்கிறார் நண்பர் சாவி. ஆசாரத்துக்கும் ஆசைக்கும் நடக்கும் போராட்டத்தை விவரிக்கிறது கே. எஸ். ஜம்புநாதனின் கதை. ஹரிணியின் 'தெய்வப் பெண்' ஒரு ஜீவ சித்திரமாகும். நெஞ்சை அள்ளும் நடையில், அதற்கு உருக் கொடுத்திருக்கிறார் ஆசிரியர். 'இந்திராணி' 'பெரிய இடத்துச் சமாச்சாரம்,' என்ற கதைகளும் இங்கே குறிப்பிடத் தக்கவை. பொதுவாய் மற்றுமுள்ள எல்லாக் கதைகளுமே ஓவ்வோர் அம்சத்தில் சிறந்து விளங்குகின்றன. தமிழ் நாட்டின் சிறுகதை வளர்ச்சியின் சரித்திரத்திலே அல்லயன்ஸ் கம்பெனியாரின் இந்தக் கதைக் கோவைகள் ஓர் உயர்ந்த ஸ்தானம் பெறும் என்று உறுதியாகக் கூறலாம். முந்திய மூன்று தொகுதிகளுக்கும் கிடைத்த ஆதரவைப் போலவே, இதற்கும் தமிழ்நாட்டில் பூரண ஆதரவு கிடைப்பது நிச்சயமாகும்.

**நாடக ராணி (சிறுகதைகள்):** ஆசிரியர்: பிரேம்சந்த். மொழி பெயர்த்தவர்: கா. ஸ்ரீ. ஸ்ரீ. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலை, சென்னை. டெம்மி 1×8. 76 பக்கங்கள். விலை ரூ 1-4-0.

ஹிந்தி சிறுகதை யுலகில் பெயர் பெற்ற பிரேம் சந்தின் ஏழு சிறுகதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. நாடகத்தில் நடிக்கும் ஒருத்தியின் தியாக புத்தியைச் சித்தரிக்கும் 'நாடக ராணி' என்னும் கதையும், ஆளைப் பொறுத்துத் தான் மனிதனின் ரசிப்புத் தன்மை தோன்றுகிறது என்ற உண்மையை விளக்கும் 'ரசிகர்' என்ற கதையும், படித்த பெண்களின் தான்தோன்றித் தனமான

வாழ்க்கையினால் உண்டாகும் தீமைகளை விவரிக்கும் 'மிஸ் பத்மா' என்ற கதையும் சிறந்திருக்கின்றன. 'ரகசியம்,' 'உண்மை' என்ற கதைகளும் குறிப்பிடத்தக்கவை. இனிய தமிழ் நடையில் மொழிபெயர்த் திருக்கிறார் நண்பர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

**ஸ்தலத் தேவாரங்கள்:** வெளியிட்டோர்: தருமபுர ஆதினம், மாயவரம். இலவச வெளியீடுகள்.

தருமபுர ஆதினத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணிய தேசிகரின் திருவுளத்தின்படி ஆதீன நிர்வாகிகள், சிதம்பரம், திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை ஆகிய தலங்களின் தேவாரப் பதிகங்களைத் தனித்தனி சிறு சிறு நூல்களாக வெளியிட்டிருக்கிறார்கள். அந்தந்தப் பதிகங்களுடன், அந்தந்தத் தலங்களின் வரலாற்றுக் குறிப்புகளும், ஆதினத் தலைவருடைய படமும் சேர்க்கப் பட்டுள்ளன. ஆவணி மூலத் திருநாள், தட்சிணாமூர்த்தி திருவருட்பா என்ற இரு சிறு நூல்களும் இந்தத் தொகுதியில் சேர்ந்துள்ளன. இம்மாதிரி அழகிய சிறு நூல்களை, இலவசமாக வெளியிடும் ஆதீனத்தின் சைவப் பற்றும், தமிழ்ப் பணியும் போற்றத் தக்கன.

**போதனைக் கருவி மொழி:** ஆசிரியர்: ஸ்ரீ. அகர்வால். மொழிபெயர்த்தவர்: கா. திரவியம். வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி. கிரவுன் 1×8. 53 பக்கங்கள். விலை ரூ 1—0—0.

இப்போதுள்ள கல்வி முறையைப் பலமாகக் கண்டிக்கிறார் ஆசிரியர். தாய்மொழி மூலம் கல்வி போதிப்பது தான் சிறந்தது என்பதற்குத் தக்க காரணங்கள் காட்டி வாதிக்கிறார். தாய் மொழிக் கல்வியைத் தடை செய்பவர் கூறும் சாக்குப் போக்குகளுக் கெல்லாம் தக்க சமாதானம் கூறுகிறார். இந்தச் சிறு புத்தகத்தை மகாத்மா காந்தியின் அரிய முன்னுரை யொன்றும் அணி செய்கிறது.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.** ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலையம், ராமச்சந்திரபுரம், திருச்சி. கிரவுன் 1×8. 31 பக்கங்கள். விலை அணா 7.

கவிமணியின் வரலாற்றைச் சுருக்கமான அளவில், ஆனால் விளக்கமாக, எழுதியிருக்கிறார் ஸ்ரீ பாரதியார். கவிமணியின் குணாதிசயம், அவர் சிறு வயதிலேயே கவிபாடியது, தமிழாசிரியராயிருந்தது, பாரதியோடு அறிமுகம் ஆனது, கவிமணியின் கொள்கைகள், அவரைப் பொன்னாடை யளித்துக் காரைக்குடியில் போற்றியது, அவருடைய நூல்கள் முதலியவிவரங்களை யெல்லாம் சுவை ததும்பச் சொல்லிக் கொண்டு போகிறார். கவிமணியின் கவிமலர்கள் சில இந்தச் சிறு நூலில் இடம் பெற்றுள்ளன.

**ராஜா சாண்டோ:** ஆசிரியர்: டி. வி. ராம்நாத். வெளியிட்டோர்: பேசும் படம் காரியாலயம், தியாகராயநகர், சென்னை. கிரவுன் 1×8. 111 பக்கங்கள். விலை ரூ 2.

சினிமா உலகில் புகழ் பெற்ற டைரெக்டரா யிருந்த ராஜா சாண்டோவின் வாழ்க்கையைச்சித்தரிப்பது இந்தப் புத்தகம். ராஜா சாண்டோவின் இளமைப் பருவம், அவர் சென்னைக்கு வந்து அவதியுற்றது, பின்பு ஊரூராய்ச் சுற்றியது, தேகப்பயிற்சிக் காட்சிகள் நடத்தி அதன் மூலம் வயிறு வளர்த்தது, கடைசியில் சினிமாவிலே புகுந்தது முதலிய எல்லாவற்றையும் சுவாரஸ்யமான கதைபோல் ஆசிரியர் எழுதியுள்ளார்.

**லிப்கோ இந்திய சரித்திரச் சுருக்கப் பொற்றுணைவன்:** ஆசிரியர்: ஆர். ஸ்வாமிநாத ஐயர். வெளியிட்டோர். திவிட்டில் ப்ளவர் கம்பெனி, விழுப்புரம். விலை ரூ 1—9—0.

உயர்தரப் பாடசாலை மாணவர்களுக் குரிய இந்திய சரித்திரப் பாடங்களை இந்தப் புஸ்தகத்தில் கேள்வியும் பதிலுமாக அமைத்திருக்கிறார் ஆசிரியர். இந்தியாவின் பூர்விகக்

குடிகளிலிருந்து சிப்பாய்க் கலகம் வரையில் உள்ள சரித்திர நிகழ்ச்சிகள் 484 கேள்விகளில் அடக்கப்பட்டுள்ளன. தேசப் படங்கள், வம்சாவளி, இந்தியச் சட்டங்கள், எஸ். எஸ். எல். சி. பரீட்சையின் கேள்வித் தாள்கள், இன்னும் மாணவர்களுக்கு அவசியமான பல குறிப்புக்கள் ஆகிய விவரங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

**சர்த்னகீதம்**: ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: பாரத சக்தி நிலையம், புதுவை. டெம்மி 1×8. 100 பக்கங்கள். விலை ரூ. 2.

யோகியார் இயற்றிய 50 கீதங்கள் இந்த நூலில் அடங்கியுள்ளன. பாடல்கள் அனைத்தும் வர்ணமெட்டுடனும், பொருள் குறிப்புடனும் அச்சிடப்பெற்றிருக்கின்றன. உயர்ந்த வேதாந்த தத்துவங்கள் அடங்கியுள்ள இந்தத் தமிழ்க் கீர்த்தனைகள், தமிழிசையைப் பரப்ப விரும்புவோருக்குப் பெரிதும் பயன்படக் கூடியவை.

**கீதாஞ்சலி**: ஆசிரியர்: ரவீந்திர நாத் டாகுர். மொழிபெயர்த்தவர்: வி. ஆர். எம். செட்டியார். வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சி. கிரவுன் 1×8. 159 பக்கங்கள். விலை ரூ. 2—8—0.

கவி டாகுரை உலகம் போற்றச் செய்த நூல் கீதாஞ்சலி. அந்த ஒப்பற்ற நூலுக்காகத்தான் அவருக்கு 1913-ஆம் ஆண்டு நோபல் பரிசு அளிக்கப்பெற்றது. அத்தகைய சிறந்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார் நண்பர் வி. ஆர். எம். செட்டியார். டாகுரின் ஆங்கிலக் கீதாஞ்சலியின் மொழி பெயர்ப்பு இது. உபநிஷத தத்துவங்களை இந்தக் காலத்துக் கேற்ற முறையில் வெளியிடுகிறார் கவிஞர். அற்புதமான உவமைகளும் சிறந்த வர்ணனைகளும், கற்பனைத் திறனும் செறிந்து விளங்குகின்றன கீதாஞ்சலியில். தெள்ளிய, இனிய தமிழ் வசன நடையில் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது.

**Cold Rice** (ஆங்கிலம்). ஆசி கே. நாகராஜன். வெளியிட்டே சக்தி காரியாலயம், சென் கிரௌன் 1×8 பக்கம் 163. விலை ரூ

வாழ்க்கையின் பல பட்ட கோ களையும், நீதி புகட்டுகிற முன லன்றி முழு ஈடுபட்டோடும் அநுதா தோடும், வெகு சுவையாகச் சித் கும் பன்னிரண்டு சிறு கதை இதில் அடங்கியிருக்கின்றன. க கள் அனைத்துமே மிக இனிய மு யில் இயன்றுள்ளன; படித்து ரசிக தக்கவை.

**மலரும் உள்ளம்**: (கவிதை) இ றியவர்: அழ. வள்ளியப்பா. வெ யிட்டோர்: புத்தக நிலையம், திரு கிரௌன் 1×8. பக்கம் 52. அணு 12.

குழந்தைகளுக்கான பாட்டுக் தமிழில் அபூர்வம். இந்தக் குறை போக்க இந்த நூலின்மூலம் ஆசிரி முயன்றுள்ளார். இந்தப் புத்தகத் லுள்ள 23 குழந்தைப் பாட்டுக்களு குழந்தைகளின் சுவைக்கேற்றவை யாய், அவர்களின் உள்ளங்கவரக்க யவையாய், எளிய நடையில், இனி சந்தங்களில் அமைந்திருக்கின்றன.

**மணல் வீடு**: ஆசிரியர்: சி. செல்லப்பா. வெளியிட்டோர்: சுதே மித்திரன் வெளியீடு, சென்னை. பனை உரிமையாளர்: ஜோதி நிலை திருவல்லிக்கேணி, சென்னை. கிர 1×8. பக்கங்கள் 148. விலை ரூ 1.

இந்தத் தொகுதியில் 16 சிறு க கள் இடம் பெற்றிருக்கின்றன. க கள் மனித உணர்ச்சிகளை விளக் சித்திரங்களாக அமைந்துள்ள நடையும் கதைப் போக்கும் அ பாய் இருக்கின்றன. 'புதியவ 'மணல்வீடு', 'ஒரு பழம்', 'தா 'வந்தே மாதரம்' முதலிய கதைகள் முக்கியமாய்க் குறிப்பிடத் தக்கன.

—க. சோமசுந்தரம்.

# காந்திஜீ நூல்கள்

●

## நமது மொழிப் பிரசினை

பாரத நாட்டுக்கு ஒரு பொது மொழி வேண்டும். தாய்பாஷை தான் அந்தந்த மாகாண பாஷையாக இருக்க வேண்டுமென்ற கட்டுரைகள், பிரசங்கங்கள், இன்னும் பாஷை சம்பந்தமான கட்டுரைகளும் அடங்கியிருக்கிறது.

அ. லெ. நடராஜன் மொழிபெயர்ப்பு

ரூ. 2-8-0 — தபால் செலவு தனி

## பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்

யுத்தகாலத்தில் காந்திஜீ, பிரிட்டிஷ், அமெரிக்க நிருபர்களுக்கு அளித்தபேட்டி விபரங்கள், பிரசங்கங்கள், கட்டுரைகள் அடங்கியது. விறுவிறுப்பான புத்தகம்.

அ. லெ. நடராஜன் மொழிபெயர்ப்பு

ரூ. 2-8-0 — தபால் செலவு தனி

காந்திஜியின் பிறந்ததின விழாவை முன்னிட்டு, மேற்கண்ட இரண்டு நூல்களுக்கும் ரூபாய் நாலரை. அக்டோபர் 31உ வரை முன்பணம் அனுப்புபவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்.

# ராஜாஜீ நூல்கள்

●

| | |
|---|---|
| கதைகள் | ரூ. 4-8-0 |
| கட்டுரைகள் | ரூ. 4-8-0 |
| அறநூல்கள் | (அச்சில்) |

தபால் செலவு தனி

**புதுமைப் பதிப்பகம்**
லிமிடெட்
காரைக்குடி

# ஆஸ்த்மா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்



இன்னுமா ஆஸ்த்மா ?

உங்களை இன்னமும் ஆஸ்த்மா பிடித்தால் சீக்கிரம் குணம். நிச்சயம் சொஸ்தம் என்று கூறுகிற போலிகளை ஏன் நம்புகிறீர்கள் ?

ஸ்வாஸஹரி ஆஸ்த்மாவுக்கு டாக்டர்கள் ஔஷதம், மேல் பூச்சிகளை மட்டும் நிவர்த்தித்து அடிப்படையான காரணங்களை விட்டு வைப்பதல்ல. முதல் டோஸிலேயே இழுப்பும், மூச்சுத் திணறலும் நின்றுவிடும். நல்ல தூக்கம், நன்றாக சாப்பிட்டு ஜீரணமும் ஆகும். நாளடைவில் ஆரோக்கியம் பெற்று சுவாஸப்பை பலமடைந்து ஆஸ்த்மா ஒரேயடியாய்த் தொலைந்து போகும்.

3 அவு., 6 அவு., 12 அவு., பாட்டில்கள் முறையே ரூ. 3-6, ரூ. 5-12, ரூ. 10-க்கு எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சென்னை ஸ்டாகிஸ்டுகள் : (1) அப்பா அண்டு கோ, சைனா பஜார், (2) அமிருத் ரத்னாகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

தயாரிப்பவர்கள் :

டாக்டர் புரோஹித்
பார்மஸி
கோலாப்பூர்




**புரோகித்ஸ் ஸ்வாஸஹரி**

# ஜோதி புதிய வெளியீடு

**தீனக்குரல்** (நாவல்) ரூ. 1—0—0

ரா. வெங்கடாசலம் எழுதிய உள்ளத்தை உருக்கும் கதை. ஓர் ஏழைக் குடும்பத்தின் இன்னல்கள் நிறைந்த வாழ்க்கையின் தீனக்குரல் இது.

**மாய சந்யாசி** ரூ. 1—0—0

ஆண்டன் செகாவ் எழுதிய வாழ்க்கைத் தத்துவம் நிறைந்த நாவல். ஸிரியா, எகிப்து, பாலைவனங்களில் உலவும் ஓர் மாய உருவம், விண்ணையும் மண்ணையும் தொட்டு நின்றது. அது என்ன? ரா. ஸ்ரீ. தேசிகன் மொழிபெயர்ப்பு.

**உஷா** (புதிய பதிப்பு) ரூ. 1—8—0

சரத்சந்திரர் எழுதிய நாவல் பழைமைக்கும், புதுமைக்கும் நடக்கும் போராட்டத்தை வெகு அழகாக ஆசிரியர் சித்திரித்திருக்கிறார்.

**மணியோசை** ரூ. 0—8—0

ஜப்பானியக் கதைகள் 'புதுமைப் பித்தன்' மொழிபெயர்ப்பு. கீழ்நாட்டு இலக்கியத்தில் ஜப்பானின் வளமை எப்படி இருக்கிறது என்பதற்கு இந்த நூல் ஒரு உதாரணம். பயங்கர நிகழ்ச்சிகளும், பேய்களின் நடமாட்டங்களும் நிறைந்த கதைகள். இது சர்வதேசக் கதை மலர் 13.

விவரங்களுக்கு

**ஜோதி நிலையம்**

திருவல்லிக்கேணி :: சென்னை

# CIBOL சைபால்

(ரிஜிஸ்டர்டு)

முகப்பரு, சேத்துப் புண், சொறி, சிரங்கு, வேனல் கட்டி தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து

**எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்**

தயாரிப்பவர்கள் :

**THE SOUTH INDIAN Mfg. Co., MADURA**

சென்னை நகர் & ஆந்திரா பிரதேசத்திற்கு ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், 155, நைனியப்ப நாயக்கன் தெரு, பி.டி. மதராஸ்

மைசூர் சமஸ்தானம் :— சேஷ மஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி

நைஜாம் சமஸ்தானம் :— சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ் ஸகந்திராபாத்

# சக்தி வெளியீடுகளில் சில

| | | ரூ. அ. |
|---|---|---|
| அரசியல் | வெ. சாமிநாத சர்மா | 6—0 |
| புதிய சீனா | ,, | 6—8 |
| காந்தியும் விவேகானந்தரும் | ,, | 1—12 |
| காந்தியும் ஜவஹரும் | ,, | 0—8 |
| மானிட ஜாதியின் சுதந்திரம் (இங்கர்சால்) | ,, | 1—0 |
| சோவியத் ருஷ்யா (2-ஆம் பதிப்பு) | ,, | (அச்சில்) |
| காய்கறித் தோட்டம் | மு. அருணாசலம் | 5—0 |
| திருமலை முருகன் பள்ளு ராப்பர் | ,, | 2—0 |
| ,, காலிகோ | | 2—8 |
| நிழலருமை வெய்யிலிலே | ,, | 1—4 |
| காற்றிலே மிதந்த கவிதை | ,, | 1—0 |
| இந்தியா அடிமையானது ஏன்? (டால்ஸ்டாய்) | ,, | 0—4 |
| சத்திய வேட்கை (ஆலிவ் ஷ்ரீனர்) | ,, | 0—6 |
| மகாகவி பாரதியார் | வ. ரா. | 3—0 |
| பாரதியார் சரித்திரம் | செல்லம்மா பாரதி | 2—0 |
| சூரிய நமஸ்காரம் | திருவேதி | 1—0 |
| கதைகள் (டால்ஸ்டாய்) | | (அச்சில்) |
| ருஷ்யக் கதைகள் | சபரிராஜன் | 4—8 |
| இதுவா சோஷலிஸம் (மசானி) | | (அச்சில்) |

தபால் செலவு தனி

## சக்தி காரியாலயம்

சென்னை :: மதுரை

கோயமுத்தூர் :: திருநெல்வேலி

# இந்தியத் தேயிலையில் மிகச் சிறந்தது!



மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.




# லிப்டன்ஸ் தேயிலை பெண்

**நேர்த்தியான இந்திய தேயிலை**

LTK 84 G


லிப்டன் தேனீர் அருந்துகையில்

ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்



பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்கநகை வியாபாரிகள்
கோயமுத்தூர்




# ஆகாரவகை அதிக
## விலையுள்ளதாக இருக்கிறது

ஆனாலும் எப்பொழுதும் கிடைக்கக் கூடியதும் மலிவானதும் ஒன்று இருக்கிறது. அதுதான் டீ. யுத்தத்தால் ஏற்படும் கவலைகள் எதுவாகிலும்— ஆகாரம், எரிதுரும்பு, துணி வகை, நீங்கள் எப்பொழுதும் நன்கு தயாரித்த ஒரு கோப்பை டீ அருந்தி குஷி பெறலாம். நீங்கள் களைப்புற்றோ, கவலையுடனோ இருந்தாலும் சரி ஒரு கோப்பை டீ அருந்துங்கள். அது கிளர்த்தும், ஆனால் கெடுதல் செய்யாது. அதை ஒரு நண்பனாகக் கருதி எப்பொழுதும் உங்களுடன் வைத்திருங்கள். அதி காலை முதல் இரவு வெகுநேரம் வரை எந்த சமயமும் நீங்கள் டீ அருந்த சித்தமாய் இருப்பீர்கள்.



இந்தியன்
ட
சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IX 240TM


Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd.,
(Shanti Press, 115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan